www.tamilarangam.net

# SUVADIKAL சுவடுகள்

A Tamil Monthly from Norway




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவளும் நானும்

*நயினை குலம்*



இரத்தவிடியல்களுடன்
நாட்கள் நகரும்.
இதோ ஒருவன்
கைகளால் நடக்கிறான்
இந்த மண்ணின் மைந்தன்
இவன்தானோ!

இருண்ட உள்ளத்தின்
சிவந்த வடுக்களைத்
தடவிப் பார்க்கிறேன்
இரத்தக் கசிவுகள்
அந்நியர் வரும்வரையில்
அமைதி சுமந்துநின்ற
அன்றைய நாட்களுக்கு
அழைத்துச் செல்லும் நினைவுகள்....

இரவல் கூட்டில்
உறவு கொண்டாடிய
குயிலின் குஞ்சினை
காகம் விரட்டியபோது -
கண்டும் காணாமலிருந்தேன்.
கல்லெடுத்து விரட்டியவள்
நீயல்லவா!
கனிந்த உன் இதயம்
கருங்கல்லாய் எப்போது மாறியது?
பூவைப் பறிப்பதே
பாவமென்றவள்
பூகம்பமாய் எதற்காக மாறினாய்?

செம்மண் புழுதியில்
சிவந்த கால்களுடன்
சிறகடித்துப் பறந்தவளா -
செங்குருதி உடல்நனைக்க
விழுப்புண் சுமந்து
வீரமரணம் அடைந்தாய்!

வீரம் மானம் காதலில்
கடைசி மட்டுமே எனக்கு
கண்ணில் தெரிந்தது.
முதலிரண்டிற்காக
மூச்சையே கொடுத்துவிட்டாயே!

எரிந்த கூரைகள்
இடிந்த வீடுகள்
அகால மரணத்தில்
அழுகிப்போன உடல்கள்
நானும் பார்த்திருக்கிறேன்
உனது விழிகளில் மட்டும்
எங்கிருந்து இந்தச் செந்நிறம்!

பந்தபாசங்களைத்
தூக்கி எறியமுடியாமல்
பாதியிலேயே
தந்தையாகிவிட்டேன்.
கொள்கைக்காக உனக்கு
கொள்ளியிட வைத்துவிட்டாயே!

அடிமை வாழ்விற்கு
முடிவு வரும்வரை
இன்னொரு அடிமையை
உற்பத்தி செய்வதில்
உடன்பாடில்லையென்று
உரைக்காமல் உரைத்துவிட்டாயே!!!

*(சகோதரி சோதியின் நினைவாக)*

www.tamilarangam.net

இந்த இதழில் யமுனா ராஜேந்திரன், பூகம்பன், ராமன், ஜீவிதன், அருவசிருங்காரன், சமுத்திரன், அரவிந்தன், சிவசேகரம், தங்கா, முல்லை அமுதன், யோகி, நயினை குலம், சோலைக்கிளி, அயலான், ஆதவன், திலீபன், விக்கி மற்றும் சிலர்.

# சுவடுகள்

SUVADUKAL

A Tamil Monthly from Norway

'Suvadukal' - Herslebsgate 43, 0578 Oslo 5, Norway


சுவடுகள்
மாத இதழ்

ஆசிரியர் குழு
துருவபாலகர்

ஸ்தாபிதம்
புரட்டாதி'88

சந்தா
பன்னிரு இதழ்கட்கு
300 குறோணர்கள்

தொடர்புகள்
Herslebsgt 43,
0578 Oslo

அட்டைப்படம்
சாமிஸ்க் இனத்தவரது
ஒலிம்பிக் சுவரொட்டி


அடுத்த இதழ் மேலும் சில நோர்வேவாழ் தமிழ்க் கவிஞர்களது கவிதைகளைச் சுமந்துவர உள்ளது. பானுபாரதி, மைத்திரேயி, ஜீவிதன், துஷ்யந்தன், மகேன் போன்றோரது படைப்புகள் வரும்.

கடந்த இதழில் இடம்பெற்ற யானை, பாலை ஆகிய கவிதைகளில் வரிகள் சில ஒழுங்கற்ற முறையில் அச்சுக் கோர்க்கப் பட்டிருந்தன. இதற்காகக் கவிஞர்களிடம் மன்னிப்புக் கோருகிறோம். பாலையின் இறுதிப் பகுதி அடுத்த இதழில்.

சுவடுகளுக்கான உங்கள் கடிதங்களைத் தயவுசெய்து சுருக்கமாக எழுதுங்கள். விமர்சனக் கடிதமோ ஏனைய படைப்பாளிகளின் கருத்துத் தொடர்பான கடிதமோ நாகரிகமான முறையில் அமைவது அவசியம். நீங்கள் எதை வாசிக்க விரும்பவில்லையோ அதை எழுதாதீர்கள்.


சுவடுகளுக்குச் சந்தா செலுத்தாத வாசகர்கள் சுவடுகளின்நிதிநிலைமையைக் கருத்திற் கொண்டு தயவுசெய்து உடன் செலுத்தி உதவுங்கள். எமது வங்கிக் கணக்கிலக்கம்: 16071701933, வங்கியின் பெயர்: **SparebankenNOR.** வங்கியூடாக மட்டும் பணத்தைச் செலுத்தி உதவவும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Lillehammer'94

# நோர்வேக்குப் பெருமைதேடித் தந்த ஒலிம்பிக்



எதிர்பாராத வெற்றிகள், எதிர்பாராத தோல்விகள், பிணக்குகள், இணைவுகள், பாராட்டுகள், பரிவுகள் எனப் பல்வேறு உணர்ச்சிகளின் குழம்பான குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் மீண்டும் ஒரு தடவை நோர்வேயை உச்சிக்குக் கொண்டுசென்று ஓய்ந்தன.

முன்னெப்போதும் இல்லாதளவு அதிக போட்டியாளர்கள், அதிக பங்கேற்பு நாடுகள், அதிக போட்டிகள் என்று பல சிறப்புகளைக் கொண்டிருந்த லில்லஹம்மர்'94 ஒலிம்பிக் போட்டியே முதற்தடவையாக கோடை ஒலிம்பிக் நடக்காத வருடத்தில் நிகழ்ந்தது. 42வருடங்களின் முன் ஒஸ்லோவில் ஒலிம்பிக் (கு) போட்டிகளை நடத்தியது நோர்வே. இது இரண்டாவது தடவை. இம்முறை மிகச் சிறப்பாகப் போட்டிகளில் வெற்றிகளைக் குவித்து மிக அதிக புள்ளிகளையும் (176), பதக்கங்களையும் (26) பெற்றது நோர்வே. 1963க்குப் பின் நோர்வே முதலாமிடம் பெற்றது இப்போதே.

61 தங்கப்பதக்கங்களுக்காக உலகின் பல பகுதிகளிலும் இருந்து வந்திருந்த இரண்டாயிரம் போட்டியாளர்களை வரவேற்றுச் சிறப்பான முறையில் அவர்களைப் பராமரித்தது நோர்வே. நிகழ்ச்சியை நோர்வே அரசர் ஆரம்பித்து வைத்த உத்தியோகபூர்வ நிகழ்ச்சி உலகெங்கும் பலகோடி மக்களால் பார்க்கப்பட்டது. சர்வதேசப் புகழ்பெற்றோரான நோர்வேஜிய மானுடவியல் ஆய்வாளர் தூர் ஹெயர்டால், திரைப்பட நடிகை - இயக்குனர் லிவ் உல்மான் ஆகியோர் முதல்நாள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினர். (தமிழ்ச் சிறுவன் ஒருவனுட்பட) சிறுவர்களே பெரும்பாலும் பங்கேற்ற தொடக்க நிகழ்ச்சிகள் சமாதானச் செய்தியை உலகுக்கு வழங்கின.

சனத்தொகையிற் சிறிய நாடாக இருந்தாலும் குளிர்கால விளையாட்டுகளை நோர்வே பாரம்பரியச் சிறப்பாகக் கொண்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

MEDALJEOVERSIKT




POENGOVERSIKT

| | |
|---|---|
| 1. Norge | 176 |
| 2. Russland | 172 |
| 3. Tyskland | 161 |
| 4. Italia | 133 |
| 5. USA | 93 |
| 6. Canada | 87 |
| 7. Østerrike | 67½ |
| 8. Sveits | 59 |
| 9. Sør-Korea | 47 |
| 10. Japan | 46 |

| | G | S | B |
|---|---|---|---|
| 1. Russland | 11 | 8 | 4 |
| 2. Norge | 10 | 11 | 5 |
| 3. Tyskland | 9 | 7 | 8 |
| 4. Italia | 7 | 5 | 8 |
| 5. USA | 6 | 5 | 2 |
| 6. Sør-Korea | 4 | 1 | 1 |
| 7. Canada | 3 | 6 | 4 |
| 8. Sveits | 3 | 4 | 2 |
| 9. Østerrike | 2 | 3 | 4 |
| 10. Sverige | 2 | 1 | 0 |

ஒரு நாடு. 'நோர்வேஜியர்கள் பிறக்கும்போதே காலில் பனிச் சறுக்கியுடன் பிறந்தவர்கள்' என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்கள். இந்தப் போட்டிகளைத் தாம் வெற்றிக்கொடி நாட்ட மாத்திரமன்றித் தமது விருந்தோம்பலைக் காட்டவும் பயன்படுத்தினர். எல்லாவற்றுக்கும் மேலாக அமைதியை நேசிக்கும் நாடு என்று உலகில் நிலவிவரும் தம்மைப் பற்றிய அபிப்பிராயத்தை உறுதி செய்யவும் இந்தப் போட்டிகளைப் பயன்படுத்தினர் நோர்வேஜியர்கள்.

சனத்தொகை அடிப்படையில் சிறிய நாடான நோர்வே (42லட்சம்) எதிர்பார்த்த சில தங்கப் பதக்கங்கள் கைநழுவிப் போனாலும் பத்துத் தங்கப் பதக்கங்களுடன் (ரஷ்யாவுக்குப் பதினொரு தங்கம்) மிக அதிக பதக்கங்களையும், மிக அதிக புள்ளிகளையும் பெற்ற நாடாக மிளிர்ந்தது.

கடந்த ஒலிம்பிக்கில் முதலிடத்திற்கு வந்த ஜேர்மனி மூன்றாமிடத்திற்கும், 1917க்குப் பின் முதற் தடவையாகத் தனிநாடாகப் போட்டியிடும் ரஷ்யா இரண்டாம் இடத்திற்கும் வந்தன.

அதிவேக ஸ்கேற்றிங்கில் (speed skating) மூன்று தங்கப் பதக்கங்களையும், மூன்று உலகச் சாதனைகளையும்




தனதாக்கிய ஊலாவ் கொஸ் இந்தப் போட்டிகளில் கதாநாயகனாகத் திகழ்ந்தார். இவர் தனது முதலாவது தங்கப் பதக்கத்திற்காகத் தனக்குக் கிடைத்த போனஸ் தொகையான இரண்டேகால் லட்சம் குறோணர்களை, ஒலிம்பிக் எய்ட் என்றழைக்கப்படும் உதவி நிதியத்திற்குக் கொடுத்து, உலகின் வறுமை யுத்தத்தால் பாதிப்புற்ற மக்களுடன் தனது ஐக்கியத்தைக் காட்டிக் கொண்டார்.

அரங்குகள், வீதிகள், போட்டி நிகழுமிடங்கள் அனைத்திலும் நோர்வேக் கொடி கடல்போலக் காட்சி தந்தது. தமது வீரர்கள் வெற்றிபெறும் நேரங்களில் மாத்திரமன்றி ஏனைய நாட்டு வீரர்கள் வெற்றி பெறுகையிலும் அவர்களுக்குக் கரகோஷம் தெரிவித்துத் தமது பரந்த மனதை வெளிப்படுத்தினர் நோர்வே ரசிகர்கள். மிக அதிக பார்வையாளர்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






ஈர்த்த 50கிலோ மீற்றர் பனிச்சறுக்கற் போட்டியில் தமது நாட்டு வீரர்களை விட கஸக்ஸ்தான் வீரரான ஸ்மிர்னோவே வெல்லவேண்டும் என்று அனேக நோர்வேஜிய ரசிகர்கள், (அரசர், இரண்டாமிடம் பெற்ற பியோண் டாலி உட்பட) விரும்பியது இதற்குச் சிறந்த உதாரணம். ஸ்மிர்னோவ் வெற்றி பெற்றபோது சொந்த நாட்டு வீரர்களைப் போல மைதானமெங்கும் அதிர்ந்த உற்சாகத்துடன் வரவேற்றனர் நோர்வே ரசிகர்கள்.

இந்தப் போட்டிகள் வெறுமனே விளையாட்டுடன் முடிந்துவிடும் விவகாரங்களல்ல. பெருமளவு பணம் இந்தப் போட்டிகளுக்காக முதலிடப்பட்டது. விளையாட்டு நிகழும் தினங்களுக்கான செலவு எதிர்பார்த்ததைவிட அதிகமாகாமல் தவிர்க்கப் பட்டதுடன் பெரும் குறைகள் எதுவும் வராமல் இந்தப் போட்டிகள் நிகழ்ந்தமையும், நோர்வேஜிய ரசிகர்களதும் அமைப்பாளர்களதும் நற்பண்புகளும் சர்வதேச ரீதியில் பெற்ற நற்பெயர் மட்டுமன்றி, நோர்வேயின் அழகிய பனிமலைகளும் எதிர்காலங்களில் அதிக உல்லாசப் பயணிகளை நோர்வே நோக்கி ஈர்க்கும். இவ்வகையில் செலவு வரவுக்கும் வழிகாட்டியிருக்கிறது.

ஒலிம்பிக் முடிந்தபின், மீண்டும் நோர்வேயில் ஒலிம்பிக் நடத்தப் படலாமா என்ற கேள்விக்கு 60வீதமான நோர்வேஜியர்கள் ஆம் என்று அளித்த பதில், ஒலிம்பிக் பெற்ற வெற்றியைச் சொல்லப் போதுமானது.


(G- தங்கம், S- வெள்ளி, B- வெண்கலம். Tyskland- ஜேர்மனி, Sveits- ஸ்விற்சர்லாந்து, Østerrike- ஒஸ்த்றியா, Sverige- ஸ்வீடன்)

மஹி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலத்தீன் அமெரிக்கத் திரைப்படங்கள் சமகால அரசியல் வரலாற்று ஆவணங்கள். கொந்தளிப்பு நிறைந்த காலகட்டம் பற்றிய படைப்புகள். நேரடியான அமெரிக்கத் தலையீட்டுக்கு எதிரானதும், மக்களின் எதிர்ப்புப் போராட்டங்கள் பற்றியதுமான தீவிர சினிமா (Militant cinema).



# மூன்று லத்தீனமெரிக்கத் திரைப்படங்கள்

யமுனா ராஜேந்திரன்

நூற்றுக்கணக்கான இலத்தீன் அமெரிக்கப் படங்களை நான் பார்த்திருந்தாலும் தற்போது மூன்று படங்களின் அறிமுகமாகவே இக்கட்டுரை.

1. 1991ல் வெளியான வெனிசுலா நாட்டுப்படமான 'என் கதவு தட்டப்பட்டது' (Knock at my door)
2. 1992ல் வெளியான பெரு நாட்டின் படமான 'லா கிரிங்கா எனப்படும்' (Alias La Gringa)
3. 1993ல் வெளியான அர்ஜன்டைனா நாட்டுப் படமான 'மௌனச் சுவர்' (A wall of silence)

இந்த மூன்று படங்களும் லண்டனில் நடைபெற்ற இலத்தீன் அமெரிக்கத் திரைப்பட விழாவிலும், சர்வதேசத் திரைப்பட விழாவிலும் திரையிடப்பட்டவை. இதில் 'லா கிரிங்கா' திரைப்படம் 1992ல் புதுதில்லியில் நடைபெற்ற சர்வதேசத் திரைப்பட விழாவிலும் காண்பிக்கப்பட்டது. 'மௌனச் சுவர்' படம் 1993 நவம்பரில் லண்டன் சர்வதேசத் திரைப்பட விழாவில் காண்பிக்கப்பட்டது.

அடிக்கடி நடைபெறும் ராணுவக் கவிழ்ப்புகள், அமெரிக்க ஏகாதிபத்திய பொம்மை ஆட்சிகள், ஆயிரக்கணக்கில்

www.tamilarangam.net

கொல்லப்படும் மக்கள் தொகுதி, 'காணாமல் போகிறவர்கள்' என சுட்டுக் கொல்லப்படும் இடதுசாரி இயக்கத்தவர்கள் எனும் அன்றாட வாழ்வின் யதார்த்தம் – இலத்தீன் அமெரிக்க மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் யதார்த்தம் – இத்திரைப்படங்களின் படைப்புக் களம்.

இத்திரைப்படங்கள் அழுத்தமான வரலாற்று உண்மைச் சம்பவங்கள்மீது எழுப்பப்பட்டவை.

எல்ஸால்வடோர் நாட்டில் சுட்டுக் கொல்லப்பட்ட ராமிரஸ் எனும் பாதிரியாரின் கொலை.

பெருநாட்டில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரில் – 'ஸைனிங் பாத்' கெரில்லாக்களுக்கும் ராணுவ ஆட்சியாளர்களின் கொடூரத்துக்கும் – இடையில் அகப்பட்ட ஒரு அறிவாளியின் கொலை.

அர்ஜென்டைனாவிலும் பொலிவியாவிலும் பிரேஸிலிலும் 'காணாமற் போனவர்கள்' எனும் பட்டியலில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் அவலம். – ஆண்பெண் உறவில் நேர்ந்த சோகம் – இவைகளைப் பற்றித்தான் இந்தப் படங்கள் பேசுகிறது.

இந்த மூன்று படங்களில் முதலிரண்டு படங்கள் ஆண்களால் இயக்கப்பட்டவை. மூன்றாவது படமான 'மௌனச்சுவர்' பெண்ணால் இயக்கப் பட்டது. ஒரு பெண்ணின் பார்வையில் 'காணாமல் போனவர்கள்' பிரச்சினை ஏற்படுத்தும் சோகத்தைச் சொல்கிறது இப்படம்.

1.

'என் கதவு தட்டப்பட்டது' எனும் தலைப்பு கிறிஸ்துவோடும் கத்தோலிக்க மதத்தோடும் பைபிளோடும் மிகமிகத் தொடர்புள்ளது.

'தட்டுங்கள் திறக்கப்படும்' என்றார் இயேசு. இரண்டு பெண்துறவிகளின் வீட்டுக்கதவு ஒரு கலகக்காரனால், ஆட்சிக் கவிழ்ப்பாளனால், புரட்சிக்காரனால் தட்டப்பட்டது.

கதவு திறந்தது. இரண்டு பெண்துறவிகளிடம் அடைக்கலம் கோரினான் புரட்சிக்காரன்.

தொடர்ந்து வரும் விளைவுகளும் உரையாடலும், நெஞ்சை உலுக்கும் வகையில் பெண்துறவி சுட்டுக் கொல்லப் படுதலும்தான் கதை.

இரவின் மத்தியில் ராணுவ வாகனங்கள் இரைச்சலுடன் வந்து நிற்கிறது. தடதடவெனக் குதிக்கும் இராணுவத்தினர் வீடுகளின் கதவுகளை இடிக்கிறார்கள். எங்கும் கூச்சல். அந்தத் தெருவில் இரண்டு கத்தோலிக்கப் பெண் துறவிகளும் வாழ்கிறார்கள்.

நாகரிகம் கருதி பெண்துறவிகளின் வீட்டில் நள்ளிரவில் இராணுவம் நுழையமுடியாது. ஸப்தம் கேட்டு அவ்வீட்டிலுள்ள ஒரு பெண்துறவி கதவைத் திறந்துவிட்டு வெளியில் வந்து நிற்கிறார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்குத் தெரியாமல் 'ஒரு ஆட்சிக்கவிழ்ப்புக் கலகக்காரன்' அந்த வீட்டினுள் நுழைந்துவிடுகிறான்.

இராணுவத்தின் இலக்கு அவனைத் தேடிக் கண்டுபிடிப்பது.

ஒரு சாவின் இறுதிக்கிரியைக்குச் சென்றிருந்த மற்றொரு பெண் துறவியும் வீட்டுக்கு வந்துவிடுகிறார். தங்களிடம் அடைக்கலம் வந்திருக்கும் அம்மனிதனை கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையில் அவர்களால் காட்டிக்கொடுக்க முடியாது.

பாதுகாப்பு அதிகாரியின் வைப்பாட்டியான அண்டை வீட்டுக்காரியால் அக்கலகக்காரன் காட்டிக் கொடுக்கப் படுகிறான்.

அச்சமயம் வீட்டிலிருந்த மூத்த பெண்துறவியும் அம்மனிதனும் கைது செய்யப் படுகிறார்கள். உள்ளூர் பாடசாலையில் அவர்கள் விசாரிக்கப் படுகிறார்கள்.

www.tamilarangam.net

'துப்பாக்கி முனையில் தன்னைப் பயமுறுத்தியதாக' வாக்குமூலம் தரச் சொல்லி பெண்துறவியை வற்புறுத்துகிறார்கள் பாதுகாப்புத் துறையினர். அவர் மறுத்துவிடுகிறார். அடைக்கலம் கேட்டுத்தான் வந்தான். அடைக்கலம் தருவதும் பாதுகாப்பதும் தேவன் எனக்கு விதித்த கடமை என்கிறார்.

மறுத்தால் இன்னொரு பெண்துறவியையும் சேர்த்துக் கொன்றுவிடுவதாக மிரட்டுகிறார்கள். மற்றொரு சிறையில் இருக்கும் 'கலகக்காரனை'ச் சித்திரவதை செய்கிறார்கள், அந்தக் கொடுமையான கதறலை தீனக்குரலைப் பெண்துறவியைக் கேட்கச் செய்து மனத்தைப் பயங்கரப் படுத்துகிறார்கள். அவனைச் சுட்டுக் கொன்றும் விடுகிறார்கள்.

மறுபடியும் பெண்துறவியை வாக்குமூலத்துக்காக வற்புறுத்துகிறார்கள். சகபெண்துறவியைப் பாதுகாக்க முதலில் ஒப்புக்கொள்ளும் இவர், அவள் விடுதலை செய்யப்பட்டதும் மறுபடி மறுத்துவிடுகிறார்.

அவரைச் சுட்டுக் கொல்வதற்கான உத்தரவு நேரங் குறிக்கப்படுகிறது. இறுதிவரை மறுத்துவிடும் அந்தத் தீரப் பெண்மணி கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப் படுகிறார்.

Firing squad அவரைச் சுட்டுக் கொல்கிறது. அவர் நம்பிக்கைகளின், அவரின் தேவநம்பிக்கைகளின் அடைக்கலம் தரும் பாதுகாக்கும் அவரது கத்தோலிக்க நம்பிக்கைகளின் சின்னமாக உடல் துளைக்கப்பட்டுத் தரையில் சர்கிறது அவரது உடல்.

அந்த நம்பிக்கைதான் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் கத்தோலிக்கம் ஒரு எதிர்ப்புச் சக்தியாக மாறுவதற்கான விதைகளை விதைத்திருக்கிறது.

2.

'லா கிரிங்கா எனப்படும்' பெயருள்ளவன் ஒரு போக்கிரி. அடிக்கடி பெயரை மாற்றிக் கொண்டு மோசடிகள் செய்பவன். அடிப்படையில் நல்ல மனமும் இரக்க சுபாவமும் உள்ளவன்.

இவன் சிறையில் இருக்கும்போது ஒரு பேராசிரியரைச் சந்திக்கிறான். இந்தச் சமூக அமைப்பு குறித்து நேர்மையாக மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க நினைப்பவர் இவர். பயங்கரவாதத்தைப் பல்கலைக்கழகத்தில் பரப்பிய குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப் பட்டிருப்பவர்.

இவர்களோடு அந்தச் சிறையில் இருப்பவர்கள் 'ஸைனிங் பாத்' கெரில்லாக்கள்.

சிறைக்குள்ளேயே அவர்கள் கம்யூன்கள் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். 'லா கிரிங்கா' திட்டமிட்டுக் கைதிகளுக்கிடையில் கலவரத்தைத் தூண்டித் தப்பிவிடுகிறான்.

தப்பிய லாகிரிங்கா தன் காதலியோடு தனித்திருக்கும் வேளையில், பேராசிரியரின் ஒரு கடிதத்தை காதலியிடமிருந்து யதேச்சையாகப் பார்க்க நேர்கிறது.

'லா கிரிங்கா தன்னை விடுவிப்பான்' என்று அக்கடிதத்தில் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் பேராசிரியர். அவர் 'லா கிரிங்கா'வின் அனுபவங்களை புத்தகமாக வெளியிட அவனுக்கு உதவி செய்திருக்கிறார். நம்பிக்கைத் துரோகம் செய்யவிரும்பாத 'லா கிரிங்கா' குற்ற உணர்ச்சியுடன் மறுபடி சிறைக்குத் திரும்புகிறான்.

அப்போது அந்தத் தீவின் பெரிய சிறையில் ஸைனிங் பாத் கெரில்லாக்களுக்கும் சிறைக் காவலர்களுக்கும் சண்டை மூண்டுவிட்டிருக்கிறது.

எங்கு நோக்கினும் துப்பாக்கிச் சத்தம். இரத்தச் சிதறல். வீசியெறியப்பட்ட

www.tamilarangam.net



உடல்கள். இடிந்துவிழும் சிறைச் சுவர்கள். புகை மண்டலம்.

'இறுதிவெற்றிவரை போராட்டம், இல்லையேல் சாவு' என்று மூர்க்கத்தனமாக மோதுகிறார்கள் கெரில்லாக்கள். கெரில்லாக்களைத் துடைத்தெறிவது எனும் நோக்குடன் வானத்திலிருந்து குண்டுமழை பொழிகிறது ராணுவம்.

இடையில் பேராசிரியர் நின்று சமாதானத்துக்காக வெள்ளைக் கொடியேந்தி நடக்கிறார்.

'இந்த முட்டாள்தனமான யுத்தத்தை நிறுத்துங்கள்' என்று வேண்டுகோள் விடுகிறார். சாவு மட்டுமே நிச்சயமான இந்த மூடத்தனத்தை நிறுத்துங்கள் என்று கத்துகிறார்.

'லா கிரிங்கா'வுடன் இந்தச் சந்தர்ப்பத்தில் தப்பிப் போக விரும்பவில்லை அவர். லா கிரிங்கா மன்றாடுகிறான்.

உடல் சல்லடையாகத் துளைக்கப்பட, அவரது வெள்ளைச் சட்டையில் இரத்தம் தெறிக்கத் தரையில் வீசப்படுகிறார் பேராசிரியர். அவர் உடலில் துளைக்கப்பட்ட குண்டுகளில் இரண்டு தரப்பினருடையதும் இருக்கிறது.

'லா கிரிங்கா' தப்பிக் கடலில் குதிக்கிறான். நீல ஆகாயத்தின் பின்னணியில் கடலில் சிறு உருவமாக நீந்திச் செல்கிறான் லா கிரிங்கா.

அவன் பின்னால் கறுத்த புகை மூட்டத்துடன் எரிகிறது நெருப்பு.

இது ஒரு உண்மைச் சம்பவத்தின் அடிப்படையிலும் லா கிரிங்கா எனும் உண்மைப் போக்கிரியின் நினைவுக் குறிப்புகளின் அடிப்படையிலும் எடுக்கப்பட்ட படம்.

அந்தச் சம்பவத்தில் 500 ஸைனிங் பாத் கெரில்லாக்கள் சுட்டுக் கொல்லப் பட்டார்கள்.

3.

'மௌனச் சுவர்' படம் அர்ஜென்டீனாவைச் சேர்ந்த ஒரு பெண் இயக்குனரால் இயக்கப்பட்ட படம்.

1942ல் அர்ஜென்டீனாவில் பூனுஸ்யோர்ஸில் பிறந்தவர் இயக்குனர் லிடா ஸ்டேன்டிக் (Lita Stantic).

இப்படம் அர்ஜென்டீனாவில் 1983ம் ஆண்டு பரவலாக நடைபெற்ற 'காணாமற் போனவர்கள்' பிரச்சனை பற்றி, ஏழு ஆண்டுகள் கழித்து 1990ம் ஆண்டு நடைபெறும் நிகழ்வுகளைச் சொல்கிறது. இப்பிரச்சனை பற்றி ஒரு விவரணப் படம் தயாரிக்க அர்ஜென்டீனா வருகிறார் ஒரு பிரிட்டிஷ் பெண் இயக்குனர். அவரைச் சுற்றித்தான் கதை நிகழ்கிறது.

பிரிட்டிஷ் இயக்குனராக வனஸ்ஸா ரெட்கிறேவ் (Vanessa redgrave) எனும் பிரிட்டிஷ் நடிகை நடித்திருக்கிறார்.

வனஸ்ஸா றெட்கிறேவ் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்க இயக்கப் போராட்டத்தில் முன்னணியில் நிற்பவர். தற்பொழுதும் (The Marxist) தி மாக்சிஸ்ட் எனும் பத்திரிகையின் ஆசிரியராக இருப்பவர்.

இவரின் அற்புதமான நடிப்பு இப்படத்திற்கு மற்றொரு மகுடம்.

பிரட்டிஷ் விவரணப்பட இயக்குனர், சம்பந்தப்பட்ட ஒரு பெண்ணின் அனுபவங்களின் அடிப்படையில் படம் தயாரிக்க முனைகிறார். அந்தப் பெண் கதைநிகழும் காலத்தில் (1990) மறுமணம் புரிந்துகொள்கிறார். அவருக்கு வளர்ந்த ஒரு இளம்பெண்ணும் இருக்கிறாள். புதிய கணவன் இவர் பிரச்சனையைப் பற்றிய மிகுந்த புரிந்துணர்வுடன் இருக்கிறான்.

அந்தப் பெண்ணின் முதல் கணவன் (1983ம் ஆண்டு) கலகக்காரன் எனும் குற்றச்சாட்டில் கைது செய்யப்படுகிறான். அப்போது அவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் இருக்கிறாள்.

www.tamilarangam.net

சிறையிலிருக்கும் அவள் கணவன் அநாமதேயமான முறையில் அவளுக்குச் சில நேரங்களில் தொலைபேசியில் பேசுகிறான். அவன் உயிரோடு இருக்கிறான் என்பதற்கு அது மட்டுமே அவளுக்கு சாட்சியம்.

பின்பொருமுறை குடியிருக்கும் வீட்டை விற்று அப்பணத்தை ஒரு உணவு விடுதியில் கொண்டுவந்து தரச் சொல்கிறான். அப்போது அவனோடு வேறொரு அந்நிய மனிதனும் இருக்கிறான். அநேகமாக அவன் அரசின் ராணுவத்தைச் சேர்ந்தவனாக இருக்கிறான்.

அச்சந்திப்புத்தான் அவள் கணவனை இறுதியாகச் சந்திக்கும் முறை. தன் குழந்தைக்கு அன்பையும் முத்தங்களையும் சொல்லிவிட்டு விடைபெறுகிறான்.
ஏழு ஆண்டுகள். அவன் உயிரோடு இருப்பதற்கான எந்தச் சாட்சியமும் இல்லை. நாடெங்கும் அரசுக்கு எதிரான எழுச்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் நடந்தவண்ணம் இருக்கிறது.
அவள் 1990ம் ஆண்டு மறுமணம் செய்கிறாள். மகளும் வளர்ந்து பெரிய பெண்ணாகி விட்டிருக்கிறாள்.
மறுமண வாழ்க்கையில் ஈடுபடும் இப்பெண் ஒரு சந்தர்ப்பத்தில் காரில் போய்க் கொண்டிருக்கும் போது தனது

## ஈழத்துச் சிறுகதைக் களஞ்சியம்

ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் போக்குகளைப் பதிவுசெய்து, நாளைய தலைமுறையிடம் அடையாளம் காண்பிக்கு முகமாக சிறுகதைக் களஞ்சியம் ஒன்றை உருவாக்கும் பணியில் ஈழத்து எழுத்தாளர்களினதும் புலம்பெயர்ந்தவர்களதும் ஆதரவு கோரப்படுகிறது.
தலைமுறை அடிப்படையில் நான்கு பாகங்களாக உருவாகவுள்ள இக் களஞ்சியத்தில் ஈழத்து இலக்கிய முன்னோடிகளதும் புதிய தலைமுறையினரதும் சிறுகதைகள் இடம்பெறும். வாசகர்களும் இந்தப் பாரிய பணிக்கு ஒத்துழைக்கலாம். தாம் பெரிதும் விரும்பிய தரமான சிறுகதை ஒன்றை - எழுதியவர் வாழ்க்கை, இலக்கியப் பணி முதலான குறிப்புகளுடன் அனுப்பி வைக்கலாம்.
தமிழக எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ.), லெ.முருகபூபதி ஆகியோர் இச்சிறுகதைக் களஞ்சியத் தொகுப்பாளராகச் செயற்படுகின்றனர்.
இக்களஞ்சியம் தொடர்பாக வாசகர்களதும் எழுத்தாளர்களதும் கருத்துகள் வரவேற்கப் படுகின்றன.
தொடர்பு முகவரி:
L.Murugapoopathy/ 170, Hothlyn Drive/ Craigieburn/ VIC 3064/ AUSTRALIA

www.tamilarangam.net

முதல் கணவன் மாதிரியே ஒருவன் தன்னைக் கடந்து போவதைப் பார்க்கிறாள். அவன் இவளைத் திரும்பிப் பார்ப்பதில்லை, அவன் மற்றொரு பெண்ணோடு ஒரு வீட்டுக்குள் நுழைகிறான். கதவு சாத்தப்படுகிறது.
மனம் நெருக்கலுக்குள் உறைகிறது. குற்றவுணர்ச்சி அவளை உலுக்குகிறது.
தனக்கும் தன் கணவனுக்கும் தெரிந்த ஒரு முதிய பேராசிரியரை அணுகித் தன் கணவன் உயிரோடு இருக்கிறான், ஏன் தன்னைத் திரும்பிப் பார்க்கமாட்டேன் என்று நிராகரிக்கிறான் என்று கேட்கிறாள்.
அவர் திரும்பத் திரும்ப அவன் உயிரோடு இல்லை, சுட்டுக் கொல்லப்பட்டு விட்டான் என்கிறார்.
அவள் உள்மனம் நம்ப மறுக்கிறது.
அவளது இரண்டாவது கணவன் விவரணப் படத்தை நிறுத்தச் சொல்லி பிரிட்டி. டைரக்டர் பெண்மணியைக் கேட்கிறான். இந்த நினைவுகள் தன் மனைவியின் நிம்மதியைக் குலைத்துவிட்டதாகச் சொல்கிறான்.
மகளும் தன் தாயின் கண்ணீர் வடியும் முகத்தை ஆதரவாய்த் தழுவிக் கையை மென்மையாகத் தாயின் கரத்தின்மீது வைக்கிறாள்.
உண்மையில் அவன் கணவன் இருக்கிறானா இறந்துபோய் விட்டானா? இறுதிக்காட்சியில் அந்த பைசாசமான சித்திரவதைக் கூடத்தின் முன் - இடிபாடுண்ட சித்திரவதைக் கட்டிடத்தின் முன் அவளும் அவள் இளம் மகளும் நிற்கிறார்கள்.
அவள் தன் மகளுக்கு அனைத்தையும் விவரிக்கிறாள். எல்லா மக்களுக்கும் தெரியவே இது நேர்ந்தது என்கிறாள்.
கமெரா இளம்பெண்ணின் ருத்ரமான கோபவிழிகளுக்குள் நகர்கிறது.
கோபமான சிவந்த இளம்பெண்ணின் விழிகள் திரையில் உறைகிறது.

* * * * *

இந்த மூன்று திரைப்படங்களும் வரலாற்று விவரணங்களும் பின்னணியில் கறுப்பு வெள்ளையில் மக்கள் போராட்டங்களும் என வாழ்வின் நிஜத்தைக் கொண்டு எழுப்பப் பட்டிருக்கிறது.

இந்தப் படங்கள் அரசியல் எழுச்சிகள்/ அரசியல் வன்முறை/ மக்கள் போராட்டங்கள் போன்றவை அதில் ஈடுபட்ட மனிதர்களின் மனவுலகம் பற்றிப் பேசுகிறது.
மனிதவாழ்வு எவ்வாறாய்ச் சுக்கல் சுக்கலாக நொறுங்கிப் போகிறது என்பதைப் பார்க்கிறது. ஈழப் போராட்டத்திலும் எந்த விடுதலை சார்ந்த போராட்டத்திலும் இம்மாதிரித் துயரவாழ்க்கை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

வன்முறைக்கு எதிரான ஆன்மசுத்தியுள்ள தனிமனிதர்களின் நம்பிக்கை வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இப்படங்கள் உலகெங்கும் மனிதர்கள் எதிர்கொள்ளும் இந்தத் துயரம் மற்றும் இவற்றுக்கிடையிலும் வீரஞ் செறிந்த போராட்டங்கள் போன்றவற்றை நமக்கு மிக அண்மையில் கொண்டு சேர்க்கிறது.

இவை வீரசாகசம் சார்ந்தவை அல்ல. கனவுலகைப் படைப்பது இல்லை. நிஜமும் நிழலுமான வாழ்வை அதன் ஆழத்துடன் முன்வைக்கிறது.
அவர்களது திரைப்படங்கள் மனித வாழ்வின் உன்னதம் வாழும் நிஜமான நிமி ங்களைத் தரிசிக்கிறது. நமது படங்களும் சரி, நமது விடுதலைப் போராட்டப் புனையுரைகளும் சரி நம்மை மயக்கத்தில் ஆழ்த்தி வைத்திருக்கிறது.
இது ஒரு அறிமுகம் மட்டுமேதான். இந்தப் பாதை கிளாபர் ரோச்சா எனும் மூன்றாவது சினிமாவின் முன்னோடி திறந்துவைத்த பாதை, வாழ்வு போலவே இது நீண்டது.

www.tamilarangam.net

"குற்றஞ் சாட்டப்பட்டவர் எழுந்து நிற்கலாம். இப்போது தீர்ப்பு வழங்கப்படும்......." திருமதி லொறேனா போபிற் தனது வழக்கறிஞர்கள் சகிதம் எழுந்து நிற்கிறார். ஏழு பெண்களையும் ஐந்து ஆண்களையும் கொண்ட யூரர் சபையின் தலைவர், "குற்றஞ் சாட்டப்பட்டவர் நிரபராதி எனத் தனது முடிவைப் பிரகடனம் செய்கிறார்" 'ஹா' என்று ஓர் ஒற்றைக்குரல் நம்பமுடியாத தொனியில் நீதிமன்ற மூலையிலிருந்து எழுகிறது. லொறேனாவின் ஆதரவாளர்கள் கட்டித் தழுவிக் கொள்கிறார்கள். தனது வழக்கறிஞர் பக்கம் திரும்பி விசாரிக்கும் லொறேனாவின் முகம் மலர்கிறது.




ஓர் அமெரிக்க மடல்
விக்கி எழுதுவது.....

# கணவன் மனைவி ஒரு கத்தி

கணவன் ஜோன் போபிற்றின் ஆண்குறியைக் கத்தியால் துண்டித்த லொறேனா, கடுமையான சேதம் விளைவிக்கும் நோக்கில் திட்டமிட்டுக் காயப் படுத்தியதாகக் குற்றம் காணப்படுமிடத்து இருபது ஆண்டுகள் சிறைத்தண்டனை பெறக்கூடிய வழக்கில் இருந்து விடுதலை செய்யப் படுகிறார். கணவனது நிரந்தரமான பாலியற் பலாத்காரத்தைச் சகிக்க முடியாது மனம் குழம்பிப்போன நிலையில், தற்காலிகமான புத்திப் பேதலிப்பினால், கட்டுப்படுத்த முடியாத ஒரு மன உந்தலின்கீழ் அவர் இதைச் செய்ததாக யூரர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

"என் கணவர் தனது பாலியற் திருப்தியை மட்டுமே பெரிதாக நினைப்பவர். நான் எனது உச்சத்தை (orgasm) அடைந்துவிட்டேனா என்பதை அவர் எண்ணுவதேயில்லை. எனக்கு இது சரியாகப் படவில்லை. எனவேதான் படுக்கைப் போர்வையை விலக்கிவிட்டு இதை நான் செய்தேன்" என்று லொறேனா பொலிஸ் வாக்குமூலத்தில் சொல்லியிருந்ததையோ, இச்சம்பவத்திற்கு 72மணி நேரத்துக்கு முன்னும் ஜோனும், லொறேனாவும் மனமொத்த உடலுறவில் ஈடுபட்டார்கள் என்பதையோ வைத்துக்கொண்டு அரச வழக்குத் தொடுநரால் வெற்றிபெற முடியாமற் போகிறது.

வழக்கு விசாரணை எட்டு நாட்கள் மட்டுமே நீடித்ததெனினும், கடந்த ஏழு மாதங்களாக அமெரிக்க, சர்வதேச செய்தித் தாபனங்களின் கவனத்தை இந்த வழக்கு ஈர்த்திருந்தது. பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான குழுக்கள், 'புண்படுத்தப்பட்ட ஒரு பெண் தன்னுள் அடக்கி வைத்திருந்த ஆற்றாமையின் வெளிப்பாடே இது' என்ற கோஷத்தை முன்வைத்து,

www.tamilarangam.net

லொறேனா சார்பில் வழக்கறிஞர்களை நியமிப்பதில் உதவியது மட்டுமன்றி நீதிமன்றத்தின் முன்னும், தொலைக்காட்சியிலும் தமது பிரசன்னத்தை உணரவைத்தன.

48 சாட்சிகள் –

ஆறு மணிநேரக் கலந்துரையாடல் –

இவற்றிற்குப் பிறகு, இன்னொருவரைக் காயப்படுத்தியதற்கான குறைந்தபட்சக் குற்றத்திற்குக்கூட லொறேனா தண்டிக்கப்படக் கூடாது என யூரர்கள் முடிவு செய்தனர்.

வேர்ஜீனியா மாநிலப் பாலியற் சட்டத்தின்படி, தனக்கோ மற்றவர்களுக்கோ ஊறுவிளைவிக்கும் அளவுக்கு லொறேனா மனம் குழம்பியிருக்கிறாரா என்று பரிசோதிக்கப்படும் பொருட்டு அரச மருத்துவமனைக்கு அவர் அனுப்பப்பட நீதிமன்று தீர்ப்பளித்தது. மனநோய் மருத்துவர்களின் முடிவிற்கிணங்க நாற்பத்தைந்து நாட்களுக்குள் சுதந்திரமாக வெளியே போகவோ அல்லது தனிப்பட்ட மருத்துவ உதவியை நாடவோ லொறேனா அனுமதிக்கப் படுவார்.

ஈகுவடோரில் பிறந்து வெனிசுவேலாவில் வளர்ந்து பிரகாசமான வாழ்க்கை நோக்கிய கனவுகளுடன் அமெரிக்கா வந்த இளம்பெண்ணுக்கும், அமெரிக்க ஆயுதப் படைகளிற் பணிபுரிந்து பின்னர் கட்டிடத் தொழிலில் இறங்கிய கவர்ச்சிகரமான ஓர் இளைஞனுக்கும் ஏற்பட்ட சினேகம் 1989ல் திருமணத்தில் முடிந்தது. கசப்பான வாக்குவாதங்களும், காயப்படும் அளவுக்கான மோதல்களும், விவாகரத்துக்கான திட்டங்களும், உல்லாசப் பயணங்களுமாய் ஏற்ற இறக்கங்கள் கலந்த ஒரு வேடிக்கை மண வாழ்வின் ஒவ்வொரு சம்பவமும் தொலைக்காட்சிக் கமெராக்களின் முன்னிலையில் அக்குவேறு ஆணிவேறாய் ஆராயப்பட்டது. லொறேனாவினதும்

## இலக்கியச் சந்திப்பு

தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் ஐரோப்பிய இலக்கியச் சந்திப்பு நிகழ்ச்சியின் 18வது நிகழ்ச்சி, சுவிற்சர்லாந்தில் ஏப்ரல் 2ம், 3ம் திகதிகளில் நிகழ்கிறது. அ.மார்க்ஸ், இந்திரா பார்த்தசாரதி, சேரன், அவைக்காற்றுக் கலைக் கழகத்தினர் மற்றும் வழமைபோல் வாசகர்கள், இலக்கிய ஆர்வலர்கள் கலந்துகொள்வர்.

மேலதிக விவரங்கட்டு: மனிதம், Postfach 12, 3000 Bern 11, SWISS.

ஜோன் பொபிற்றினதும் நண்பர்களது வாக்குமூலப்படி, ஜோன் பெண்கள் துன்பப்படும் அளவுக்கு மிருகத்தனமான உடற்சேர்க்கையிற் திருப்திப்படும் இயல்பினன். சில்லறைத் திருட்டுகளில் ஈடுபடும் பழக்கம் லொறேனாவுக்கு இருப்பது நிருபிக்கப் பட்டபோதும், ஜோன் தரப்பு காட்ட முற்பட்டது போன்று "கணவனிடம் திருப்தி காணாமையால் தாபமும் கோபமும் கொண்ட ஒரு பெண்" என நிருபிக்கப்படவில்லை.

சென்ற யூன் மாதம் 23ம் திகதி அதிகாலையில் இச்சம்பவம் நடந்தது. லொறேனா தரப்பு வாதப்படி மதுபோதையில் வீடு திரும்பிய ஜோன் லொறேனாவின் விருப்பத்திற்கு எதிராக உடற்சேர்க்கையில் ஈடுபட்டார். தனது உணர்வுகளை மதிக்காது நடந்த இச்செயலால் ஏற்பட்ட ஆவேசத்துடன் சமையலறையில் தண்ணீர் அருந்திக்கொண்டிருந்த லொறேனாவின் கண்களில் அங்கிருந்த 12 அங்குலக் கத்தி பட்டது. என்ன செய்கிறோம் என்ற உணர்வின்றி, தூங்கிக் கொண்டிருந்த ஜோனின் போர்வையை எடுத்துவிட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவரது ஆண்குறியை வெட்டி எடுத்தார். வெளியே போய்த் தனது காரில் உட்கார்ந்த பிறகுதான் ஒரு கையில் கத்தியும், மறுகையில் ஓர் 'உடல் உறுப்பு'ம் இருந்ததை லொறேனா உணர்ந்தார். உடனேயே 'அதை' ஒரு பற்றைக்குள் வீசிவிட்டு பொலிஸில் சரணடைந்தார். இந்த இடத்திலிருந்து ஜோனின் வாக்குமூலம் தொடர்ந்தது. "தூக்கத்திலிருந்து திடீரென எழுந்த நான் மிகுந்த வலியை உணர்ந்தேன். ஆனாலும் என்ன நடந்திருக்கிறது என்று தெரியவில்லை. படுக்கை விரிப்பு இரத்த மயமாயிருந்தது. நடந்தது என்ன என்று தெரிந்தவுடன் அடுத்த அறையிலிருந்த நண்பர் ஒருவரை உதவிக்கு அழைத்து வெட்டி எடுக்கப்பட்ட உறுப்பைக் கண்டுபிடித்தேன்" என்று துரதிர்ஷ்டமான அதிகாலையை விவரித்த ஜோனின் உறுப்பு, ஒன்பது மணி நேரச் சிகிச்சையின் பின் மீள இணைக்கப்பட்டது. எனினும் 'நிலைமை வழமைக்குத் திரும்ப'வில்லை.

ஒன்றன்பின் ஒன்றாய் வந்த சாட்சிகள் ஜோன் போபிற்றால் லொறேனாவுக்கு நிகழ்ந்த கொடுமைகளை விவரித்தன. காயங்கள் சாட்சி கூறின. நீதிமன்றம் நியமித்த மருத்துவர்களதும், உளவியலாளர்களதும் வாக்குமூலங்கள் உதவின. உடல், உள, பாலியல் ரீதியில் லொறேனா மிகவும் கொடுமைப்படுத்தப் பட்டதை இலகுவில் நீதிமன்றில் நிருபிக்க முடிந்தது.

தீர்ப்பின் பின்னர் ஆங்கிலத்திலும் ஸ்பானிய மொழியிலும் வாசிக்கப்பட்ட அறிக்கையில், தனது ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவித்த லொறேனா புண்படுத்தப்பட்ட பெண்கள் தமது நண்பர்களையோ ஆலோசகர்களையோ அவசியம் அணுகவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். தீர்ப்பின்போது நீதிமன்றத்தில் இல்லாமல் தொலைக்காட்சியில் வழக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ஜோன் போபிற் வழக்கின் முடிவு தொடர்பாகத் தனது ஏமாற்றத்தைத் தெரிவித்தார்.

தேசிய பெண்கள் அமைப்பின் நிறைவேற்று உபதலைவர் கிம் கன்டி கருத்துத் தெரிவிக்கையில் "தொல்லைகளால் மிகவும் புண்படுத்தப்பட்ட ஒரு பெண், சிறையில் அடைக்கப்பட வேண்டும் என்ற முறையற்ற வாதம் ஜூரர்களால் நிராகரிக்கப் பட்டமை குறித்து மிக

*ஜெகன்*

## காணாமல் போன விளக்கு

கைவிளக்கொன்று
காணாமல் போனதாய்
வானத்தால் பறந்து
வந்தது ஓர் சேதி.

இருண்ட தேசத்தில்
இருந்த விளக்குகளில்
அதுவும் ஒன்றாய்
திருடப் பட்டது.

இருட்டில் வாழ்வதில்
இன்பம் காண்போர்
அவர்கள்
விளக்கில் நின்று
முகத்தைக் காட்ட
தயாருமில்லை.

வீதி ஓரத்தில்
நின்று
வீராப்புப் பேசும்
மனிதர்களே!

விளக்கை ஏன்
பிடுங்கி ஒளிக்கிறீர்கள்
ஓ.....
வெளிச்சம் -
அது திருடனுக்கு
ஆபத்தானதல்லவோ!

www.tamilarangam.net

மகிழ்ச்சி அடைகிறோம், என்றாலும் இந்த வழக்கு இத்தனை வாதப் பிரதிவாதங்களுக்கு உட்பட்டமை - இந்த முழு நிகழ்ச்சி - பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான பாதுகாப்புத் தொடர்பான சட்டங்கள் துரிதமாக இயற்றப்படுவதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகிறது" என்றார்.

அரச வழக்குத் தொடுநர் போல் ஈபேட் இந்த வழக்கின் முடிவானது நடைபெற்ற சம்பவம் தொடர்பாகவும் அதற்காக வழங்கப்பட வேண்டிய தண்டனை தொடர்பாகவும் பிழையான செய்தி ஒன்றை மக்களுக்கு எடுத்துச் செல்லக்கூடும் என அச்சம் தெரிவித்தார். லொறேனாமீது குறிப்பிடத்தக்க அளவு அனுதாபம் எனக்குண்டு. ஆனால் அவரது செயலை நியாயப்படுத்த முடியவில்லை. சட்டங்களை மீறும்போது யாரும் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும். என்னைப் பொறுத்தவரை இந்த விதிக்கு இந்நிகழ்ச்சி விலக்காகிவிட முடியாது. முன்கதவால் அல்லாது லொறேனா பின்கதவால் அழைத்துச் செல்லப்பட்டதில் எனக்கு மிக்க திருப்தி" என்றும் அவர் சொன்னார்.

பரபரப்பான இச்சம்பவத்தை வைத்துப் பணம் பண்ணுவதில் ஜோனும் லொறேனாவும் இப்போது மும்முரமாகியுள்ளனர். தொலைக்காட்சி நிறுவனங்களும் வானொலி நிலையங்களும் இந்தக் கதைக்காகப் போட்டாபோட்டியில் இறங்கியுள்ளன; பலலட்சம் டொலர்களைக் கொட்டத் தயாராக உள்ளன. அமெரிக்காவிலும், அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் வானொலி நிகழ்ச்சிகளிற் பங்குபற்றச் சம்மதம் தந்ததன் மூலம் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட டொலர்களை ஜோன் போபிற் ஏற்கனவே பெற்றிருக்கிறார். லொறேனா இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட செய்தி நிறுவனங்களுடன் பேட்டிகளுக்குப் பதிவு செய்யப் பட்டிருக்கிறார். அமெரிக்காவின் இரு தேசிய தொலைக்காட்சி நிறுவனங்கள் தீர்ப்பு வழங்கப்பட முன் லொறேனாவின் பேட்டியை நேரடியாக ஒளிபரப்பின. மேலும், மூன்று திரைப்பட ஒப்பந்தங்கள் லொறேனாவுக்கு வந்திருக்கின்றன. ஆனாலும் லொறேனாவின் நண்பர்களது கருத்துப்படி இப்பணத்தின் பெரும்பகுதி வழக்குச் செலவுகளுக்கே போய்ச் சேரும்.

இந்த வழக்கின் வேடிக்கை என்னவெனில் சென்ற நவம்பர் மாதத்தில் இதே அரச வழக்குத் தொடுநர் ஜோன் போபிற்றுக்கு எதிராக, மனைவியைக் கொடுமைப் படுத்தும் கணவர் எனும் குற்றச்சாட்டின்கீழ் வழக்குத் தொடர்ந்திருந்தார். இருபத்தைந்து ஆண்டுகள் சிறைத் தண்டனைக்குரிய இவ்வழக்கில் ஜோன் குற்றமற்றவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப் பட்டார். அதாவது ஒரு காரணத்தைச் சுட்டிக்காட்டி ஒரு யூரர் சபை லொறேனாவை விடுதலை செய்த அதேவேளை, அதே காரணத்துக்காக ஜோன் போபிற்றைக் குற்றம் காண இன்னொரு யூரர்சபை தவறியது.

தீர்ப்பைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் இருந்து அழைத்துச் செல்லப்படுகையில் காவலர்களின் வாகனத்தில் இருந்து தனது ஆதரவாளர்களுக்கும் செய்தியாளர்களுக்கும் ஒரு புன்முறுவலையும் கையசைப்பையும் தந்தவாறு லொறேனா போபிற் தற்காலிகமாக மறைந்துவிட்டார். ஆனாலும் இந்த வழக்கு விசாரணையும் அதன் தீர்ப்பு ஏற்படுத்தக்கூடிய குறுகிய மற்றும் நீண்டகாலப் பாதிப்பு பற்றிய விவாதங்களும் மனைவியரைத் துன்புறுத்தும் கணவர்களுக்கு வரக்கூடிய லொறேனாச் சொப்பனங்களும் உடனடியாக மறைந்துவிடுவனவாகத் தோன்றவில்லை......

www.tamilarangam.net

# சுவடுகள்

## 'தேர்தல்த் திருவிழா ஓய்ந்ததுவே'

எந்த அரசியற் கட்சியும் தனது வெற்றி என்று அறிவிக்க முடியாத தேர்தல் உள்ளது. தேர்தலாக அண்மையில் நிகழ்ந்த உள்ளூராட்சித் தேர்தல் உள்ளது. ஆனால் பங்கேற்ற சகல அரசியற் கட்சிகள், சுயேச்சை முகமூடிக்குள் ஒளித்துப்பிடித்து விளையாடிய முன்னாள் தமிழ்ப் போராளிக் குழுக்கள் யாவுமே தமது வெற்றியாக இந்தத் தேர்தலை அறிவித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில், கிளாலியில் குண்டுவீச்சை நிகழ்த்திக்கொண்டு கிழக்கில் ஜனநாயத்தை அமுல்படுத்தித் தேர்தலை நிகழ்த்திக் காட்ட அரசு முயன்றதற்குத் தமிழ்க் குழுக்களும், முஸ்லிம் கொங்கிரசும் உடந்தையாகிக் கிழக்கு மாகாண, வவுனியாப் பிரதேச மக்களின் அவல வாழ்வைக் கேலிக்குரியதாக ஆக்கியுள்ளன. தமிழ் மக்களைக் கொன்றொழித்துவரும் இனவாத அரசுடன் கைகோர்த்தபடி ராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் தமிழ்க் குழுக்கள், தேர்தலில் தமிழர் நலனுக்காகத் தேர்தலில் குதித்ததாகப் பம்மாத்துக் காட்டின.

சுதந்திரமாகத் தேர்தலை நடத்தமுடியாத சூழல் இருந்தும் பலவந்தமாக நிகழ்த்தப்பட்ட இந்தத் தேர்தல் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் எதிர்ப்பின் பின்னும் நடத்தப்பட்டமை, மக்களின் கருத்துக்கோ கட்சிகளது கருத்துக்கோ அரசு செவிசாய்ப்பதில்லை என்ற வரலாற்றுண்மையை மீள நிறுவியிருக்கிறது.

இப்போது கிழக்கில் அமைதி நிலவுவதாகவும், வடக்கில் பயங்கரவாதமே நிலவுவதாகவும் உலகை ஏமாற்ற அரசுக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இது எந்த நிலைக்கு எதிர்காலத்தை இட்டுச் செல்லும் என்று தெரியாவிட்டாலும், தற்போதைக்கு இத்தேர்தல் ஒரு துர்க்குறியாகவே நிகழ்ந்துள்ளது.

சுவடுகள் 54,
மாசி 94
ஒஸ்லோ, நோர்வே.

www.tamilarangam.net

## முல்லைஅமுதனின் இரு கவிதைகள்

# எங்கள் பயணம் தொடரும்

பாலைவன வெளியில்
வாழ்வுப் புஸ்பங்களில்
தேனை
அள்ளிப் பருகுவதற்காக
சுரண்டல் சூறாவளியை
எதிர்த்து
குடும்பச் சுமை தாங்கும்
ஒட்டகமாய்
எங்கள் பயணம் தொடரும்.

வாழ்வுக் குழந்தையை
அள்ளி
அன்புடன் அணைப்பதற்காக
வறுமைத்
துப்பாக்கி வேட்டுகளைத்
தாங்கிக்கொண்டு
எங்கள் -
பயணம் தொடரும்.

வாழ்வெனும்
வேள்வித்தீக்கு விறகுதேடி
உழைப்புக்காடு நோக்கி -
எங்கள்
பயணம் தொடரும்!

இரத்த அருவி
சிந்திடினும்
கொடுமை முட்களை
முறித்து
விடுதலை ரோஜா
எனும்
இரத்தப் புஷபங்களைப் பறிப்பதற்காய்
எங்கள்
பயணம் தொடரும்.

# சூரிய உதயம்

இப்போதெல்லாம்
நாங்கள்
பாலைவன வருஷங்களைக்
கணக்கிட்டுப் பார்ப்பதேயில்லை.

எங்கள் கிழக்கில்
உதயம்
இன்னும் வரவேயில்லை.
ஆங்காங்கே
வெளிச்சக் கீற்றுக்கள்
வரும்.... போகும்.....
பிறகு எல்லாம்
இருளில்தான்.
சூரியன்....
நேற்று
மேற்கில் மறைந்ததாக
ஞாபகம்.

எங்களால்
பரப்பப்பட்டிருக்கும் கிளைகளை
மட்டும் வெட்டிவிடுகிறீர்கள்
வேர்களை
மறந்துபோகின்றீர்கள்.

வரும் காலங்களில்
மயான மேடுகளல்ல...
மனிதப்பயிர்கள்
வளரும் சோலைகளாக்குவோம்.


பிறகு..பிறகு....
சூரிய உதயம்
இங்கே
நிரந்தரமாகும்.

140391



www.tamilarangam.net

○ தங்கா




## நேரடி அனுபவச் சிதறல்கள்

கொழும்பில் இருந்து கினிகத்தேனை ஊடாக நுவரெலியா செல்லும் ஒருவர் உலகில் பெரும்பாலான வேறுபாடான காலநிலைகளை அனுபவிக்க முடியும்" எனச் சிறு வயதில் படித்த ஞாபகம். 'அப்படி அனுபவிப்பதற்கு அவர் சிறிலங்கா, குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழராக இருத்தல் கூடாது' எனும் நிபந்தனையையும் கற்பிக்காத (தீர்க்க தரிசனமற்ற) ஆசிரியர் மீது எனக்குக் கோபமாக வந்தது. ஹற்றன், கொட்டகல நோக்கிய பயணத்தில் இராணுவ அரண் கொண்ட பொலிஸார் எமக்கு வாழ்க்கையையே வெறுக்க வைத்துவிடுவார்கள்.

எங்கள் முதலாவது தரிப்பு அவிசாவளையில். என் நண்பர் 25 வருடகாலம் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். அவரின் வீடு செல்கிறோம். அவர் சிங்கள வீட்டில் வாடகைக்கு இருக்கிறார். எங்களை ஓரிரவு தன்னுடன் தங்கவைக்க 'நாங்கள் கொழும்பைச் சேர்ந்த தமிழர்' என வீட்டுக்காரருக்குப் பொய் சொல்கிறார். ஆனாலும் எங்களுக்கு ஓரிரவு தங்கக்கூட அனுமதி மறுக்கப் படுகிறது. அன்று பின்னேரம் முழுவதும் வீடுதேடி முடியாமல் போகிறது. எங்களை எச்சூழ்நிலையிலும் தங்கவைக்கும் நண்பர்கள் இருக்கும் எட்டியாந்தோட்டை செல்ல முடிவு செய்கிறோம். பஸ் நிலையத்தில் நண்பர் தனது இருப்பை அவிசாவளை பொலிசில் பதியும்போது நடந்த சம்பவத்தைச் சொல்கிறார்.

தனது சிங்கள நண்பருடன் தான் பொலிஸ் நிலையம் சென்றபோது "ஐயா வாங்கோ" என்ற பொலிஸ் அதிகாரியின் வரவேற்பு தனக்கு ஆச்சரியமாக இருந்ததாம். அடையாள அட்டையில் "பிறப்பு: யாழ்ப்பாணம்" என்றிருந்ததும், பொலிஸ் அதிகாரி மிகக் கோபப்பட்டு, "நீங்கதானடா எங்கட பெடியங்கள கொல்ற புலி" என்று கர்ச்சித்தாராம். நண்பருக்கு இருப்புப் பதிவு மறுக்கப்படுகிறது. அவ்வதிகாரி ஜொனி கண்ணிவெடியில் காலிழந்தவர்என்பது பின்னரே தெரியவந்தது.

எட்டியாந்தோட்டையில் மட்டும்தான் நான் பாஸ்போட்டைக் காவாது திரிய முடிந்தது. அங்கும் அரசியல் செல்வாக்குள்ள என் நண்பருடன் பாராளுமன்ற உறுப்பினரின் கடிதம் பெற இரண்டுமுறை அலையவேண்டி இருந்தது. கடிதம்

www.tamilarangam.net

இல்லாமலே அங்கு மட்டும்தான் குடாநாட்டுத் தமிழராகிய எங்களால் காலம்தள்ள முடிந்தது. "அங்க நீங்க அடிச்சுப்போட்டு இங்க பாதுகாப்பா வந்திருவீங்க, உங்களால நாங்க உயிரோடு வாழேலாது" (கொழும்பில் அண்மையில் அதிகரித்த வீட்டுவாடகை பற்றிய சம்பாஷணையின் போது), "நீங்க வெளிநாட்டுக் காசில கண்டபடி வீட்டுக்கூலி கொடுப்பீங்க. நாங்க எங்க கொள்ளை அடிச்சு கூலி குடுக்கிறது?" எனும் மலையகக் கோபக் குரல்களை அஹிம்சை மனதுடன் சகிக்க முடிந்தால், எட்டியாந்தோட்டையில் உல்லாசப் பிரயாணியாக இருக்கலாம்.

எனது அக்காவிற்கு றப்பர்ப் பால் எடுக்கும் முறை காண ஆசை. அவரை எட்டியாந்தோட்டையில் 'மிக அண்மை'யில் உள்ள றப்பர் தோட்டத்துக்கு அழைத்துப் போகிறேன். இரண்டரை மைல் பஸ்ஸிலும் இரண்டுமைல் நடந்து மலை ஏறியும் செல்லவேண்டும். அங்குள்ள 5ம் வகுப்பு வரையுள்ள தோட்டப் பாடசாலையையும் (5ம் வகுப்பிற்கு மேற் படிக்க நாலரை மைல் நடந்தே பிள்ளைகள் நகரம் வரவேண்டும்) லயன்களையும் கண்ட என் அக்கா "தொண்டமானுக்கு மண்டையில கொத்தவேணும்" என்கிறார். மலைநாட்டு அரசியல்வாதிகள் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மலைநாட்டில் பணிபுரியும் யாழ்ப்பாண ஆசிரியர் சிலர் (அல்லது பலர்) மலைநாட்டு மக்களை (எமது அரசியல்வாதிகளும், இயக்கங்களும் குடாநாட்டு மக்களை ஏமாற்றியது போல) ஏமாற்றியது உண்மைதான். ஆனாலும் அக்காவின் குரலில் உள்ள வன்மம் எனக்கு யாழ்ப்பாண சிந்தனையில் அதிகரித்துவிட்ட வன்முறையைத்தான் உணர்த்திற்று.

குடாநாட்டில் நடைபெறுவதாக கூறப்படும் 'மக்கள் யுத்தத்தின்' எதிரொலி மலைகளில் எதிரொலிக்கும் என நினைத்திருந்த எனக்கு ஹற்றன், கொட்டகல ஏமாற்றமாகத்தான் இருந்தது.

## சற்றே அதிகம்!

இலங்கையில் எய்ட்ஸ் நோய்க்குக் காரணமான எச்ஐவி வைரஸ் தொற்றலுக்கு உள்ளானோரின் தொகை குறைந்தது 3,000 இருக்கும் என எய்ட்ஸ் பரவலுக்கு எதிரான பொது அமைப்பு ஒன்று கூறியுள்ளது. அரச தகவற்படி இத்தொகை 1119 மாத்திரமே.


நாட்டின் பல பகுதிகளிலும் வாழும் மூவாயிரம் பேர்வரை இந்த வைரஸ் தொற்றலுக்கு ஆளாகியிருக்கலாம் என நம்பப்படும் அதேவேளை, விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு லட்சம் பேரும் (வாடிக்கையாளர் உட்பட) போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையான 30,000 பேரும் இந்த ஆபத்திற்கு உள்ளாகலாம் என அஞ்சப் படுகிறது.

சிவன்

வடக்கு கிழக்கில் நிகழும் புலிகளின் வெற்றிகரமான தாக்குதல்கள், பரவசமான பெருமையுடன் அரசியல் வம்புகளுக்கும், இராணுவத்தின் வெற்றிகரமான புலிகள் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் அரசைக் கோபத்துடன் வசைபாடவும் மட்டுமே பயன்படுகிறது. அரசியல் ஈடுபாடுடைய யாழ், மலைநாட்டைச் சோநத் இளைஞர்கள் மட்டத்தைத் தவிர, மற்றைய சமூக அடுக்குகளில் சாதாரண வாழ்வே நடைபெறுகிறது. தொண்டமான் போன்றவர்களுக்கு கோலாகலமாகப் பிறந்தநாள் கொண்டாடுவதுடன் மக்களின் 'அரசியற் பங்களிப்பு' முடிந்துவிடுகிறது. (தொண்டமானின் எண்பதாவதோ, எண்பத்தோராவதோ பிறந்ததினம் கொட்டகலையில் அலங்கார வளைவுகளுடன் வெகுவிமரிசையாகக் கொண்டாடப் பட்டது).

'மலைகளில் எழுந்திடும் சூரியன் - வடக்கின்

www.tamilarangam.net



# முங்க்கின் ஓலம்

உலகப் புகழ்பெற்ற நோர்வேஜிய ஓவிய எட்வார்ட் முங்க்கின் புகழ்பெற் படைப்புகளில் ஒன்றான ஓல அண்மையில் தேசிய காட்சியகத்தி இருந்து களவாடப்பட்டுள்ளது. ஒ நிமிடத்துக்கும் குறைவான நேரத்தில் இ திருடர்களால் துணிச்சலாக அதிகாலை நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த திருட்டு நோர்வேயின் கலைப்பிரியர்கை அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளது.

சரியாக நூற்றியொரு வருடங்களி முன் படைக்கப்பட்ட இந்த ஓலத்தி வெவ்வேறு விதப் பதிப்புகளை முங் படைத்திருக்கிறார் என்ப குறிப்பிடத்தக்கது.

சித்திரகுப்தன்

பனைகளைத் தழுவும்
பனை ஓலைகள் எழுப்பிடும் ராகம் -
மலை
முகட்டில் ஒலிக்கும்'

இது எப்போதோ நான் வாசித்த கவிதை.

மலைகளில் சூரியன் உதிக்காததும் பனை ஓலைகள் யாழ் குடாநாட்டுக்குள்ளே கிழிந்து கந்தலானதும் எமது அரசியல் துரதிர்ஷ்டம். தீர்க்க தரிசனமற்றிருப்பது என்பது எமது இயக்கங்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் மட்டும் ஏகபோக உரிமையா, என்ன? (கவிஞர்களுக்கு அந்த உரிமையை யார் மறுத்தது?) மலைநாட்டில் தேயிலைத் தொழிற்சாலைகளை ஆடைத் தொழிற்சாலைகளாக அரசு மாற்றியபின், வாடிநிற்கும் காய்ந்த தேயிலைச் செடிகளைப் போல், தோட்டத் தொழிலாளர்களும், மலைநாட்டு மக்களும் வாடுகிறார்கள். இது யாருமே கண்டுகொள்ள விரும்பாத மலைநாட்டுச் சோகம்.

எங்களது மலைநாட்டுப் பயணத்தில் மிகக் கலகலப்பாக இருந்தது கண்டி மாநகரம்தான். அதே அளவு எங்களுக்கு இனந்தெரியாத கலக்கத்தையும் உண்டுபண்ணியது. அளவுகடந்த பாதுகாப்பு நெருக்கடி. காரணம், கண்டி பெரஹர திருவிழா, கண்டி மாநகரத்தினுள் நுழையும் ஒவ்வொரு வாசலிலும் பயங்கரச் சோதனை. சிங்கள மக்களே எரிச்சல்பட்டுப் பொலிஸாரை ஏசத் தொடங்கி விட்டார்கள் என்றால் (பொலிஸாருக்குக் கேட்காமற்தான்) எங்கள் நிலை எப்படியிருக்கும்?

www.tamilarangam.net

ஓரத்தில் எங்களை நிறுத்திக் கடைசியாக விசாரிக்கிறார்கள். சிரமமான பரிசோதனைக்குப் பின் பல்கலைக்கழகப் பேராசிரியரின், விரிவுரையாளரின் பெயர்கள் ஞாபகம் இருந்ததால் கண்டிக்குள் நுழையமுடிகிறது. நண்பனின் வீடு செல்கிறோம், அங்கு அவன் இல்லை. மனைவியும் பிள்ளைகளும் வீட்டில் இருக்கிறார்கள். என்னை முன்பு காணாத நண்பனின் மனைவி, "கண்டியும் தமிழர்களுக்குப் பாதுகாப்பல்ல" என்பதைத் தன் கேள்விகளுடே உணர்த்தி விடுகிறார். அன்றிரவு ஹோட்டலில கழிகிறது. பாதுகாப்புக் கருதி அக்காவுக்குப் பெரஹரா காட்டுவதைத் தவிர்த்து, ஒரு நாளிலேயே மேற்கொண்டு பயணத்தைத் தொடர்கிறோம். அடுத்த நாள் நாம் தங்கியிருந்த பேராதனைப் பல்கலைக்கழகப் பகுதியில் 12 தமிழர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் எனும் செய்தியை வீரகேசரியில் படிக்கிறேன். இது என் அதிர்ஷ்டமா தமிழர்களின் துரதிர்ஷ்டமா? புரியவில்லை.

இலங்கைப் பயணத்தில் எனக்கு மிக அதிர்ச்சியூட்டியது – தமிழீழத் தலைநகர் எனப் புகழாரம் சூட்டப்பட்ட திருகோணமலைதான். தென் இலங்கையின் பெரும்பாலான சந்திகளிலும் வீதிகள் இரண்டாகப் பிரியும் மூலைகளிலும் ஒரு விளக்கும், பௌத்தர்களாற் புனிதமானதாகக் கருதப்படும் சிறிய அரசமரமும், எதையுமே கண்டுகொள்ளாத மௌனமான புத்தரும் ஒரு மலிவான தெருக்காட்சிதான். ஆனால் திருகோணமலையில் தடுக்கி விழுந்தாலும் புத்தர் சிலை குத்தித்தான் இரத்தம் வரும் எனுமளவு மூலைகளிளெல்லாம் அஹிம்சைக் கடவுள் புத்தர்தான் குந்தியிருப்பார். வரலாற்றுச் சிறப்பு மிக்க கோணேஸ்வரர் ஆலயத்தை மறைக்க, மிகத் தூரத்தே தெரியக் கூடியவாறு கோட்டைக்குள் மிக உயரமாக புத்தர் அட்டகாசமாக நிற்கிறார். அன்பே வேதமெனப் போதித்த புத்தன்மீது இவ்வளவு வெறுப்பை சிங்கள பௌத்தர்களைத் தவிர யாருமே உருவாக்க முடியாது.

இந்த பௌத்த நகரத்தை அடைவதுதான் மிகச் சிரமமான வழி. தெரிந்த நண்பரூடாக ஓரளவு ராணுவ நிறம் கொண்ட (மிருதுவான பச்சை) அரசாங்க வாகனத்திலேயே மிக அச்சத்துடன் பயணம் செய்கிறேன். (புலிகளும் இராணுவமும் சந்தேகத்தில் தாக்கக்கூடிய வாகனம்) ஹபறணையில் நண்பர் வழக்கமாக தேனீர் குடிக்கும் கடையில் தேனீர் அருந்துகிறோம். "இங்கு யுத்த பயமில்லையா?" என எனது கேள்வி. சிங்கள கடை உரிமையாளர் முன் காட்டைக் காட்டி "இங்கும் புலிகள் இருக்கலாம். சண்டை வந்தாப் பயம்தான். வீணா இரண்டு பக்கமும் பெடியன்மார் சாவுறதுதானே மிச்சம். பேசித்தான் தீர்க்கோணும் பிரச்சனையை" என்கிறார்.. புலிகளை இராணுவ பலத்தால் வெல்வது கஷ்டம் என்பதை உணர்த்துகிறார். "காட்டில் பிழைப்புக்காக வாழும் ஏழைகளை ஏன் புலிகள் கொல்கிறார்கள்?" என்றும் கேட்கிறார். நான் மௌனமாக நிற்கிறேன். அது எங்களின் 'அரசியல் வெறுமை' என்று கூறமுடியாமல் மௌனமாக நிற்கிறேன்.

(வரும்)


## தாயகம்

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு. தொடர்புகள்: 15/1,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

## மௌனம்

*கலை இலக்கிய முத்திங்கள் இதழ்.*
*தொடர்புகள்:* 6, Square du Roule/ 92200 NEIULLY S/ SEINE/ FRANCE.

www.tamilarangam.net

# யார் விபச்சாரிகள்?

**பூகம்பன்**




யாார் விபச்சாரிகள்? நோர்வேஜியப் பெண்களை விபச்சாரி என வியம்பும் ம்மவர், அவர்களைத் தேடி அலைவது ன்? அப்படி அலைபவர்களின் ள்நோக்கம் என்ன? கிடைத்தவரை லாபம் ன்பதா? எட்டாப்பழம் புளிக்கும் ன்பதால்தான் விபச்சாரி என்கிறார்களா? நாகரிகம் என்று, பண்டைய தமிழன் பால் காதில் கடுக்கனுடன் ஆணினத்தில் ாளிபோல அலைவது ஏன்? நிச்சயமாக நார்வே நாட்டு நங்கையரை சிகரிப்பதற்காகவே. நாகரிகமாக (style) ருந்தால்தான் விபச்சாரிகூடப் பார்ப்பாளா? பச்சாரிகள் யாரையும் லட்சியம் ...ில்லையே. இப்போது புரிந்திருக்கும் விபச்சாரிகள், யார் விபச்சாரிகளைத் அலைபவர்கள் என்று.

ங்கே உருளும்வரை உருண்டுவிட்டுப் தமிழ்ப் பெண்டிரைத் திருமணம் ய்துகொள்ளும் தமிழ் வாலிபர்கள் ால்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்.

* ஆண் எதையும் செய்யலாம். சேறு ண்ட இடத்தில் உளக்கித் தண்ணி கண்ட டத்தில் கழுபுபவனே ஆண்.

* கல்யாணம் செய்யும்முன் ஆண் ப்படியும் இருக்கலாம். கல்யாணம் சய்தபின் ஒழுங்காக இருக்க வேண்டும்.

* ஆண் கல்யாணம் செய்யமுன் ஆயிரம் சய்யலாம்.

* பத்தினிகள் பெண்களே, ஆண்களல்ல.

இவை அனைத்தும் ஆண்களும், இந்த ண்களின் உலகமும் தாம் தவறு சய்வதற்கும், தவறுகளை மறைப்பதற்கும் சால்லும் நொண்டிச் சாட்டுகள்.

எமது பொதுவான நோக்கில் விபச்சாரி என்றால் யார்? 'கணவனைத் தவிர வேறு ஒருவனுடன் காமத்தைப் பகிர்ந்துகொள்பவள்'. அப்படியெனில் இங்கே, பல தமிழர்கள் திருமணமாகுமுன் சேர்ந்து வாழ்கிறார்களே (cohabitation/ samboer). அப்படியானால் வரைவிலக்கணத்தை மாற்றுவோம். "கணவனை அல்லது வருங்காலக் கணவனைவிட வேறு ஒருவனுடன் காமத்தைப் பகிர்ந்துகொள்பவள்" என மாற்றுவோம். இப்போ வருங்காலக்

கணவன் அவளைவிட்டுப் பிரிந்தால், அதன்பின் அவள் வேறு திருமணம் செய்தால் அவள் விபச்சாரியா? குடும்பத்திற்கு ஆகாதவளா? இதேநிலைதான் நோர்வேஜியப் பெண்களது நிலை.

www.tamilarangam.net

கட்டிலை மட்டும் வைத்துக் கணக்குப் போடுகிறீர்களே, பெண்களுக்கு உள்ளம் ஒன்று உண்டு என்ற எண்ணமே இல்லையா என்று நோர்வே நாட்டவர் சிலர் கேட்கிறார்கள். கட்டிலைக் கணவனுடனும் கனவுகளையும் மனதையும் மற்றையவனுடன் மறந்திருக்கும் மங்கையரை மனதார ஏற்பீரா? அப்படிப் பெண்கள் செய்தால் தடுக்க முடியுமா? பெண்ணின் மனதை ஆழம்காண முடியுமா? இப்படியான பெண்கள் பத்தினிகளா? மனதால் இன்னொருவனை எண்ணும்போதே கற்பு இழக்கப்படுகிறது என்று கூறும் கண்ணகி பரம்பரைக் கற்புக் காவியங்கள் என்னாவது?

பத்தினிகளா? உத்தம புருசர்களா?

ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நான், நண்பர் ஒருவருடன் சென்றுகொண்டிருந்தபோது நண்பர் ஒரு நோர்வே நங்கையைக் காட்டி "அடக் கடவுளே! என்ன அழகான பெண்" என்றார். உண்மையில் அழகான பெண்தான். அவர் தொடர்ந்து கதைத்தது அவளது அந்தரங்க அங்கங்கள் பற்றி. இவர் திருமணமாகிப் பிள்ளையுள்ள ஒரு தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடக்கடவுளே என்றபோது நான் எண்ணினேன், லக்சுமி போல் இருக்கிறாள் என்று கூறுவார். ஆனால் அவர் சொன்ன

*நாம் வாழும் நாட்டவர் தொடர்பாக நாம் எத்தகைய கருத்துகளைக் கொண்டிருக்கிறோம்? அவை சரியா? இவைபற்றி நாம் விவாதித்திருக்கிறோமா? வாசகர் ஒருவர் இந்த விடயங்கள் தொடர்பாகத் தனது எண்ணங்களை இங்கு தருகிறார். இவைபற்றிய விவாதங்கள் வரவேற்கப்படுகின்றன.*

*- சுவடுகள் -*

நோர்வேப் பெண்கள் ஒருவனை நினைத்துக்கொண்டு இன்னொருவனுடன் வாழ்வதில்லை. அறிமுகமில்லாத ஒருவனுடன் படுக்கையைப் பகிர்ந்துகொள்வதில்லை. மதுபோதையில் நடக்கும் எதையும் இங்கே நான் கருதவில்லை. சாதாரண நோர்வேப் பெண்களையே இங்கு எழுதுகிறேன். போதை ஒரு சிறப்பு நிலை. இவர்கள் உடலின் இச்சையான காமத்தைக் கணக்குப் போடுவதில்லை. விரும்பியவனுடனே போய்விடுகிறாள். இவர்கள் மனத்தால் விபச்சாரம் செய்வதில்லை.

நோர்வேப் பெண்டிரை வேசியர் என்கிறீர்கள். ஆதலால் அவர்களின் புதல்வர்கள் வேசி புத்திரர்கள் இல்லையா? ஆகவே நோர்வே வேசியரையும் வேசிமக்களையும் கொண்ட நாடு. இங்கே எமக்கு என்ன வேலை? அவ்வாறெனில் நாம் வேசி வீட்டிலல்லவா வாழ்கிறோம்? ஆகா, நல்ல விடயம்! வேசி வீட்டில்

ஒரு வார்த்தையை எழுதுகிறேன். "இவள் எத்தனை பேருடன் கிடந்தாளோ, வேசி". வேசி என்ற பதத்தை நாம் சாதாரணமாகப் பாவிப்பதுண்டு. தாயைப் பார்த்து மகன் வேசி என்றும், தாயே மகனை வேசைமகன் என்றும் பேசுவதுண்டு. இதை எனது காதினால் பலமுறை கேட்டிருக்கிறேன். ஆனால் இப்படியான (இந்த) வார்த்தைப் பிரயோகம் இங்கே வேசியர் மத்தியிலேயே இருக்கும். இப்போ எண்ணிப் பாருங்கள், எமது அநாகரிகத்தை. இப்போ யார் விபச்சாரிகள்?

படத்தில் பார்த்துப் பெண் தேர்வு நடக்கிறது. திருமணம் முடித்து ஒரு வருடத்திற்குள் பிள்ளையும் பிறக்கிறது. இங்கே முழுமையான புரிந்துணர்வு இல்லாத, முன்பின் தெரியாத ஆணுக்குப் பெண் முந்தானை விரிக்கிறாள். அவள் யார் விபச்சாரியா? விபச்சாரிகள் முன்பின் தெரியாதவர்களுக்கும் முந்தானை விரிப்பதுண்டு.

ஓர் ஆண் காசுடன் போய்க் காமம்

www.tamilarangam.net

பகிர்ந்தால் அது விபச்சாரம். ஆனால் எம் பெண்களே காசுடன் போய் முன்பின் அறிமுகமில்லாத கணவனுடன் காமம் பகிர்வதை எப்படிச் சொல்வது? ஆனால் நாமோ சீதனம், சீர்வரிசை, சொர்க்கத்துத் திருமணம் என்கிறோம். விபச்சாரி காசு வாங்கியே விபச்சாரம் செய்வாள். ஆனால் காசுடன் எங்கள் பெண்கள்....? இது ஆண் செய்யும் விபச்சாரமா?

காசைக் கொடுத்தால் பொருளோ, உயிருள்ள விலங்கினமோ வாங்கலாம். ஆனால் நாம் சீதனம் என்று பேரம் பேசப்பட்டுப் பெண் காசுடன் போகிறாள். இது எதைக் காட்டுகிறது? தமிழ்ப் பெண்கள் ஜடப் பொருட்கள். அஃறிணைப் பொருட்களைவிட இழிந்தவள், மதிப்புக் குறைந்தவள் என்பதைக் காட்டுகிறதா? விபச்சாரிகூடப் பணம் வாங்கியே விபச்சாரம் செய்வாள்.

தன் பிள்ளையின் புட்டிப் பாலுக்காக, பிள்ளையின் உணவுக்காக, கணவனின் மருந்துக்காக தன்னுடல் விற்கும் பெண்கள் விபச்சாரிகளா? இவர்கள் உண்மையில் தியாகிகள், தெய்வங்கள்.

'நார்வே நாட்டவரின் கண்ணுக்கு பாலியற் பலாத்காரம் (கற்பழிப்பு)' என்றால் என்ன என்பதைக் கவனியுங்கள். ஒரு பெண்ணின் விருப்பமின்றி ஒருவன் உடலுறவு கொள்ள முயன்றால் அது பாலியற் பலாத்காரமே. இதைக் கணவனே செய்தாலும் சரி. தாய் தந்தையர் விருப்பத்திற்கு இணங்கத் தெரிவுறும் மணமகள் எப்படித் தன் முழுவிருப்பத்துடன் கணவனுடன் உடலுறவு கொள்ள முடியும்? இது ஒருவகையில் பாலியற் பலாத்காரமே.

நோர்வேஜியரின் பார்வையிலோ, அல்லது உலகின் பொதுவான பார்வையிலோ விபச்சாரி என்றால் யார்? வரைவிலக்கணம் என்ன? காசுக்குக் காமத்தை விற்பவள் விபச்சாரி. இதை நோர்வேஜிய மொழியில் கூறுவதெனில் En som selger sex er hore.

## என்று தீரும் இந்த.......

ஆட்கொல்லி நோயான எய்ட்ஸ் நோய் இன்று புற்றுநோயைவிட வேகமாக மனிதனை அழித்து வருகிறது. உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் சுமார் முப்பதுலட்சம் எய்ட்ஸ் நோயாளிகள் உலகில் பரந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் ஒன்றரைக் கோடி மக்கள் எய்ட்ஸ் வைரசின் தொற்றலுக்கு உள்ளாகி, எந்நேரமும் எய்ட்ஸால் பாதிக்கப்படக் கூடிய அபாயத்தில் உள்ளதையும் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. இவர்களிற் பாதிப்பேர் ஆபிரிக்காவின் தெற்கு சகாராப் பிரதேசங்களிலும் இருபதுலட்சம் பேர் ஆசியாவிலும், பதினைந்து லட்சம் பேர்வரை தென்னமெரிக்க நாடுகளிலும், எட்டுலட்சம் பேர்வரை வடஅமெரிக்க நாடுகளிலும், நான்கு லட்சம் பேர்வரை ஐரோப்பாவிலும் உள்ளனர்.

எய்ட்ஸைக் குணப்படுத்த மருந்து கண்டுபிடிக்கப்பட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் நெதர்லாந்தில் வைத்தியர் ஒருவர் (P.Reiss) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட ஒருவகைக் களிம்பு (cream) பிரபலம் அடைந்துள்ளது. உறவின்போது பெண்கள் பாவிக்கக்கூடிய இது, வைரஸ்களின் செயற்பாட்டை அழிப்பதாக நம்பப்படுகிறது. 150 பெண்களில் இது பரிசோதிக்கப் பட்டுள்ளது. தற்போது உலக சுகாதார ஸ்தாபனம் இது பற்றி ஆராய்கிறது. எனினும் இம்மருந்து அதிகமாகப் பாவிக்கப் பட்டால் வேறு ஆபத்துகளை ஏற்படுத்தலாம்.

– திருவளவன் –

www.tamilarangam.net



# சிதைவுகள்

சிதைவின் அருகே
சிறுமி ஒருத்தி
சுற்றிப் போர்த்திய மேலங்கி
உடலில்
முன்னே எறிந்த பார்வை
விழிகளில்
ஒற்றைச் செருப்பினை
இழந்த கால்கள்.
வெளிச்சம் கொண்டு விரிந்த
வானமும்
கருமை கொண்டு கலைந்த
கூந்தலும்.
சிதைவுகளிடையே தடியொன்று
தனியாய்,
அங்கே அனேக பாதச் சுவடுகள்
சிதைவினை அனேகர்
கடந்து போயினர்.

Benedikte Sukaifaal Bendiksen
(11வயது)

மனத் தடாகத்தினை நோக்கி கவிதையினை எறியும்போது தொடர்ச்சியான பல சிந்தனை வளையங்களை அக்கவிதை தோற்றுவிக்க வேண்டும். அவ்வகையான கவிதைகளே சிறப்பானவையாக வரலாற்றில் நிற்கக்கூடும். இக்கவிதையை எழுதியவர் ஒன்றும் பிரபலமான கவிஞரல்லத்தான். இதுவே, இவரது முதலாவது வெளிவரும் கவிதை. இக்கவிதையை எழுதியவர் ஒஸ்லோவில் பாலர் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் 11 வயதே நிரம்பிய சிறுமி என்பதுதான் என்னை மிகவும் ஆச்சரியப் படுத்தியது. வகுப்பில் வீட்டுவேலையாகக் கொடுக்கப்பட்ட படம் ஒன்றிற்கே சிறுமி இக்கவிதையை எழுதியிருக்கிறாள்.


"எனது பெரிய ஈடுபாடு குதிரை ஓட்டுவதுதான், ஆனாலும் பியானோவும் கற்று வருகிறேன். ஓய்வு நேரத்தில் பாடசாலைப் பாலர் இசையணியில் 'ட்றம்' வாசிப்பதும் உண்டு. என்னிடம் ஒரு Chinchilla (முயல்) உண்டு. அதன் பெயர் Tussi என்பதை எழுதிவிடுங்கள்" எனக் குழந்தையாகச் சிரிக்கிறார் இந்தச் சின்னக் கவிஞர்.

யோகி

www.tamilarangam.net

# யுத்தத்தில் உண்மைதான் முதலிற் பலியாகிறது

அருவசிருங்காரன்



இலங்கையின் அரசியல் வரலாற்றில் பல்லாயிரம் பேர் அரசியற் காரணங்களுக்காகச் சிறைவைக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்களிற் பலர் (மூவாயிரம் பேர்வரை என நம்பப்படுகிறது) தற்போது புலிகளாற் சிறை வைக்கப் பட்டுள்ளனர். இவர்களைச் சிறையிடுவதில் முக்கிய பங்கு வகித்த ஒருவரான மாத்தையாவும் இப்போது அதே சிறையில். மாத்தையா தடுத்து வைக்கப்பட்டுப் பல மாதங்களாக இந்தச் செய்தியை வெளியிடாது தடுத்து வைத்திருந்த புலிகளிடம் இருந்து இப்போது ஏராளமான குற்றச்சாட்டுகள் மாத்தையா பற்றி வைக்கப் படுகின்றன. தற்போது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் எழுத்து மூலமாக (ஒரு குற்றச்சாட்டு தவிர) எதுவும் வெளிப்படுத்தப் படவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் சமூகத்தின் பிரமுகர்கள் எனக் கணிக்கப்படுவோர் சிலரைக் கூட்டி நடத்தப்பட்ட சந்திப்பு ஒன்றில் கிட்டுவைக் காட்டிக் கொடுத்தது, பிரபாகரன், அன்ரன் பாலசிங்கம், பொட்டம்மான் உட்படப் பதினொரு சிரேஷ்ட உறுப்பினர்களைக் கொல்லும் சதியில் ஈடுபட்டது, உளவுப் பிரிவு உபதலைவர் பொற்கோவின் வாகனத்துக்குக் குண்டு வீசியது, கிட்டுவின்மீது குண்டெறிந்து தாக்கியது, புலிகளின் தலைமையை அழித்து அதற்குப் போட்டியாக இன்னொரு தலைமையை உருவாக்க முயன்றது போன்ற குற்றச்சாட்டுகள் இருந்ததாக செந்தாமரை பத்திரிகை கனடாவில் எழுதியுள்ளது. கடந்த வருடம் ஓகஸ்ட் மாத முற்பகுதியில் ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட பெரிய நடவடிக்கை ஒன்றின் மூலம் மாத்தையாவும், அவரது ஆதரவான புலிப்படைப் போராளிகள் நூற்றுக் கணக்கானோரும் (350பேர் என நம்பப் படுகிறது) கைது செய்யப் பட்டதாக அறியப்படுகிறது. இந்த நாட்களில் இருந்து மாத்தையா பற்றிய செய்திகளைத் தவிர்த்துவந்த புலிகள், கடந்த வருடத்தின் இறுதியிலேயே முதன்முதலாகப்

www.tamilarangam.net

பகிரங்கமாக மாத்தையா பற்றிச் செய்தி வெளியிட்டனர். ஆனால் அது ஒரு செய்திக் குறிப்பாக மட்டுமே இருந்தது. விவரமான தகவல்கள் இல்லாத காரணத்தால் அனேக செய்திகள் உறுதிசெய்யப்பட முடியாதனவாக உள்ளன. அண்மையில் கொழும்புத்

தகவல்களின்படி மாத்தையா உயிருடன் இருப்பதைப் புலிகள் உறுதிப்படுத்தியதாகத் தெரியவருகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்த பல பயணிகள், மாத்தையா கொல்லப் பட்டிருக்கலாம் என உறுதிப்படுத்தாத தகவல்களைக் கூறியிருந்தனர். ஆனால் மாத்தையா கொல்லப் படுவதற்கு எதிராக வெளியிலிருந்து மட்டுமன்றிப் புலிகளின் ஆதரவான இடங்களில் இருந்தும் கருத்துகள் வந்தமை மரண தண்டனையைப் பிற்போடக் காரணமாக இருக்கலாம் என நம்ப இடமுண்டு. கிட்டுவின் நினைவு நாளன்று மாத்தையாவுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று முன்பு செய்திகள் வெளியாகியிருந்தன.

இதேவேளை, மாத்தையாவின் நெருங்கிய சகா எனச் சந்தேகிக்கப்பட்ட யோகி, யாழ்ப்பாணத்தில் இருந்து ஐந்து வருடங்கள் வெளியேறக்கூடாது என்ற உத்தரவுடன் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப் பட்டிருப்பதாகவும், அவர் கிறிக்கெட் பயிற்றுவிப்பாளராகப் பிரபல கல்லூரி ஒன்றில் பணிபுரிவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

மாத்தையா பிரிவு என்ற பெயரில் இலங்கை உட்படப் பல இடங்களிலும் கிடைக்கும் பிரசுரம் ஒன்று, பிரபாகரன் விடுதலைக்கு எதிராக தமிழீழத்தைவிடத் தனது தலைமையே முக்கியம் என்ற கருத்தில் இயங்குவதாகவும், பிரபாகரனால் பல துரோகத் தனங்கள் இழைக்கப்



⌘⌘

## தூதர் வரவுரைத்தல்

சுகன்

இன்னுமேன் உறக்கம் எழுந்திருங்கள்
- இருந்தாப்போலை குரலொன்று கேட்டது.
நிதானமாய் எல்லோரும் ஒன்றாய் எழுவீர்
- இன்னோர் குரலும் இவ்வேளை கேட்டது.

எழும்பவும் முடியாமல் படுக்கவும் முடியாமல்
இருந்த ஓர் கரிநாளன்று
போட்ட உடுப்புகளை ஒப்படைத்து
அவர்கள் கூறியதாவது.

"இன்னும் யாரையெல்லாம்
பிடித்துவைத்திருக்கிறோமோ
அவர்கள் மிகவும் நலமுடன் இருக்கிறார்கள்
என்ற
அபிப்பிராயத்தை உருவாக்கி அவர்களை
வெளியில்
கொண்டுவந்துவிடலாம் என்று எங்களை
ஏமாற்ற முயலாதீர்"

போகும்வரை மௌனமாக இருந்தார்கள்
போனபின் அழுதார்கள் -

●

www.tamilarangam.net

## மௌனஉறைவு

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஏராளம் அரசியற் கைதிகள் தமிழ் இயக்கங்களாற் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். சிலர் கொல்லப்பட்டுமுள்ளனர். இவ்வாறு அரசியற் கைதிகளை நடத்தியதில், நடத்துவதில் புலிகளுக்கும் கணிசமான பங்குண்டு; மாத்தையாவுக்கும்கூட. இப்போது புலிகளால் மாத்தையாவே கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒரு அரசியற் கைதி என்ற வகையில் மாத்தையா, தனது உண்மை நிலையை விளக்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். விசாரணை நியாயமான முறையில் நடத்தப்படுவது உறுதி செய்யப்படவேண்டும். அவரது மிக நெருங்கிய உறவினர்களுக்கு அவரைப் பார்வையிட அனுமதி வழங்கப்பட வேண்டும். மாத்தையாவின் அடிப்படை வசதிகள் - மருத்துவ வசதி உட்பட - அவருக்கு ஒழுங்காகக் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும். மாத்தையாவின் அடிப்படை மனித உரிமைகள் அவருக்கு வழங்கப்படவேண்டும் எனச் சுவடுகள் வேண்டுகோள் விடுக்கிறது.

பட்டுள்ளதாகவும், அவ்வாறான துரோகத் தலைமைக்கு ஆதரவாக உள்ள சகல பத்திரிகைகள், ஸ்தாபனங்கள், தனிநபர்கள் என்போருக்கு எதிராகத் தாம் கடும் நடவடிக்கை எடுப்போம் என்றும் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிரபாகரனுடன் ஒத்த வயதுடைய மாத்தையா, புலிகளின் ஆரம்ப காலத்திலிருந்தே அதன் உறுப்பினராக இருந்தவர். புலிகளின் ராணுவப் பிரிவு கட்டியெழுப்பப் பட்டதில் மாத்தையாவின் பங்கு பெரியது. பிரபாகரனின் நம்பிக்கைக்குரியவராகப் பல சந்தர்ப்பங்களில் தன்னை வெளிப்படுத்தியவர். சில வருடங்களின்முன் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவர், 'பிரபாகரனை ராணுவம் கைது செய்தால்?' என்று கேள்வி எழுப்பியபோது 'அந்த இடத்தில் புல் முளைக்கப் பல வருடங்கள் ஆகும்' என்று தனது விசுவாசத்தை வெளிப்படுத்தியவர். பிரபாகரன் இல்லாத சந்தர்ப்பங்கள் சிலவற்றில் முழு அதிகாரத்துடன் புலிகளின் தலைமையை நடத்தியவர். புலிகள் முதற்தடவையாக அரசியலில் ஈடுபடுவதற்காகத் தம்மை அரசியற் கட்சியாகப் பதிவு செய்தபோது, அதனை வழிநடத்தியவர். இறுதியில், தமிழீழ வரலாற்றில் துரோகி என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டப்பட்ட மிகப் பெரிய புலிகளின் தலைவர் என்ற நிலை மாத்தையாவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

புலிகளால் மாற்றுக் கருத்துக் கொண்டோர் கைது செய்யப் பட்டபோது அவர்களது விடுதலைக்கு ஆதரவாகக் குரல்கள் எழுந்தபோது, அந்தக் குரல்களைத் தமிழ் மக்களது விடுதலைக்கு எதிரான குரல்களாகக் காட்ட முயன்ற புலி ஆதரவாளர்களால் மாத்தையா பற்றி எதுவும் பேசமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மாத்தையா பகிரங்கமாக விசாரிக்கப் படுவாரா? அவரது நிலையைப் பகிரங்கமாகத் தெளிவுபடுத்த அனுமதிக்கப் படுவாரா? ஒரு அரசியற் கைதிக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் அவருக்கு வழங்கப்படுமா? மாத்தையா பற்றிய விசாரணைகளில் வெளிவரும் தகவல்களாவது பகிரங்கமாக ஆக்கப்படுமா? மாத்தையாவுடன் கைதானதாகக் கூறப்படும் போராளிகளது நிலை என்ன? மாத்தையாவின் 'இழப்பு' புலிகளுக்கு எந்தப் பின்விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது? இப்படிப் பல கேள்விகள். விடைகள் சொல்லத்தான் யாருமில்லை.

www.tamilarangam.net

## காகத்தின் கால்மொழிக் கடிதம்

சோலைக்கிளி

நீ தேவைக்காகவே கடிதம் எழுதுவாய்.
இடையில் சுகம் விசாரித்தோ,
நட்பைப் பேணியோ,
ஒரு கடிதம் எழுதவில்லை இதுவரை நீ
நினைத்துப்பார்!

இன்றும் எழுதியிருக்கிறாய்,
ஒரு தேவையை மையமாகவைத்து
விரல் தேய்ந்த
ஒரு காகம் கிழித்த மடல்.

நீ பேனாக்களைப் பூட்டிவைத்து எவ்வளவு
காலம்!
எதையும் எழுதி
கிறுக்கி அனுப்ப எனில்,
விரல் தேய்ந்த,
அல்லது நகம் உதிர்ந்த,
காகங்களைத் தேடிப் போகிறதே, உன் நெஞ்சு
தமிழென்ன அவ்வளவு இழிவா!

நான் தேவைக்குப் பாவிக்கும் ஒருபண்டம்
அல்ல.
மனம் வைத்தால்
நானும் மனம்வைத்து
என்னை அள்ளி வார்க்கின்ற ஒருவன்.
உறவுள்ளோர்,
தினமும் நனைகின்ற தேன்குடம்.

எப்படி எழுதுவேன் இதற்கு நான் பதில்!
முழுமையாய் வாசிக்க,
படித்த காகமும் என்னிடம் இல்லையே,
இன்னுமொரு
காகத்தின் கால் மொழி அறிய!

## ஏகலைவ பூமி

1.

ஓ பாண்டுகுமாரர்களே, கௌரவர்களே,
பல தேசங்களதும் மாரதர்களே,
அனைவரும் வருவீர்.
வந்து
அவரவர் பீடங்களில் ஏறி அமர்வீர்.
நும் பட்டங்களையும் பதவிகளையும்
விருதுகளையும்
பதாதைகளிற்
கொட்டையெழுத்துக்களிற் பொறித்து
நும் தலைகள் மேற் தொங்க விடுவீர்.
நும் சாதனைகளை
நீளமானதொரு சீலைச் சுருளில
நிரைப்படுத்திக்
கைகளிற் தாங்கிக் கொள்வீர்.
சான்றிதழ்களாலும் வெற்றிக்
கிண்ணங்களாலுங்
கேடயங்களாலுஞ்
சமைந்த சுவரொன்றால் நீவிர்
நும்மைச் சூழ்ந்துகொள்வீர்.
நும் தோள்களை அலங்கரித்த
பொன்னாடைகளும் ஆரங்களும்
நும் தலைகளில் அமர்ந்த கிரீடங்களும்
அலங்காரமாகத் தொங்க
நும் பெருமைகளைப்
புலவோரைப் பாடச் செய்வீர்.
ஏனெனில்
இது ஏகலைவர்களது பூமி -
இதுபோல் இன்னோரிடம்
வேறெங்குமே இல்லாது போகலாம்.

2.

ஒரு பாண்டுகுமாரனின்
கண்களிற் தெறித்த பொறாமைக்காக,
அவனை இணையற்ற வில்லாளி என
உலகம் வியந்து கொண்டாடுவதற்காக

www.tamilarangam.net

அறுக்கப்பட்டது
ஒரேயொரு கட்டைவிரல்தானா?
உரிமை மறுக்கப்பட்டவன்
ஒரேயொரு மாவீரன் தானா?
காலங்காலமாக
இத்தனை யுகங்களிலும்
எத்தனை கட்டைவிரல்கள்
கருவிலேயே களவுபோயின -
பெண்ணாகப் பிறந்ததால்,
நிறமுங் குலமும் மொழியும் வேறானதால்,
நாடும் மதமும் மாறுபட்டதால்,
சுரண்டத் தெரியாத வர்க்கமென்பதால்,
ஏழை என்பதால்
எத்தனை கட்டைவிரல்கள்
அறுந்துபோயின?
இந்த
கலைவர்களின் பூமியில்
த்தனை கைகள் இயங்காது கட்டுண்டன?
டுகளும் எழுதுகோல்களும்
வீரத்தின் விளையாட்டுக் களங்களும்
எத்தனை பேருக்கு எத்தனைமுறை
மறுக்கப்பட்டன?

3.

ஓ,பாண்டுகுமாரர்களே, கௌரவர்களே,
பல தேசங்களதும் மாரதர்களே
உங்களது இந்த இறுதி யுகம்
முடிவதற்கு முன்னம்,
உங்களது மூச்சு அடங்கி
ஓய்வதற்கு முன்னம்
உங்களது மேம்பாடுகளனைத்தையும்
இப்பொழுதே பறைசாற்றுக.
ஏனெனில்
இதுபோல் இன்னொரு கணம்
இனியெப்போதுமே
இல்லாது போகலாம்.
இந்த ஏகலைவர்களது பூமி
மெல்ல அதிர்கிறது.

4.

இன்றைய ஏகலைவர்கள்
கட்டை விரலின்றி நாணேற்றக்
கற்றுக்கொள்ளக் கூடும்
கருவிலே விரலறுக்குங் கைகளை
அவர்கள் துண்டிக்கக் கூடும்,
ஏகலைவர்களது அறுந்த விரல்கள்
மீண்டும் ஒருவேளை
முளைக்கவுங் கூடும்.
அவர்கள் இந்தப் பூமியைக் குலுக்கிப்
பூமி நடுக்கி
வாய் பிளந்து
உம்மை விழுங்கிடு முன்
ஓ, பாண்டுகுமாரர்களே.........

● சி.சிவசேகரம்



## தலைவரா தொண்டரா?

*பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயருக்கு இது மிகுந்த கஷ்டகாலம் போலுள்ளது. 1993ல் தலைமைப் பதவியையும் ஆட்சியையும் ஒருவாறு தக்கவைத்துக் கொண்ட மேஜரின் தலைமைப் பதவி தற்போது ஆட்டங்காணத் தொடங்கியுள்ளது. மே மாதம் நிகழவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் கொன்சர்வேடிவ் கட்சி தோல்வியுறின் அவரது தலைமைப் பதவி பறிபோகக்கூடும். அவர் தொண்டராக நேரலாம். அபிப்பிராய வாக்கெடுப்புகள் கொன்சவேடிவ் கட்சியின் தோல்வியைச் சுட்டிநிற்கின்றன.*

— சுபாஸ் —

www.tamilarangam.net

# நோபலின் கதை

சாள்ஸ்

RFA 70

உலகில் அதியுயர் கௌரவ விருதான நோபல் பரிசை யாருக்கு வழங்கப் போகிறார்கள் என்பதை அறிய வருட இறுதியில் உலக செய்தித் தாபனங்கள் பலவற்றின் கவனம் சுவீடன் நோக்கித் திரும்பும். இந்த வரலாற்றுப் பெருமையை சுவீடனுக்குத் தேடித் தந்தவர் அல்பிறட் நோபல்.

தான் இயற்கை எய்தியபின் தனது மூன்றரைக் கோடி குறோணர்களுக்கு மேற்பட்ட பெறுமதியான தனது சொத்துகளை அறக்கட்டளை ஒன்றின் மூலம் பரிபாலித்து, அதன் வருமானத்தைச் சர்வதேச ரீதியில் மருத்துவம், இலக்கியம், இரசாயனம், பௌதீகம், உலக அமைதி ஆகிய துறைகளில் மனித இனத்துக்கு உதவக்கூடிய விதத்தில் பங்களிப்போருக்குப் பரிசாக வழங்கவேண்டும் எனத் தனது உயிலில் எழுதி வைத்தார் நோபல்.

1896இல் நோபல் மறைந்தபோது அவரது விருப்பத்தை நிறைவேற்றுவது அவரது உறவினர்களான றொல்ஃப் சோல்மன் (Rolf Sohlman), றுடொல்ப் லில்யக்விஸ்ற் (Rudolf liljekvist) ஆகியோருக்கு இலகுவாக இருக்கவில்லை.

பரிசுத் தொகையானது குறிப்பிட்ட நாட்டவர் என்பதைக் கருத்திற் கொண்டோ, ஸ்கன்டினேவியர்க்கு முன்னுரிமை வழங்குவதாகவோ இல்லாது, தகுதியை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட வேண்டும் என்ற உயிலின் வாசகங்கள், தேசிய உணர்ச்சி கொழுந்துவிட்டெரிந்த அந்த வேளைகளில் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகின.

தனது ஒன்பதாவது வயதில் ரஸ்யாவில் குடும்பத்தினருடன் குடியேறித் தனது இளமைக்காலத்தை அங்கு கழித்த அல்பிறட் நோபல், சுவீடன் நாட்டைச் சேர்ந்தவராயினும் பல நாடுகளில் வியாபாரமும், ஆளாயச்சிகளும் செய்ததால் எந்த நாட்டிலும் பிரஜாவுரிமை பெற்றிருக்கவில்லை.

இத்தாலியில் கோடை வாசஸ்தலத்தில் கோடைகளைக் கழித்த இவரது பிரதான வதிவிடம் பாரிஸ் நகரம். வருடத்தில் குறுகிய காலத்தில் மட்டுமே சுவீடனில் வசித்தவர் நோபல். இதனால் உயிலை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்களை சோல்மன் உணர்ந்திருந்தார். நோபலின் உறவினர் சிலரும், சுவீடன் அரசனான இரண்டாவது ஒஸ்காரும்கூட உயிலை நிறைவேற்ற முட்டுக்கட்டை போட முற்பட்டனர்.

பிரான்ஸ் அல்லது இத்தாலியில் நீதிமன்றத்திற்குப் போனால் உயில் நிறைவேற்றப் படாமற் போகக்கூடிய ஆபத்தை உணர்ந்த சோல்மன், நோபலின் உறவினர்களை முந்திக்கொண்டு பாரிஸில் நோபலின் வீட்டில் பாதுகாக்கப் பட்டிருந்த விலையுயர்ந்த நிறுவனப் பங்குகளை ஆயுதங்களுடன் பாதுகாத்து அந்நகரப் பொலிசார் துணையுடன் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்த்தார். அடுத்த வருடம் இத்தாலியில் இருந்த சொத்துகளும் விற்கப்பட்டு சுவீடனின் காள்ஸ்கூகா (Karlskoga) நகர நீதிமன்றில் நோபல் சுவீடன் பிரஜை என்பதை நிரூபித்தார் சோல்மன்.

இவ்வாறு நிறைவேற்றப்பட்ட நோபலின் விருப்பப்படி 1901இல் முதற்தடவை நோபல் பரிசு வழங்கப்பட்ட போது ஒவ்வொரு பரிசும் ஒன்றரைலட்சம் குறோணர்களாக இருந்தது. 1971இல் 5,10,000 குறோணர்களாக வளர்ந்த இப்பரிசின் இன்றைய பெறுமதி 67லட்சம் (சுவீடிஸ்) குறோணர்கள் ஆகும். நோபல்ப் பரிசு வழங்கப்படத் தொடங்கியபோது சுவீடனின் கீழ் இருந்த நோர்வே 1905இல் முழுமையான தன்னாட்சி பெற்றபோது சமாதானத்திற்கான பரிசு நோர்வேயில் தீர்மானிக்கப்பட்டு வழங்கப்படலாம் எனத் தீர்மானம் செய்யப்பட்டது.

www.tamilarangam.net




# 2 பாகம்

அத்தியாயம் 2

**ஆதவன்**

புதன்
வியாழன்
வெள்ளி
சனி

சனிக்கிழமை வந்தேவிட்டது. கந்தவனம் மாஸ்ரர் வீட்டை போவதா இல்லையா என்று இன்னமும் முடிவெடுக்கவில்லை. ஆனால் உடல் என்னவோ தான் முடிவெடுத்துவிட்டேன் என்பதுபோல், காலையில் எழும்பியது. 'சேவ்' எடுத்தது..... குளித்தது.... சாப்பிட்டது..... மடித்து வைத்திருந்த 'சேட்'டை எடுத்து மாட்டியது. அதுவும் நீலச் சேட்டை மாட்டியது. மனதைக் கேட்காமலே உடல் இந்த முடிவுகளுக்கு வந்ததையிட்டு ரகுநாதன் சிரித்தான். மௌனமாய் ஒரு பாடல் பாடினான்.

'உடல் ஒரு குரங்கு - மனித
உடல் ஒரு குரங்கு - அது
தாவிவிடும் தப்பி ஓடிவிடும் - நம்மை
பாவத்தில் ஏற்றிவிடும்'

'லோங்சை'யும் மாட்டிவிட்டு அப்படியே கொஞ்சநேரம் உட்கார்ந்தான். போவமா? விடுவமா? போனால்..... சுசீலா ஏதும் புதிய தொடக்கங்களுடன் காத்திருப்பாளா? அல்லது பழைய முடிவுகளுடன், 'நீங்கள் சந்தோ ,மாக வாழவேண்டும் என்பதே என் ஆசை. என்னை மறந்துவிடுங்கள். அவை கனவுகளாகவே இருக்கட்டும். நீங்கள் தீய பழக்கங்களை எனக்காகவேனும் விடவேண்டும்' எனும் புதிய புத்திமதிகளுடன் காத்திருப்பாளா? போகாமல் விட்டால்.... தன்னையும் எமது பழைய காதலையும்கூட மதிக்காத அளவுக்கு அவர் மாறிவிட்டார். அவரைத் தீய பழக்கங்கள் ஆட்கொண்டுவிட்டன

www.tamilarangam.net

என நினைத்து அவள் புண்படமாட்டாளா? என்னையும் எமது காதலையும் மதித்த மாஸ்ரா புண்படமாட்டாரா? ஒரேயடியாக எல்லோருமே என்னை வெறுக்க மாட்டார்களா?

கேள்விக்குறிகளே எழுந்து நிற்கின்றன. எந்த முடிவு எடுத்தாலும் கேள்விக்குறிகள்தான் என்றால் என்ன செய்யலாம். இதனால்தானோ என்னமோ என் மனதைக் கேட்காமல் உடம்பு முடிவெடுத்திருக்கிறது.

தாகூரின் கவிதைவரி ஒன்று நினைவு வந்து.... ரகுநாதனைச் சைக்கிளில் ஏறப் பண்ணியது. அந்த வரிகள் Stray birdஇல் வருகின்றன.

"I never choose the best
the 'best' chooses me"
என்பதுதான் அது.

மாஸ்ரர் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு 'கராஜ்' இருந்தது. அங்கே சைக்கிளை விட்டிட்டு விறாந்தைப் படியிலை செருப்புகளைக் கழற்றி விட்டிட்டு "மாஸ்ரர் மாஸ்ரர்" எனக் குரல் கொடுத்தான் ரகுநாதன்.

'சனி நீராடு' என்ற பழமொழிக்கேற்ப கந்தவனம் மாஸ்ரர் தலையைத் துடைத்துக்கொண்டு விறாந்தைக்கு வந்தார்.

"வாரும் ரகு வாரும். நான் நீர் வரமாட்டீரோ எண்டு நினைச்சன். ஆனால் கா மணித்தியாலம் முந்தியே வந்திட்டீர். விஷயம் அப்பிடியான விஷயமாக்கும்"

இந்த வாத்திக்கு 'அறுவை வாத்தி' எணட் பட்டமும் நக்கல் வாத்தி என வேறு ஒரு பட்டமும் இருந்ததை ரகுநாதன் நினைச்சுப் பார்த்தான். மெல்லிய புன்னகை பூத்தான்.

"சுசீலா இப்ப வருவா எண்டு நினைக்கிறன். நீர் இதிலை இருந்துகொள்ளும். நான் சாமி கும்பிட்டிட்டு வாறன்" என்றபடி மாஸ்ரர் உள்ளே போய்விட்டார்.

மாஸ்ரர் வீட்டுச் சுவரெல்லாம் மேய்ந்துவிட்டு கண்கள் தெருவை நோக்கிய அதே சமயம் - வீட்டுக் கேற்றைத் தள்ளியபடி நீல சேலையில் மெதுவாக அடியெடுத்து உள்ளே வந்துகொண்டிருந்தாள் சுசீலா.

பல வருடங்களுக்கு முன்னர், இதயத்தைக் கொன்று... ஆத்மாவை ஆட்டிவைத்த அந்த அழகுத் தெய்வம் அடிமேல் அடியெடுத்து மெதுவாக ரகுவின் இதயவாசலை நோக்கி வருவது போலிருந்தது. ஒரு கணத்தில்..... தன்னையே மறந்து ஓடிப்போய் 'என் சுசீலா எங்கே போனாய் இவ்வளவு காலமாக?' என்றபடி அவளைக் கட்டியணைத்து முத்தமழை பொழியவேண்டும் போலிருந்தது ரகுவிற்கு. ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டான்.

வாசலில் செருப்பைக் கழற்றிய லாகவம். ஆகா... ஒரு கையால் சேலையின் 'பிளீட்சை'ப் பிடித்தபடி... மறுகை சுவரில் ஊன்றியபடி..... தலை சற்றே குனிய... கால்கள் செருப்பைக் கழற்றின. கண்கள் நிமிர்ந்து ரகுவைப் பார்த்தன. எவ்வளவு வினாக்கள்.... எவ்வளவு விசாரிப்புகள்..... எவ்வளவு ஆறுதல்.... ஆர்வம்.... அமைதி.... எல்லாவற்றையும் கொட்டித் தீர்க்கின்றன இந்தக் கண்கள். சொற்ப நேரத்தில் இவ்வளவு விஷயம் கொட்டித் தீர்க்கும் இந்தக் கண்கள் அவளுக்கேயுரியவை. மெல்ல வந்து எதிரே இருந்த கதிரையின் நுனியில் இருப்பதுபோல, இருந்துகொண்டாள்.

www.tamilarangam.net

"நீங்கள் வந்து கனநேரமே?" கேட்டாள்.

அதே குரல்.... அதே பல்வரிசை.....

"ஆரும் பாக்கப் போகினம்... ஐயோ விடுங்கோ..." என்று பதறிய பதறுகிற அதே குரல். ஆனால் சங்கீதம் படித்த விழைவால் சாரீரத்தில் இப்போ நடுக்கம் இல்லை. சுருதி ஒன்றுதான்.

"நான் எங்கையும் பிந்திப் போறதில்லை" என்றான் ரகு.

"நானும் அப்படித்தான். ஆனா இண்டைக்குக் கொஞ்சம் late"

"நீங்கள் இண்டைக்கு மட்டுமில்லை, எப்பவுமே எதிலையுமே lateதான்" என்று சொல்ல வாயெடுத்தவன் "இண்டைக்கு மட்டுமில்லை..." என்று மட்டும் சொன்னான்.

சுசீலா மெவாகச் சிரிக்க முயன்றாள். ரகுவின் பூடகமான வார்த்தைகளில் மனசு துடிக்கிறது என்பதை, எந்த முகபாவம் காட்டினால் மறைக்கலாம் என்று ண்டாடிக் கொண்டிருந்தாள்.

கடவுளுக்கு நன்றிகள்: தவனத்தார் வந்து


வந்திட்டீரே பிள்ளை. ண்டைக்குச் சனிக்கிழமை வீட்டு லையள் இருந்திருக்கும். அதுதான் ந்தி வந்திருக்கிறீர். இருந்து றுதலாக் கதைச்சிட்டுப் ாங்கோ... எனக்கு இன்னும் ஒரு லுவல் இருக்கு. முடிச்சிற்று யாறன்" என்றபடி மீண்டும் ளே போனார்.

"மாஸ்ரர் ஆள் மாறேல்லை. முந்தி ாதிரியே இருக்கிறார்" என்றாள் லா.

ாஸ்ரர் மட்டுமில்லை" என்றான்

ான் மாறியிருக்கிறன் ளுக்குத் தெரியாது"

தையை மாற்றிறதிலை



மாறாமல் இருக்கிறியள் எண்டுதான் சொன்னனான்"

"நீங்களும் அப்பிடியேதான் இருக்கிறியள், மாறேல்லை"

"என்னத்திலை"

"அவசரத்திலை"

இருவரும் இப்போ சகஜமான உரையாடலுக்கு வந்துவிட்டதுபோல் சிரிக்க முயன்றார்கள். சிரித்தே ஆகவேண்டும். அந்த logicஇன் முடிவு நகைச்சுவை கலந்த.... இணக்கம் காணும் உரையாடலுக்குத்தான் இட்டுச் செல்லும். ஆனால் மனசுகள் ஏதோ ஒன்றை இழப்பதுபோல் தவித்துக் கொண்டிருந்தன.

ரகுநாதன் ஒண்டும் பேசவில்லை. பெரிய பெருமூச்சொன்று தானாக வெளியே வநத்து. கந்தவனம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாஸ்ரரின் சுவரிலுள்ள படங்களை விட்ட இடத்திலிருந்து கண்கள் மேய ஆரம்பித்தன. எதுவும் சொல்லத் தோன்றவில்லை. நெஞ்சு நோவது போலிருந்தது. இவளை ஏன் நான் பிரிந்தேன்? எது என்னைப் பிரியவைத்தது? அவளும் என்னைப் பிரிந்துதானே போனாள்? எப்படி முடிநத்து அவளால்?

சமூகநியதி, காலமாற்றம், பெற்றோர் எதிர்ப்பு இவைகளெல்லாம்தான் எம்மைப் பிரிய வைத்தன என்று சொல்லலாமா? ஆம்! என்றால் அந்த முடிவுக்கு ஏன் என்னால் உடன்பட முடியவில்லை. 'ஆம்' என்று அவளும் சொன்னால் அவளாலும் உடன்பட முடியவில்லை என்பதை அவளது கண்களும நளினமும் எனக்குக் காட்டவில்லையா?

'இல்லை' என்றால்... நான் இன்னும் ஏன் காத்துக் கொண்டிருக்கிறேன். அவளிடம் நேரடியாகவே வி[illegible]யத்தை உடைத்து அவளை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதானே. 'இல்லை' எற்று அவள் நினைத்தால்.... அவள் ஏன் இன்னமும் போட்டு உடைக்கவில்லை? இன்னமும் ஏன் கண்களைக் கைகளா பொத்திக்கொண்டு விர இடுக்குகளால் பார்க்கிறாள் பெண்மையின் தன்மை இதுவே எனவும் முடிவெடுக்க முடியவில்லை.

ஒருவேளை -

எல்லாவற்றையுமே போட்டுடைத்து....

"நான் உங்களுடையவள்தான் வாருங்கள் ரகு என்னிடம்" என்று சொல்லத்தான் வந்திருக்கிறாளோ?

சுவரிலுள்ள படங்களைக் கண்கள் மேயவில்லை இப்பொழுது. கண்கள் தன் பாட்டில் எங்கோ மேய்ந்துகொண்டிருந்தன சிந்தனைக்கும் கண்களுக்கு தொடர்பில்லை.

"அவசரக்காரன் எ சொன்னதுக்காக, பயங்கர இருக்க வேணுமெண்டில் என்றாள் சுசீலா. கீழ்ச்சொண் வழியாக - அவள் எப்பொ ரசிக்கும் அந்தப் பல்லுத் தெரிந்த

"ஒண்டுமில்லை சுசீல, உங்களோடை என்ன கதைக்கிறதெண்டு எனக்குத் தெரியாமலிருக்கு. ஒருவேளை எல்லாம் ஏற்கனவே போட்டனோ தெரயேல்லை"

"நான் மட்டும் ஏதோ வெ கதைக்கிறன்"

"ஏன் உங்களுக்கெ நல்லாத்தானே இருக்கிறியள்"




## புதிய நூல்
சிவன்

1992இல் உலகில் அகதிகளின் தொகை தினமும் பத்தாயிரத்தால் அதிகரித்தது. ஒரு கோடியே 82லட்சம் அகதிகளுடன், உள்நாட்டில் இடம்பெயர்ந்த இரண்டுகோடி 40லட்சம் மக்களும் உலகின் அகதித் தொகையை முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்தனர். அகதிகள் தொடர்பான பல தகவல்களை உள்ளடக்கிய நூலொன்றை அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ளது. நூலைப் (ISBN 0 14 02.3487x) பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Penguin Books Ltd/ 27 Wrights lane/ London W8 5TZ, UK. விலை 14 டொலர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்டையோட்டின் சரித்திரம்

*சிவன்*



*Tsar Nicolaj II's familie.*

சோவியத் யூனியனின் உருவாக்கத்திற்குக் காரணமான ஒக்டோபர்1917 புரட்சியில் ஸார் ரண்டாம் நிக்கலாய்) மன்னனின் முடி போனது. பின்னர் மன்னனுக்கு அடுத்த வருடம் யூலைமாதம் மரண தண்டனை வழங்கப்பட்டது. 1992இிலேயே ஸாரின் மண்டையோடு கண்டுபிடிக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டது. இந்த அடையாளம் காணலுக்குக் கணனித் தொழில்நுட்பமே பயன்பட்டது. ஸாரின் புகைப்படத்துடன், மண்டையோட்டின் வடிவம் கணனியில் பொருத்திப் பார்க்கப் பட்டது. 75 வருடங்களின் பின் நவீன தொழில்நுட்பத்தில் அடையாளம் காணப்பட்டது ஸாரின் மண்டையோடு. ஜெகரெறின்பூர்க் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரு மண்டையோடுகளில் ஒன்று ஸாரினதும் மற்றையது அவரது மனைவியான அலெக்ஸாண்டரா றோமனோவாவினதும் என அடையாளம் காணப்பட்டது.





FOTO: SIPA PRE

"இந்தக் கேள்விக்கு ஒமெண்டும் சொல்லலாம்" என்றாள்.

பழையபடி கண்கள் படங்களை பார்க்கத் தொடங்கின. எல்லாம் முடிவுகள் இல்லாத குழப்பங்களாய் உள்ளன. நிரந்தரம் என்பது சாத்தியமில்லாது போகிறது. சாத்தியம் என்பதே சாத்தியமில்லாது போகிறது. அவளது அழகு.... அவளது உடல்..... கண்கள்.... காதல்... சிரிப்பு... நளினம்... எல்லாம் கூடிவந்து கையருகே நிற்கிறது. ஏன் தொட முடியவில்லை? எப்படி இது இல்லாது போயிற்று? என்று எண்ணியழுந்தான்.

நல்ல வடிவாக் கதைச்சு, ஏதோ முடிவெடுத்திருக்கிறியள் போல கிடக்கு. ஆக்களைப் பாக்கத் தெரியுது" என்றபடி கந்தவனத்தார் விறாந்தைக்கு வந்தார். ரகுவும் சுசீலாவும் ஆளையாள் நேருக்கு நேரே பார்த்துச் சிரித்தார்கள்.

"தாங்க்ஸ் ஸேர். போட்டு வாறன்" என்றபடி ரகு சைக்கிளை நோக்கிச் சென்றான்.

"நானும் போட்டுவாறன்" என்றபடி சுசீலா விடைபெற்றாள்.

"ஏதோ நடக்கட்டும் நடக்கட்டும். நல்லா நடந்தாச் சரிதான்" என்றார் கந்தவனத்தார்.

"நீங்கள் நினைக்கிற மாதிரி ஒண்டும் நடக்கேல்லை மாஸ்ரர்" என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டு இரண்டு உடல்களும் எதிர் எதிர்த் திசையில் நகர்ந்தன.

(இனி....)

www.tamilarangam.net

# வடக்கும் கிழக்கும்

# ஒரு தேசத்தலைவரும்

● சுகுமாரன்



சிறீலங்கா ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் பேச்சுகளையிட்டுத் தற்போது யாருமே அலட்டிக் கொள்ளக் கூடாது. அவரது சொந்தக் கட்சி உறுப்பினர்களே அவரது அரசியல் அணுகுமுறைகளையிட்டு அதிருப்தி கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஒரு காலத்தில் காதுகேளாத (Deaf) கண்தெரியாத (Blind) விஜேதுங்க எனப் பத்திரிகைகளால் விமர்சிக்கப்பட்ட இவர் ஒரு ஜனாதிபதியானது ஒரு அரசியல் விபத்தே. புத்திசுவாதீனமற்ற ஒருவன் முன்பின் முரணாக எப்படியெல்லாம் பேசுவானோ அப்படியே விஜேதுங்காவின் அறிக்கைகள் பேச்சுகள் யாவும் உள்ளன. ஆனால் அதிலுள்ள பேரினவாத, தமிழின எதிர்ப்புக் கருத்துகளுக்கும் சிந்தனைகட்கும் சற்றும் குறைவில்லை. சிறில் மத்தியூ, நந்தா மத்தியூ, காமினி ஜயசூரிய போன்ற அண்மைக்கால அதிதீவிர சிங்கள இனவாதிகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோனது நினைவிருக்கலாம். இந்நிலை ஜனாதிபதிக்கு ஏற்படுமோ ஏற்படாதோ ஆனால் புலி ஒழிப்பு என்ற போர்வையில் சிங்கள மக்களுக்கு இழைத்துவரும துரோகத்திற்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் விஜேதுங்கா போன்றவர்களுக்கு ஏற்படும்.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இனவாதத் தலைவர்களே அரச தலைமையை அலங்கரித்திருந்த போதும் விஜேதுங்க போன்று வெளிப்படையாக இனவாத கருத்துகளை முன்வைத்து சிறுபான்மையின மக்களுடன் ஒரு முறுகல் நிலையை எவருமே தோற்றுவிக்கவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதிளான ஜே.ஆர், பிரேமதாசா போன்று விஜேதுங்கா நாடளாவிய ரீதியிலோ, கட்சி மட்டத்திலோ செல்வாக்கு

www.tamilarangam.net

உடையவர் அல்ல. ஒரே இரவிற்குள் தனது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரிடமும் திகதியிடப்படாத பதவி துறப்புக் கடிதங்களைப் பெறக் கூடியதாக 'தார்மீக ஜனநாயக'த்தை வளர்த்து வைத்திருந்தவர். பிரேமதாசாவின் எதிரிகளுக்கு நடந்த கதியைப் பார்த்த ஏனைய கட்சி உறுப்பினர்கள் பலர் பிரேமாவுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுத்தனர். ஆனால் விஜேதுங்கா... உண்மையில் ஒரு செல்லாக்காசு. அவரது ஜனாதிபதி பதவி நிரந்தரமல்ல. கட்சி அங்கத்தவர்கள் எப்போது வேண்டுமானாலும் அவரை அம்போ என்று கைவிடலாம். எவ்வெவ் வழிகளைக் கையாள முடியுமோ அவ்வளவு வழிகளையும் கையாண்டு, ஒருபடியாக ஜனாதிபதித் தேர்தலில் வென்றாலும் அவரது பதவி எத்தனை காலம் தாக்குப் பிடிக்கும் என்பது அவருட்பட யாருக்கும் தெரியாது. பிரேமதாசாவின் நெருங்கிய சகாக்கள் அவரது காலை வாரிவிடச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இதையெல்லாம் உணராதவரல்ல விஜேதுங்க. காயத்திற்கு முன்பே மருந்தைத் தயாரிப்பதில் தான் அவர் தனது நேரத்தைச் செலவிடுகிறார். இதனாலேயே 'மரம்' 'கொடி' கதைகளையெல்லாம் கதைப்பதுடன் ஒரே நாளில் முன்பின் முரணாக கதைக்கவும் தொடங்கியுள்ளார். அனுராதபுரத்தில் பயங்கரவாதப் பிரச்சனையாகத் தெரிவது மாத்தளையில் இனப்பிரச்சனையாகத் தெரிகிறது. கொழும்பில் பேச்சுவார்த்தை கிடையாது எனவும், கம்பளையில் ஜனநாயக வழிக்குத் திரும்பினால் பேச்சு எனவும் பேச இவராலேயே முடியும். சிங்கள மக்கள், பௌத்த பீடாதிபதிகள் மத்தியில் தன்னை ஒரு கெப்பிட்டிப்பொலவாக, துட்டகைமுனுவாகக் காட்ட முயலும் விஜேதுங்க, இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர் மத்தியில், சிறுபான்மையினர் தொடர்பாக அச்சத்தை ஏற்படுத்த முயன்று வருகிறார். இதன்மூலம் சிறுபான்மையின மக்களுக்கு எதிரான குரோதத்தையும், கசப்புணர்வையும் ஏற்படுத்தி அதிற் குளிர்காயலாம் எனக் கனவு காண்கிறார். இதே வழிமுறையை பண்டாரநாயகா கடைப்பிடித்தார். கடைசியில் அவர் தோற்றுவித்த இனவாதம் அவரையே புத்தபிக்கு வடிவில் பலிகொண்டது. இதற்காக மரண தண்டனை பெற்ற புத்தபிக்குகூட மதம்மாறிக் கிறிஸ்தவராகி தூக்குக் கயிற்றில் தொங்கினார். இது நடந்தது 35 வருடங்களுக்கு முன். இன்று இப்படியொரு சம்பவம் நிகழ்ந்தால் மதம் மாறுவதைவிட பௌத்தனாக மரணிப்பதையே விரும்பக்கூடும். அந்தளவு பௌத்த பேரினவாதம் கிளைவிட்டு வளர்ந்துள்ளது.

பச்சை இனவாதியான விஜேதுங்காவின் அண்மையில் கூறப்பட்ட ஒரு பொன்மொழி இதுதான். தமிழர்கள் எல்லோரும் பயங்கரவாதிகளல்லர். ஆனால் பயங்கரவாதிகள் அனைவரும் தமிழர்கள். இங்கே விஜேதுங்க எதைக் கூறமுயன்று எதை மறைக்க முயல்கிறார் என்று யாவருக்கும் தெரியும். ஆனால் விஜேதுங்கா உணராத ஒரு விடயம் உள்ளது. அதுதான் அரசால் பயங்கரவாதிகள் என்று குற்றஞ் சாட்டப்பட்டு மிருகத்தனமாக வேட்டையாடப்பட்ட அப்பாவி சிங்கள இளைஞர்கள், விஜேதுங்காவின் கூற்றுப்படி இவர்கள் யாவரும் தமிழர்களது வழித் தோன்றல்களா? இன்று தெற்கில் வேகமாக வளர்ந்துவரும் ஜேவிபியையும் பயங்கரவாத அமைப்பு என்றே அரசு முத்திரை குத்தியுள்ளது. அப்படியாயின் தெற்கில் வாழ்பவர்கள் தமிழர்களின் வழித் தோன்றல்களா? தெற்கும் தமிழங்களது பாரம்பரியப் பிரதேசமா? விஜேதுங்கா

www.tamilarangam.net

## வாக்காளர்களைத் தோற்கடித்த ஒரு குட்டித் தேர்தல்

பலத்த பாதுகாப்புக் கெடுபிடிகள் மத்தியில் நிகழ்ந்த அண்மைய உள்ளூராட்சித் தேர்தல், வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்று. இந்தத் தேர்தலில் பங்கெடுத்த எவரும் தாம் தோற்றதாகக் கூறவில்லை.

எல்லோரும் இந்தத் தேர்தல் தமக்கு வெற்றி என்றே கூறிவருகின்றனர். அறுபது வீதமளவில் வாக்குகள் பதிவான இந்தத் தேர்தலில், அகதிகளாக இடம்பெயர்ந்ததால் மக்களே இல்லாத கிராமங்களில் கூட வாக்குப் பதிவு இடம்பெற்றிருக்கிறது. வழமையைவிடச் சிறப்பான முறையில் இம்முறை வேட்பாளர்களே துப்பாக்கிக்குப் பயந்து தமது கையெழுத்துகளை இட்டுள்ளனர்.

இப்படி நிகழ்ந்த தேர்தல்களில் சுயேச்சைக் குழுக்களாகப் போட்டியிட்ட தமிழ்க் குழுக்கள் தமக்குக் கிடைத்த வாக்குகள் வடக்கு கிழக்கு இணைப்பிற்கு ஆதரவானவை என்று கூறியுள்ளன. இவர்களுக்கு ஒருபடி மேலேபோய், ஒரு அமைச்சரோ தமிழ்க் குழுக்களுக்கு விழுந்த வாக்குகள் தமக்கு விழுந்தவையே எனக் கூறியுள்ளார்.

மொத்தத்தில், வென்றவர்கள் வேட்பாளர்கள். தோற்றவர்கள் வாக்காளர்கள். இதுதான் பிந்திய தேர்தல் செய்தி; இதுதான் இலங்கையில் இப்போது கிடைக்கும் ஜனநாயகம்.

— சாரதி —

அளவுடன் பேசுவது அவருக்கு நல்லது. இல்லையேல் இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழர்கள்தான் என்பதற்கு சான்று பகர்பவராக சிறிலங்கா ஜனாதிபதியே விளங்குவார்.

அடிக்கடி அபத்தமாகப் பேசும் ஜனாதிபதி சிலசமயம் தன்னை மறந்து சில உண்மைகளையும் பேசிவிடுகிறார். ஆனால் அவ்வுண்மையில் உள்ள சாத்தியத்தை உணர மறுப்பதுதான் அவரது மடமை. அண்மையில் அவர் கூறியுள்ள கருத்து இது, "வடபகுதி வளமற்றது, வரட்சியான பிரதேசம். மூலவளம் சிறிதும் கிடையாது. நதிகள் இல்லை. தேயிலை கோப்பியில் இருந்து மின்சாரம்வரை எதுவும் கிடையாது. எல்லாமே தெற்கில் இருந்துதான் போகவேண்டும். வளம் குன்றிய இப்பிரதேசத்தால் எதுவித நன்மைகளும் கிடையாது" இன்றைய நிலையில் இவரது கூற்று முற்றிலும் உண்மை. வடபகுதி வளம் குன்றிய வரட்சிப் பகுதிதான். இயற்கை வளம் சிறிதுமற்ற அப்பிரதேசத்தை உரியவர்களிடம் கொடுத்துவிட வேண்டியதுதானே. ஏன் அப்பிரதேசங்களை ஆக்கிரமித்து மேலும் ஆக்கிரமிப்பை இறுக்க விரும்புகிறீர்கள். இயற்கை வளமற்ற வரட்சிப் பரதேசத்திற்காக பல ஆயிரம் அப்பாவிச் சிங்கள இளைஞர்களைக் கொன்றும் ஊனமாக்கியும் வருவதேன். நாட்டின் தேசிய செலவில் சுமார் 10%ஐ ஒரு பிரதேசத்தின் மக்களைக் கொன்றொழிக்கப் பயன்படுத்துவானேன்? இவ்வரட்சிப் பிரதேசத்திற்காகச் செலவிடும் பணத்தில் பாதியைக்கூட நஏட்டின் கல்வித்

www.tamilarangam.net

துறைக்கும் சுகாதாரத் துறைக்கும் செலவிடுவதில்லையே. ஒரு நாட்டிற்கு முக்கியமான கல்வித்துறையை - மனித வளத்தைவிட இவ்வரட்சிப் பிரதேசம் எந்தளவில் மேன்மையானது. 'எதுவித பயனுமற்ற' இந்தப் பிரதேசத்தை மீட்டெடுப்பதற்காக எத்தனை ஆயிரம் சிங்கள மக்களின் வாழ்க்கையைப் பாழடித்துள்ளீர்கள்? அவர்களது வளர்ச்சிக்குப்பயன்பது வேண்டிய பணத்தைப் போயும்போயும் வளமற்ற ஒரு பிரதேசத்தை மீட்கப் பயன்படுத்துகிறீர்களே? ஆனால் ஜனாதிபதியவர்களே, எமது பிரதேசம்தான் வளமற்றதே ஒழிய எமது மனிதவளம் செழுமையானது. நீங்கள் கூறிய அத்தனை குறைபாடுகளையும் எம்மால் குறுகிய காலத்தில் நிறைவேற்றிவிட முடியும். ஆனால் எமது பிரதேசம் எம்மிடம் கையளிக்கப்பட வேண்டும். ஒரு காலத்தில் 'பொடியள்', 'சிறுநீர் கழிக்கும் பையன்கள்' என்று உங்களால் கதைக்கப் பட்டவர்களிடம் நீங்களும் உங்கள் 'வளர்ந்த பையன்கள்' படும்பாட்டை உணர்ந்தாவது இவ்வரட்சிப் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் கொள்கையை கைவிடலாம் அல்லவா?

ஜனாதிபதி மட்டுமல்ல, பல தமிழர்கள்கூட வடகக் மட்டுமே தமிழரது தாயகம் என்ற கனவில் ஆழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணத்திற்குள் ராணுவம் புகுந்தால் என்ன விளைவுகள் ஏற்படும் எனப் பிரசங்கம் செய்பவர்கள் எமது தாயகத்தின் இன்னும் ஒரு பிரதேசமான கிழக்கில் இராணுவம் புடுந்ததால் ஏற்பட்ட விளைவுகளை, பாதிப்புகளையிட்டு எதுவித சலனமும் இன்றியிருப்பது கவலை தருவது. உண்மையில் கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களாலும் இன ஒழிப்பினாலும் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது. தமிழ் முஸ்லிம் கிராமங்களை வேட்டையாடியுள்ள அரச படைகள் பெரும்பாலான பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவியுள்ளது. திருமலை பத்து வருடத்தினுள் சிங்கள மயமாவிட்டது. தெற்கிலிருந்து பொருட்கள் இறக்குமதி, ஏற்றுமதி உட்பட பொருட்களின் மொத்த வியாபாரம் எதுவும் தமிழ் சிங்கள வியாபாரிகள் கையில் இல்லை; சிங்கள வியாபாரிகளிடமை உண்டு. தப்பித் தவறி யாராவது தமிழர் தலையிட்டால் அவர் உயிர் வாழத் தகுதியற்றவர் என்பதே ஆத்தம். அண்மையில் தெற்கிலிருந்து மரக்கறி இறக்குமதி செய்ய விரும்பிய ஒரு முஸ்லிம் வியாபாரி, சிங்கள வியாபாரிகளால் ஓட ஓட விரட்டப்பட்டு வெட்டப்பட்ட சம்பவம் நினைவிருக்கலாம். மொத்தத்தில் எமது தாயகத்தில் வடக்கு அழிக்கப்படுகிறது என்றால் கிழக்கு அழிக்கப்பட்டும் தேய்ந்தும் வருகிறது. இந்நிலை தொடர்ந்தால் முல்லைத்தீவுக்கு அப்பால் கிழக்கில் தமிழர் என்ற ஓரினம் முன்னொரு காலத்தில் வாழ்ந்ததாக எமது அடுத்த தலைமுறைக்குக் கற்பிக்கப் படலாம்.

## நூறு வயது!


சும்மா சொல்லக்கூடாது, வயது நூறு. யாருக்கு? மனிதர்க்கு அல்ல, நோர்வேஜிய எழுத்தாளர் சங்கத்திற்கு. ஒருசில வருடங்கள் இயங்குவதே பலஅமைப்புகளுக்குச் சிரமமாக உள்ளபோது நூறு வருடங்கள் பல சிரமங்களிடையே தாண்டி நூறாண்டு நிறைவையும் சிறப்பாகக் கொண்டாடுவது சாதாரண விஷயமல்ல. இந்தச் சாதனையைக் கடந்த வருட இறுதியில் நோர்வேஜிய எழுத்தாளர் சங்கம் புரிந்தது. அதனை நாமும் வாழத்துவோம்.

*எழுத்தன்*

www.tamilarangam.net

இலங்கையின் மிகப்பெரிய துரதிர்ஷ்டங்களில் ஒன்று, இலங்கையின் இரு பிரதான மொழிகளான தமிழும் சிங்களமும் அடிப்படையில் பெரிதும் வேறுபட்டிருப்பது. (நோர்வேஜிய, சுவீடிஷ், டேனிஷ் மொழிகள் வெவ்வேறு நாடுகளில் பேசப்பட்டாலும் ஒன்று தெரிந்தால் மற்றதை இலகுவாகப் புரியலாம். தமிழ் – சிங்களம் அப்படியல்ல) இந்தப் பின்னணியில் இழிவான விடயம், ஒருவரது மொழியை மற்றவர் கற்காமல் எங்கிருந்தோ வந்த இன்னொரு மொழியான ஆங்கிலத்துக்கு இரு பகுதியினருமே அடிமையாக இருப்பது.

இந்த நிலைமைகளுக்கு இழிவான இனவாத அரசியல் முக்கிய காரணம். இன்னொரு காரணம், தமிழரது கலை இலக்கியங்களைச் சிங்களவரும், சிங்களவரது கலை இலக்கியங்களைத் தமிழர்களும் அறியாதமை. தமிழர்களுக்குச் சிங்கள இலக்கியம் கிடைத்தளவுக்குச் சிங்களவர்களுக்குத் தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்புகள் கிடைக்கவில்லை. அண்மையில், தமிழீழப் பிரதேசத்தில் யுத்தப் பின்னணியில் எழுந்த பல கவிதைகளைச் சிங்கள மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள சீதாரஞ்சனி இந்த நிலையை மாற்ற முயற்சிக்கும் ஒருவர். இவரது முதலாவது மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுதியான 'தொரங்காய' (எதிரொலி) சண்முகம் சிவலிங்கம், ஜெயபாலன், சேரன், சிவரமணி, செல்வி, மைத்திரேயி, ஔவை, சித்ரலேகா மௌனகுரு, ஊர்வசி, சன்மார்க்கா, ஈழகணேஸ், இளவாலை விஜயேந்திரன், செழியன், ஜயகரன், துஷ்யந்தன்,



## கேட்டது கண்டவர் சொன்னது

அயலான்

கருணாகரன் போன்றோரது கவிதைகளின் சிங்கள மொழிபெயர்ப்பைக் கொண்டது. தமிழீழ அரசியலை மாத்திரம் அல்ல, மக்களது எண்ணங்களையும் சிங்கள மக்கள் அறிய இத் தொகுதி பெரிதும் வாய்ப்பளிக்கும்.

சீதாரஞ்சனி மீண்டும் மொழிபெயர்ப்பு முயற்சியில் இறங்கியுள்ளார். இம்முறை இனப்பிரச்சனை தொடர்பான தமிழ்ச் சிறுகதைகள் அவரது மொழிபெயர்ப்பில் நூலுருப்பெற உள்ளன. தரமான இருபத்தைந்து சிறுகதைகளின் தொகுதியான இந்த நூலை வெளியிட 30,000 இலங்கை ரூபாய்வரை தேவைப் படுவதாக அறியமுடிகிறது. அத்தொகையில் ஒரு சிறுபங்கையேனும் கொடுத்து உதவினால் இவ்வாறான முயற்சிகளுக்கு உந்துதலாக

www.tamilarangam.net

அமையுமல்லவா?

தொடர்புகளுக்கு: Seetharanjani/ c/o Yukthiya,/ 56/24 Robert Gunavardena Road,/ Colombo 6,/ SRILANKA.

இலங்கையில்; முக்கியமாகத் தமிழில் பத்தி எழுத்துத் துறை பெரிதாக வளராத ஒரு துறை. இலங்கையிற் பிறந்து சர்வதேச ரீதியாகப் பத்தி எழுத்தாளராக உயர்ந்த ஒருவரைப் பற்றிப் பலர்



அறிந்திருக்கலாம். தார்ஸி வித்தாச்சி என்ற செய்தியாளர்தான் அந்தப் பெருமைக்குரியவர். 'நியூஸ்வீக்' போன்ற பல சஞ்சிகைகளில் இவரது பத்தி எழுத்துக்களைப் பலர் பார்த்திருத்தல் சாத்தியம். இலங்கையில் புகழ்பெற்ற பத்திரிகைகளில் ஒன்றான 'சிலோன் ஒப்சேவரி'ல் ஆசிரியராக இருந்த இவரது 'எமர்ஜன்சி 58' என்ற ஆங்கில நூல் 1958 கலவரத்தின் இழிவான பக்கங்களை வெளியில் கொணர்ந்த காரணத்தால் தடைசெய்யப் பட்டது. அன்று தப்பியோடிய தார்ஸி, வேறு நாடொன்றில் அந்த நூலை வெளியிட்டார். அந்த வகையில் இலங்கையின் 'புலம்பெயர்ந்தோர் இலக்கியத்'திற்கு அவர்தான் முதற்படி என்று கூறலாமோ தெரியாது.

பல சர்வதேச நிறுவனங்களில் மதிப்பிற்குரிய பணிகளை ஆற்றிய தார்ஸியை வெளியேற்றியதன் மூலம் இலங்கை அரசு பூண்டிருந்த ஜனநாயக வேடம் உலகறிந்த ஒன்றாகியது. இவருக்குப் பிறகு பல செய்தியாளர்கள் கொல்லப் பட்டார்கள்; எழுத்தாளர்கள் சிறையில் அடைக்கப் பட்டார்கள்; மிரட்டல் பொதுவிதியானது. ஆட்சியாளருக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயங்களை மட்டுமே பத்திரிகைகளும், எழுத்தாளர்களும் எழுதவேண்டும் என்பதற்காக இந்த வன்முறைகள், அடாவடித் தனங்கள் நடத்தப் பட்டாலும், இலங்கைக்கு ஜனநாயக நாடு என்ற பெயர் தொடர்ந்திருக்கிறது, அதிர்ஷ்டம்தான்! மக்களுக்கல்ல, ஆட்சியாளர்களுக்கு!!

தமிழர்களுக்கு உயர்பதவிகளில் இடம் கிடையாததும், இலங்கையில் தமிழர்களது உரிமைகள் மறுக்கப் படுகின்றன என்பதற்கு ஆதாரமான ஒரு விடயம். தாய்நாட்டில் உயர்பதவிகள் கிடையாவிட்டால் கவலைப்படும் தமிழர்களது மன உணர்வுகள், வெளிநாடுகளில் பதவியே கிடையாத தொழில்களில் என்ன பாடுபடுமோ என்று யாராவது ஆராயலாம். ஆனால் இந்தத் தொழில்களில் சில சமயங்களில் பதவிகள் வருவதுண்டு. அப்படிப் பதவிகள், தமிழரைத் தமிழரே (நன்றாக) மேய்ப்பர் என்ற தொழிலதிபர்களது அனுபவத்தில் வந்ததாக இருக்கலாம்.

இப்படி ஊழியர்களை மேய்க்கும் சில (தமிழ்க்) குட்டி முதலாளிகள் நடந்துகொள்கிற முறைபற்றிக் குறைகளை வண்டிவண்டியாகத் தமிழர்கள் சொல்வார்கள், எல்லா நாடுகளிலும்தான். தனக்குத் தெரிந்த நபரை மட்டுமே உயர்த்துவது, தனக்குப் பிடியாதவரை மட்டம்தட்டி, மேலதிகாரியிடம் புகார் சொல்வது, தனக்கு மற்றத் தமிழர்கள் குடை, கொடி, ஆலவட்டம் பிடிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது என்று இந்தக் குட்டி 'மூனா'க்களின் அட்டகாசம் பெரிது என்று அனுபவப் பட்டவர்கள் சொல்கிறார்கள். இதனை எழுதியது பற்றி யாரும் கவலைப்படுவது தேவையா? தொப்பி அளவில்லாத எவருக்கும் கோபம் வர நியாயமில்லையே.

www.tamilarangam.net

# அப்பளாச்சாரியாருக்கு ராமனின் பதில்

அப்பளா,

நல்லாய்ச் சுணங்கிப் போய்விட்டது. குறைவிளங்காதே. உனது சந்தேகத்தில் எல்லுப் போலையெண்டாலும் நியாயமில்லை. உனது கருத்துகளை வாசிப்பதுண்டு, ஒன்றுக்குப் பல தடவைகள். பொருளாதார அடித்தளத்தில் மாற்றத்தை விரும்புகிறாய். சரி, அதுவும் சீர்திருத்தமாகத்தான், சமுதாய மாற்றமாக இல்லை. அதனால்தான் திரும்பத் திரும்ப வலியுறுத்தினேன். தேசிய இனப்பிரச்சனை உழவர் பிரச்சனையே இல்லையென்று நீயோ சொல்லி வருகிறாய். இது ஒன்றும் புதிதல்ல. கனகாலமாக மெத்தப் படித்தவர்களும், அரசியல்வாதிகளும், அறிவுஜீவிகளும், என்றும் சமரசவாதிகளும் இதைத்தானே சொல்லி வருகிறார்கள், பேய்க்காட்டி. இவர்களால் இனப்பிரச்சனையை ஓரங்குலம்கூட அசைக்க முடியவில்லை. இனப்பிரச்சனையை வெறும் ஜனநாயகப் பிரச்சனையாக மட்டும் பார்க்கும் இவர்களது கருத்துகள் எந்தப் பெலனும் இல்லாதவை. வெளிச்சமாகச் சொல்வதென்றால், இவைகளெல்லாம் ஏகாதிபத்தியங்களுக்கு ஒத்துாதலே. இதுபற்றிப் பிறிதொரு சமயத்தில் விவாதிக்கலாம் என்கிறாய், சரி, கிடக்கட்டும்.

பாரளுமன்றத் தீர்வில் நம்பிக்கையற்ற என்னிடம் இடைக்காலத் தீர்வைச் சொல்லிப் புறுபுறுக்க வைக்கிறாய். இடைக்காலத் தீர்வு என்பது சமுதாய மாற்றத்தை முன்னெடுக்கிற சக்திகளுக்கும் இருப்பிலுள்ள ஆதிக்க சக்திகளுக்கும் இடையில் நிகழ்வதாகும். சமூக மாற்றம் துரிதமாக முன்னெடுக்கப்படும்போது ஆதிக்க உறவுகள் பொலுபொலுவெனக் குலைந்து அழிந்துபோகும். இவ்வுறவுகளைக் காப்பாற்ற, மீட்டெடுக்க, தனது இறுதிப் பெலனைக் கொண்டு போராடும் ஆதிக்க சக்திகள், எஞ்சிப் போயுள்ள கப்பி உறவுகளையாவது காப்பாற்றிக் கொள்ள தலையால் முனைந்தாவது இடைக்காலத் தீர்வை முன்வைக்கும். சமூகமாற்ற சக்திகளோ இதனை ஆலோசனைக்கு எடுக்கும். உள்நாட்டு கேந்திர நிலைமைகளும்,



www.tamilarangam.net

சர்வதேச நிலைமைகளும் இத்தீர்வை சாதகம் அல்லது பாதகம் என்ற நிலைக்குத் தள்ளும். ஆக மொத்தத்தில் ஓர் தீர்வு சமூகமாற்ற சக்திகளால் ஏற்றுக் கொள்ளப்படும் போதே, (அங்கீகரிக்கப்படும்) இடைக்காலத் தீர்வு என்ற அந்தஸ்தையே பெறமுடியும்.

எந்தப் பக்கமும் சமுதாய மாற்றத்தை முன்னெடுக்கிற சக்திகள் அரங்கிற்கு வராதபோது பாராளுமன்றத் தீர்வை இடைக்காலத் தீர்வாகக் காட்ட முற்படுவது பரிதாபத்திற்குரியது. ஒட்டுமொத்தப் புரட்சி சாத்தியமற்ற நிலையில் பாராளுமன்ற இடைக்காலத் தீர்வே சாத்தியம் என்று சொல்லவருவதைப் பார்த்தால் நீயோ உன்னைப் பேரினவாத நலன்களுக்குப் பலியிட்டுக் கொண்டாயோ என்றுதான் கருத இடமுண்டு. இவ்வாறான பேரினவாத நலன்களுக்குக் கட்டுப்பட்ட சிந்தனைகள் பல புரட்சிவாதிகளிடையேயும் காணப்பட்டன, புரட்சிகர வடிவில். சோவியத்திலும், சீனாவிலும் புரட்சியைப் படுதோல்விக்கு இட்டுச் சென்றதற்கு இதுவும் ஒரு காரணம், குறிப்பாகப் பிற்பட்ட காலத்தில். சோவியத்திலும், சீனாவிலும் எடுக்கப்பட்ட ஒவ்வொரு புரட்சிகர தீர்மானமும் நடவடிக்கையும் பேரினவாதங்களைச் சார்ந்தே இருந்தன. சீனாவின் ஐக்கிய முன்னணித் திட்டமும் அவ்வாறானதே. வர்க்க சக்திகளின் அதிகார கை இறுக்கத்தில் சிறுபான்மைத் தேசிய இனங்களிடம் வளர்ந்துவந்த புதிய உற்பத்தி உறவுகளின் சமச்சீரற்ற வளர்ச்சியை இவர்கள் எப்போதுமே கவனித்ததே இல்லை. இது, பழைய கதைதான். நாங்கள் விடயத்திற்கு வருவோம்.

பாராளுமன்றத் தீர்வு ஒன்றுக்கு இலங்கை அரசை இறங்கிவரச் செய்யவேண்டும் என்று 'மயிலே மயிலே இறகுபோடு' என்று பாடுகிறாய். அரசு இறங்கி வருவதற்கு ஒருவழிப் பாதை மட்டுமே உண்டு. சமூக மாற்றத்தை முன்னெடுப்பதே அந்தவழி. இது அரங்கில்

# சொரிவுகள்

*இளைய அப்துல்லாஹ்*

இன்னும் உருப்பெறாத
இந்திரியம் போல
சூழாகி குழம்பிப் போனதான
எல்லாம்........



மெழுகுவர்த்தியானது
உருகுதலாகி....
முற்றாகி.....
அழிந்துவிடுவதான
மானிடம்
சூம்பிய வாழ்க்கை....

அடுத்ததை இலக்குவைத்த
இருப்புக் குழல்கள்
மானிட சதைகளை
முன்வைத்ததாய்...
அதுவும் குழிதோண்டும் போதெல்லாம்
தமிழ்ப் பிரேதங்களை
அள்ளி எடுத்துப் பரத்தி.....

ஊருக்கு உபதேசமாய்....

ஏறிமிதித்து.... இன்னும் ஏறிமிதித்து...
எல்லோரையும் நசுக்கி
அழித்துவிட்டு
பிரேதக் குவியலின்மீது
அழைப்பில்லாமல்
ஆஜராகும்
சிங்கக் கொடியும்
அதன் காவலரும்,
இன்னும் சிலரும்.......

031193

www.tamilarangam.net

இல்லாதபோது, அரசு தேசிய இனங்களை மதிக்காது. இணக்கம் பற்றிக் கனவுகூடக் காணாது. வெறியோடு தேசிய இனங்களின் தனித்துவத்தை அழித்தொழிப்பதில் மட்டுமே ஈடுபடும். மக்களை ஏமாற்றவும், படைகளுக்கு ஆளணி திரட்டவும் சிங்களப் பேரினவாதிகளுக்கு எவ்வளவு காலத்திற்குத்தான் முடியும் என்று கேட்டிருந்தாய். அப்பளா, அரசுக்கு இது ஒரு 'சிம்பிளான' விஷயம். இவர்களது மௌனம் மட்டுமே போதுமானது, மிக நீண்ட காலத்திற்கு. உலக 'மாக்கெட்'டில் கொள்வனவு செய்யவே முடியாத மிகப்பெரிய ஆயுதமாக இந்த மௌனம் கிடைத்துள்ளபோது பயமே கிடையாது. திமிரோடு போர் செய்ய நினைக்கும். அது எதையுமே காதில் இருத்தாது. மூர்க்கத்தனமாகப் போரையே நம்பியிருக்கும். புலிகளுக்கு மக்கள் இருக்கிறார்களோ இல்லையோ தனது ஆதிக்கம் மண்ணில் இருந்தால் சரி. இதுவும் எதைப் பற்றியும் சிந்திக்காது. எந்தவிதமான அழிவைப் பற்றியும் கவலைப்படாது.

இந்த இருவருக்கிடையில்தான் நீயோ அபிப்பிராயப் படுகின்ற இடைக்காலத் தீர்வு ? நிகழமுடியும். இவர்களது மிதிபாட்டுக்குள் சிக்கிக் கிடக்கும் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தையும் அதன் ஆழமான தன்மையையும் ஊன்றிக் கவனிக்காது விட்டுவிடுகிறாய். இவர்களுக்கிடையில் நிகழக்கூடிய தீர்வைக் கவனத்திற் கொள்ளவேண்டும் என்று பிரியப் படுகிறாய். அவசர அவசரமாக இவர்களுக்கிடையில் நிகழக்கூடிய தீர்வை இடைக்காலத் தீர்வாக இருக்க முடியுமென்று கூறவருகிறாய். அரசை விடுவம். புலிகள் பற்றிய சரியான மதிப்பீடு எமக்கு இல்லாவிட்டால் தோலிருக்கச் சுளை பிடுங்கிச் சாப்பிட்டு ஏப்பம்விட இதுவும் தயங்காது.

என்னைப் பொறுத்தவரை புலிகள் - தரகு முதலாளித்துவம், ஒடுக்கப் படுகின்ற

# மலட்டு வானம்

*முகமட் அபார்*

தூர்த்துத் துடைத்த
ஒரு கிராமத்தைப் போல்
வானம் -
மிகவும் துப்பரவாக இருந்தது.

பறவைகள் பறப்பதைக் காணவுமில்லை.
மேகங்கள் ஓடுவதைக் காணவுமில்லை.
நேற்றுப் பிறந்த
குழந்தையின் முகத்தைப் போல்
தெளிவாகத் தெரிந்தது வானம்.

சூரியன்
இருந்த இடமெல்லாம்
வானத்தின்
உடுதுணிகள் உலர்ந்தது.
வெள்ளிகளெல்லாம்
பூமியில் கொட்டிக் கிடந்தது.


வானம்
எல்லை எல்லையாகப் பிரிந்துகொண்டது.
ஒவ்வொரு எல்லைக்குள்ளும்
விதம் விதமான மணங்கள் வீசியது.

அழகான வானம்!
அள்ளிக் கொஞ்சினாலும்
ஆசை தீராது.

இனி -
வானத்திலிருந்து
மழையும் பெய்யாது.
வெயிலும் வராது.

ஒன்றுமே இல்லாத
மலட்டு வானம்தான்.

190194



www.tamilarangam.net

# நான்காவது பரிமாணம்

காலாண்டிதழ். தொடர்புகள்: 1565
Jane st/ P.B.34515/ Toronto, Ont/
CANADA M9N 1RO

தரகு முதலாளித்துவம். ஒடுக்கும் - ஒடுக்கப்படும் தரகு முதலாளித்துவங்களுக்கு இடையில் இடைக்காலத் தீர்வு எக்காலத்திலும் நிகழவே முடியாது. இந்த இருவருக்கும் இடையில் ஒரு இடைக்காலத் தீர்வை முன்வைக்க முடியுமென்ற உனது மிதமிஞ்சிய ஆசை, 'கோட்சே' வீட்டில் காந்தி படத்தை மாட்ட முடியுமென்ற ஆசையைப் போன்றதே.

பாராளுமன்றத் தீர்வினூடாகக் குறைந்தபட்சம் விடுதலைப் புலிகளையாவது, தேசிய விடுதலை தொடர்பாக அரசியல் மாற்றத்திற்கு உட்படுத்த முடியுமென்று சொல்கிறாய். இது ஒரு பெரிய 'ஜோக்'காக இருக்குமே தவிர நடைமுறைக்கு ஒத்துவராது. ஏனென்றால் தமிழ்த் தேசிய இனத்திற்கான தனித்துவமான தேசிய விடுதலை சாத்தியப் படாது. அதற்கான புவியியல் அமைப்பு எமது நாட்டில் இல்லை. தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்நிலைப் பிரதேசம் (தமிழீழம்) முஸ்லிம் தேசிய இனத்திற்கும் சொந்தமானது. தமிழீழத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழ்கின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்களைப் பொதுமைப் படுத்திய ஒரு தேசிய அரசு உலகில் எங்குமே சாத்தியமானது இல்லை என்பது ஒருபுறமிருக்க ஏகாதிபத்தியங்களைச் சார்ந்திராமல் ஒரு தேசிய விடுதலைக்குத் தலைமை தாங்கக்கூடிய பலமான தேசியவாதிகள் இலங்கை போன்ற காலனித்துவ நாட்டில் கிடையாது. ஆகவே தமிழீழத்திற்கான வர்க்கப் புரட்சிக்கான போக்கே சாத்தியமானது. தமிழீழப் பிரதேசத்தில் வாழுகிற ஒடுக்கப் படுகின்ற தேசிய இனங்களுக்கான வாக்கப் பரட்சியின் இடைக்கால அரசான ஒரு மக்கள் குடியரசே சாத்தியமானது. சிங்கள உழைக்கும் மக்களை, அவர்களது அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதற்காக அமைப்பாக்கும் முயற்சி இந்த மக்கள் குடியரசின்முன் சாத்தியப் பட்டால் மட்டுமே தமிழீழ மக்கள் குடியரசுக்கான போராட்டம் வேறு வடிவம் பெறமுடியும். இந்த அரசின்கீழ் தமிழீழ மக்கள் குடியரசைத் தவிர்ந்த எந்தத் தீர்வுகளுக்கும் வாய்ப்புகளே கிடையாது. ஏனைய தீர்வுகள் அனைத்தும் பச்சைத் துரோகமானது.

அப்பளா, மாநிலச் சுயாட்சி ஒரு ஏமாற்று வித்தையே. இது ஒரு சாத்தியமற்ற தீர்வு என்பது ஒருபுறமிருக்க, இந்தத் தீர்வுகூட புரட்சியையும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலையையும் நாசம் பண்ணவும், முடியுமானால் குழிதோண்டிப் புதைக்கவுமே உதவும். தமிழீழ மக்களுக்கான ஜனநாயகக் குடியரசுக்கு இது எந்தவிதத்திலும் உதவாது. இன்றைய போராட்டமும் அது தோற்றுவித்துள்ள நெருக்கடிகளும் உள்நாட்டிலும் சரி, சர்வதேச ரீதியிலும் சரி, ஒரு அவசர தீர்வு செயலாக்கப் படுவதை வலியுறுத்துவதாய் உள்ளன. 'அரசியற் தீர்வாளர்'களோ 'மாநிலச் சுயாட்சி' 'சமஷ்டி' என்றெல்லாம் தமது அபிப்பிராயங்களைக் கொட்டியே விடுவார்கள். அவர்களிடம் வேறு என்ன இருக்கிறது? அரசோ, ஏன் விடுதலைப் புலிகளோ இதற்கு இலேசில் மசியாது என்றில்லை. அதன் பரவணிக் குணங்களே இப்படித்தான். ஆனால், தேசிய இனங்களின் தனித்துவமும், சுயமான சுதந்திரமும் இவ்வாறான தீர்வுகளினூடாகப் பெற்றுக் கொள்வதோ நிலைநிறுத்துவதோ இந்தச் சமரசவாதிகளால் என்றுமே முடியாத காரியம்.

ப்பிரியமுடன்,
ராமன்.
270294

www.tamilarangam.net

(பகுதி 4)

சமுத்திரன்

# மறதிக்கு எதிராக நினைவுகளின் போராட்டமும் ஒரு சுயவிமர்சனமும்

1917

## புதிய அரசின் உயிர்காப்பு நிர்ப்பந்தங்களும் அதிகார வர்க்கத்தின் விதைகளும்



ஒக்டோபர் புரட்சி சோஷலிசப் புரட்சியென போல்ஷவிக்குகளும் அவர்களுடன் ஒத்துப்போகும் கருத்துடைய மாக்சியவாதிகளும் கருதியபோதும் அன்றைய ரஷ்யா சோஷலிச மாற்றத்திற்கான அடிப்படை நிலைமைகளைக் கொண்டிருக்கவில்லை. இது இன்றைய நமது பின்னோக்கிய விமர்சனப் பார்வையில் தெரிவது. நமது விமர்சனம் பின்னோக்கில் அமைந்த வரலாற்று ரீதியான மதிப்பீடே. சோவியத் யூனியனின் சோஷலிச அமைப்பை உருவாக்குவதற்குப் பல பாரிய தடைகள் இருந்ததை ரஷ்யப் புரட்சியின் பிரதான சிந்தனையாளர்களான லெனின், ட்றொட்ஸ்கி, புகாரின் போன்றோர் முன்பிருந்தே அறிந்திருந்தனர். பரந்த மேற்கு ஐரோப்பிய புரட்சி வெற்றி பெறாது சோவியத் யூனியனில் சோஷலிசத்தை நிர்மாணிப்பது சாத்தியமில்லை என்ற கருத்து ஆரம்பத்தில் பொதுவாக நிலவியது இந்த நிலைப்பாட்டை நன்கு ருசுப்படுத்துகிறது. ஐரோப்பாவில் பின்தங்கிய நாடுகளில் ஒன்றான

www.tamilarangam.net

ரஷ்யாவில் புரட்சி வெடித்து வெற்றி பெற்ற காரணங்களை முன்னைய கட்டுரைகளில் கண்டோம். ரஷ்யாவின் பின்தங்கிய நிலைமைகள் மார்க்ஸ் மனதில் கொண்டிருந்த சோஷலிசத்தை உருவாக்குவதற்கு சாதகமானவை அல்ல. இவை பற்றிய சில அடிப்படைக் கருத்துகளைக் கூறியபின் போல்ஷவிக்குகள் பற்றிய விமர்சனத்துக்கு வருவோம்.

– மார்க்சிய நோக்கிலமைந்த சோஷலிச மாற்றத்திற்குத் தேவையான முன்நிபந்தனைகளில் முக்கியமானவற்றைப் பின்வருமாறு நிரைப் படுத்தலாம்.

1) முதலாளித்துவத்தின் ஆழ்ந்த, பரந்த அபிவிருத்தியால் ஏற்படுத்தப்பட்ட அதேநேரம் சமூக உற்பத்தியைத் தீர்மானிக்கும் ஆற்றலைப் பெற்ற பாட்டாளி வர்க்கம்.

2) இத்துடன் நெருக்கமாக இணைந்ததுதான் உற்பத்தி சக்திகளின் அபரித வளர்ச்சி நிலை. இது சகல மக்களின் தேவைகளை உற்பத்தி செய்யவல்ல புதிய சமூகமயப் படுத்தப்பட்ட உற்பத்தி அமைப்புகளின் உருவாக்கத்திற்கு அவசியம். அதேவேளை உயர்மட்ட உற்பத்தி சக்திகளாலேயே அடிப்படைத் தேவைகளின் போதாமையை இல்லாதொழிக்க முடியும். அடிப்படைகளின் போதாமை தலைவிரித்தாடும் சமூகத்தில் சோஷலிசம் சாத்தியமில்லை. அங்கு புரட்சி சாத்தியமாகலாம்.

3) கூலி உழைப்பை இல்லாதொழித்து உற்பத்தியாளர்களின் சுயமுகாமை அடிப்படையில் பொருளாரத்தை மாற்றியமைக்கவும் ஜனநாயக ரீதியான திட்டமிடலுக்கும் துரிதமாக வழிவகுக்கக் கூடிய இடைக்கால அடிப்படைகள்.

4) விருத்தியடைந்த முதலாளித்துவ ஜனநாயகக் கலாசாரமும் அதன் குறைபாடுகள் பற்றிய பரந்துபட்ட விமர்சன ரீதியான அரசியல் உணர்வும். இதில் சோஷலிச இயக்கங்களின் பங்கு தலையாயது. வளர்ச்சி பெற்ற முதலாளித்துவத்தின் உள்நாட்டு வெளிநாட்டு சுரண்டல் பற்றிய, அதாவது மனிதரின் ஆக்க சக்திகளை விடுதலை செய்வதில் வரலாற்று ரீதியான பங்கை வகிக்கும் அதேவேளை மனித உறவுகளைப் பண்டமயமாக்கி மனிதத்துவத்தைத் துண்டாடி அழித்து வருவது பற்றிய ஆழ்ந்த உணர்வுள்ள சமூகத்திலேயே சோஷலிசம் சாத்தியமாகும்.

சோஷலிச நிர்மாணம் என்பது மேலிருந்து கீழே ஒருமையப் படுத்தப்பட்ட அமைப்பின் கட்டளைகளால் இடம்பெறும் நடைமுறையல்ல. அது மக்கள் மட்டத்திலிருந்து உணர்வுபூர்வமாக சுயேட்சையாகக் கட்டி எழுப்பப்படும் படிமுறைப் போக்கெனலாம். அத்தகைய ஒரு மாற்றத்திற்கு முதிர்ச்சி பெற்ற அரசியல் உணர்வு அவசியமாகும். இது முதலாளித்துவ சமூகத்தினுள் இடம்பெறும் அரசியல் கலாசார போராட்டங்களாலும் அமைப்பிற்கெதிரான தொடர்ச்சியான மாற்று அரசியல் கல்வியூட்டலாலும் பெறப் படுகிறது.

இவற்றுடன் ஒப்பிடும்போது ரஷ்யாவின் நிலைமைகள் சோஷலிச மாற்றத்திற்குப் பாதகமானவையாகவே இருந்தன. மிகவும் அடிப்படையான பிரச்சனை அன்றைய ரஷ்யாவின் பின்னடைந்த பொருளாதாரமாகும். அங்கு முதலாளித்துவத்தின் வளர்ச்சி அன்றைய மேற்கு ஐரோப்பாவுடன் ஒப்பிடும்போது பின்தங்கியே இருந்தது. ரஷ்ய ஆளும் வர்க்கத்தின் அணியில் பிரபுக்களினதும் ஸாரிச கொடுங்கோல் முடியாட்சியினதும் வாத்தக மூலதனத்தினதும் ஆதிக்கங்களே மேலோங்கியிருந்தன. உற்பத்தி மூலதனத்தின் வளர்ச்சி இதனால் தடைபட்டது. இதன் விளைவு ரஷ்ய சமூகத்தின் பாட்டாளி வர்க்க மயமாக்கலின் மந்தமான போக்கு. ஜனத்தொகையின் பெருந்தொகையினர் (ஏறக்குறைய

www.tamilarangam.net

80வீதம்) நாட்டுப் புறத்தில் நிலவுடைமை உறவுகளின் கோரப் பிடியிலும் வறுமையிலும் மரபுரீதியான பின்னடைந்த கலாச்சாரத்திலும் அமிழ்ந்திருந்தனர். அவர்களின் புறநிலை அகநிலைச் சூழல்களுக்கும் சோஷலிசத்திற்கும் இடையே நிரப்ப முடியாத இடைவெளி இருந்தது.

இத்தகைய ரஷ்யாவில் புரட்சி வெடித்ததற்கான காரணங்களை முன்னைய கட்டுரைகளில் பார்த்தோம். சோவியத் யூனியனின் அபிவிருத்திப் போக்குகளைத் தீர்மானிப்பதில் பின்வரும் அம்சங்களின் சிக்கலான உறவுகள் தீர்க்கமான பங்கினை வகித்தன.

* ரஷ்யாவின் சமூக பொருளாதார விருத்தி குன்றிய நிலை. அதன் மரபுரீதியான சர்வாதிகார அரசியல் மரபுகள், பன்முகப்பட்ட ஜனநாயகக் கலாசாரமின்மை.

* இறுக்கமாக மையப் படுத்தப்பட்ட போல்ஷவிக் கட்சி. இந்தக் கட்சியமைப்பில் உட்கட்சிச் சர்வாதிகாரத்திற்குச் சாதகமான தன்மைகள் பலம்பெற்றிருந்தன. ஆரம்பத்தில் இருந்தே லெனின் கட்சியினர் (போல்ஷவிக்) தம்மிடம் மட்டுமே சோஷலிசம் பற்றிய சரியான கொள்கை உண்டெனும் போக்கினைக் கடைப்பிடித்தனர். ஆட்சிக்கு வந்தபின் இந்தப் போக்கு மேலும் பலம் பெற்றது. லெனின் காலத்தில் உட்கட்சி விவாதங்களுக்குச் சுதந்திரம் இருந்தது. ஆயினும் இறுதி ஆய்வில் போல்ஷவிக் கட்சி லெனினின் கட்சியே. அவருடைய கருத்தே கட்சியின் கருத்தாகியது. லெனினிற்குப் பின்னர் ஸ்டாலின் காலத்தில் உட்கட்சிச் சர்வாதிகாரம் நடைமுறைப் படுத்தப்பட்டது. ஜனநாயக ரீதியான மையப்படுத்தல் அல்லது 'ஜனநாயக ரீதியான மையவாதம்' (Democratic centralism) என்பது நடைமுறையில் கட்சியின் தலைமையின் – இறுதியில் பொதுக் காரியதரிசியின் சர்வாதிகாரமானது. இத்தகைய ஒரு கட்சியே பின்தங்கிய ரஷ்யாவை ஒரு 'சோஷலிச தந்தை நாடாக' மாற்றும் பணியில் ஈடுபட்டது. இந்தத் திட்டத்தில் தன்னை விமர்சித்த, எதிர்த்த மாக்சியவாதிகளை, அராஜகவாதிகளை (anarchists) மற்றைய இடதுசாரிகளை எல்லாம் எதிர்ப் புரட்சியாளர்கள் எனப் பிரகடனம் செய்தது போல்ஷவிக் தலைமை.

* சோவியத் யூனியன் முதலாளித்துவ அமைப்பிற்குச் சவாலாக அமைவதைக் கண்டு கலங்கிய மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகள் அதை அழித்துவிடத் தொடர்ச்சியாக முயற்சிகளை எடுத்தவண்ணம்

## பிள்ளையார் பிடிக்கப்போய்!

கொம்யூனிசத்தின் பெயரில் போலி ஆட்சியாளர்கள் நடத்திய ஆட்சி முடிந்தபின், கிழக்கைரோப்பிய நாடுகள் பொருளாதார அரசியல் ரீதியாக முன்னேறியுள்ளனவோ இல்லையோ, சமூக சீரழிவைக் கடுமையாக எதிர்கொள்கின்றன.

ருமேனியாவின் முன்னாள் போலிக் கொம்யூனிச சர்வாதிகாரியான நிக்கலாய் செசஸ்கூ ஆட்சியில் கருக்கலைப்புச் சட்டரீதியாகத் தடை செய்யப் பட்டிருந்தது. ஐந்து பிள்ளை பெற்றவர்களும், 45 வயதுக்கு மேற்பட்டவர்களும் கருக்கலைப்புச் செய்ய அனுமதி இருந்தது. இன்று 'புதிய ஜனநாயக' நாடான ருமேனியாவில் தினசரி 40,000 கருக்கலைப்புகள் நிகழ்வதாகக் கணிப்பிடப் படுகிறது. தலையை எங்கு முட்டுவது எனத் தெரியாமல் திண்டாடுகிறார்கள் ருமேனியாவின் சமூக சிந்தனையாளர்கள்.

– ஜோய் –

www.tamilarangam.net

*இருந்தன. இதை எதிர்ப்பதில் போல்ஷவிக் கட்சி தீவிரமாக ஈடுபட்டது. அதன் அடிப்படைப் போக்குகள் அதிகாரவாதத்தை மேலும் பலப்படுத்த உதவின.*

ஒக்டோபர் புரட்சியின் கடமை சோஷலிச நிர்மாணம் எனும் கோஷமே மேலோங்கி நின்றபோதும் ரஷ்ய சமூகத்தின் உடனடித் தேவைகளில் அடிப்படை நுகர்பொருட்கள் முக்கியத்துவம் வகித்தன. பெருந்தொகையான மக்களைப் பொறுத்தவரை உணவு, உறைவிடம், உடை, கல்வி வசதிகள் போன்றவையே உடனடித் தேவைகளாயிருந்தன. இவற்றைப் பூர்த்தி செய்யாவிட்டால் புதிய சோவியத் அரசு மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக ஆதரவை இழக்க நேரிடும் என்பதை போல்ஷவிக் தலைவர்கள் கண்டனர். புரட்சியைத் தொடர்ந்து வந்த உள்நாட்டு யுத்த காலகட்டத்தில் எதிர்ப் புரட்சியாளர்களை நசுக்கும் நடவடிக்கைகளால் போல்ஷவிக்குகள் அல்லாத பல இடதுசாரிகள் பாதிக்கப் பட்டனர். 1918 ஏப்ரலில் நூற்றுக் கணக்கான அராஜகவாதிகள் கைது செய்யப் பட்டனர். இவர்கள் போல்ஷவிசம் ஒரு புதிய அடக்குமுறை என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்கள். அதே வருடம்தான் லெனின் மீதும் இனந்தெரியாத நபரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டது. பிரெஸ்ட் - லிடொவ்ஸ்க் ஒப்பந்தத்தால் ஆத்திரமடைந்த சோஷலிச புரட்சிவாதிகள் ரஷ்யாவிலிருந்த ஜேர்மனியத் தூதுவரைக் கொலை செய்தனர். இந்தக் காலகட்டத்தில் தொழிற் சங்கங்களில் மென்ஷவிக்குகளின் செல்வாக்கே பலம் பெற்றிருந்தது. போல்ஷவிக்குகளுக்கு எதிர்ப்புகள் பல திசைகளிலிருந்து வந்தன. இவற்றை எதிர்ப்பதற்காக Cheka (செக்கா) எனும் அமைப்பை சோவியத் அரசு உருவாக்கியது. இதன் கடமை எதிர்ப் புரட்சியை நசுக்குவதாகும். இந்த அமைப்பே பின்னர் இரகசியப் பொலிசாக மாறியது. பல எதிர்ப் புரட்சிவாதிகளல்லாதோரும் செக்காவின் கடுமையான நடவடிக்கைகளுக்குப் பலியானார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

எதிர்ப் புரட்சியை நசுக்கும் நடைமுறையும் சோவியத் அரசின் ஸ்தாபன பலத்தை வளர்க்கும் நோக்குடன் போல்ஷவிக்குகள் கையாண்ட குறுகிய காலத் திட்டங்களும் அதிகாரத்துவ வாதத்தையும் கட்சிக்கு வெளியே இருந்து வரும் விமர்சனங்களைச் செவிமடுக்காத் தன்மையையும் ஸ்தாபன மயமாக்க உதவின என்று கருத ஆதாரங்கள் உண்டு.

இங்கு மிகவும் அடிப்படையான ஒரு விடயம் தொழிற் சங்கங்கள், தொழிலாளர் முகாமை பற்றியதாகும். புதிய அமைப்பில் தொழிற் சங்கங்களின் அந்தஸ்து என்ன என்ற கேள்வி பிறந்தது. புரட்சியின் ஆரம்ப காலத்தில் தொழிற்சாலை முகாமையில் தொழிலாளர் பங்குபற்றல் விரைவில் சாத்தியமாகும் எனற நம்பிக்கை துளிர்த்தது. புரட்சி அதுவரை மையப்படுத்தப்பட்ட அதிகாரங்களைப் பரவலாக்கும் சக்திகளைக் கட்டவிழ்த்து விட்டது. ஆயினும் அரச நிர்மாணமும் போல்ஷவிக் கட்சியின் பொதுவான கொள்கைகளும் மையப்படுத்தலுக்குச் சாதகமான சூழ்நிலையையே உருவாக்கி வந்தன. இந்தச் சூழ்நிலையில் தொழிற் சங்கங்கள் சுதந்திரமாக இயங்குவதைக் கட்சித தலைமை விரும்பவில்லை. 1918 ஆரம்பத்தில் சகல ரஷ்ய தொழிற் சங்கங்களின் மகாநாட்டில் இதுபற்றி விவாதம் எழுந்தது. மென்ஷவிக்குகளும் ஒரு சில போல்ஷவிக்குகளும் ரஷ்யப் புரட்சி இன்னமும் பூர்ஷ்வா ஜனநாயகக் கட்டத்தின் தேவைகளைப் பூரணமாக்கவில்லை யாதலால் தொழிற் சங்கங்கள் தொடர்ந்தும் சுதந்திரமான ஸ்தாபனங்களாய் இயங்குவது அவசியமென வாதிட்டனர். ஆனால் சினோவியேவ், ட்றொட்ஸ்கி போன்றோர் தொழிற்சங்கங்கள் சோவியத் அரச ஸ்தாபனங்களுக்குள் வாரிப்படுத்த வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருந்தனர். 1919ல் உள்நாட்டு யுத்தம் உச்சக் கட்டத்தில் இருந்தபோது

அ ஆ இ
A AA IE
Postbus 85326/ 3508 A H Utrecht/
Nederland

தாகம்

PO box 3186,
LONDON E17 6TJ
UK

தொழிலாளர்கள் அத்தியாவசிய சேவைகள் செய்வது கட்டாயப்படுத்தப் பட்டது. இந்தக் காலகட்டத்தில் ட்றொட்ஸ்கி லெனினையும்விடத் தீவிரமாகத் தொழிற் சங்கங்களை முற்றாக அரசின் கருவிகளுடன் இணைப்பதை ஆதரித்தார். 1920ல் ட்றொட்ஸ்கி தொழிற் சங்கங்களை மேலும் ஸ்தாபன ரீதியில் தாக்க முற்பட்டபோது லெனின் அதை எதிர்த்தார்.

ஆயினும் 1921ல் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தபோது அந்த யுத்தகாலத்தின் தேவைகளை ஒட்டிய செயற்பாடுகளின் விளைவாக அதிகாரத்தின் மையப்படுத்தல் பலம்பெற்றிருந்தது. சோவியத் பொருளாதாரம் மிகவும் சீரழிந்த நிலையில் இருந்தது. விவசாயிகள் மத்தியிலிருந்து அங்குமிங்கும் எதிர்ப்புகள் எழுந்தன. யுத்தகாலத்தில் அவர்களின் உற்பத்தியில் கணிசமான பங்கு நிர்ப்பந்தமாக அரசினால் எடுக்கப் பட்டது. இப்போ விவசாயிகள் தமது நுகர்வுக்கான உணவை மட்டுமே உற்பத்தி செய்யும் மறைமுகமான எதிர்ப்பினைக் கடைப்பிடிக்க முற்பட்டனர். இது சோவியத் பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகளில் ஒன்றானது. நாட்டுப்புறம் முதலாளித்துவ மாற்றங்களில் இருந்தே பல தசாப்தங்கள் பின்னடைந்திருந்தது. புரட்சியின் பின்வந்த நிலச்சட்டத்தை விவசாயிகள் வரவேற்றனர். அவர்களின் நீண்டகாலக் கனவு நனவாகியது - அந்தக் கனவை கம்யூனிஸ்ட்டுகள் மீண்டும் கனவாக்கி விடுவார்களோ என அவர்கள் பயந்தார்கள். அவர்களைப் பொறுத்தவரை புரட்சி இந்தக் கட்டத்திற்கப்பால் போகக் கூடாது. ரஷ்ய விவசாயிகள் மத்தியில் நிலவும் ஒரு கதையை ஒரு தடவை லெனின் பின்வருமாறு மேற்கோள் காட்டினார். விவசாயிகள் சொல்கிறார்கள்: "நாம் போல்ஷவிக்குகள். ஆனால் கம்யூனிஸ்ட்டுகள் அல்ல; நாம் போல்ஷவிக்குகளை ஆதரிக்கிறோம் ஏனெனில் அவர்கள் நிலப்பிரபுக்களை விரட்டியடித்தார்கள். ஆனால் நாம் கம்யூனிஸட்டுகளை ஆதரிக்கவில்லை ஏனெனில் அவர்கள் தனியுடைமை நிலத்துண்டுகளை எதிர்க்கிறார்கள்."

(வரும்)

## உலகம் சமாதானம் பெறவேண்டும்

இன்றைய பொதுஜனத் தொடர்பு சாதனங்கள் பெரும்பான்மை மக்களுக்கு நன்மை பயக்கின்றனவா என்றால், இல்லை தீமையே பயக்கின்றன என்று துணிந்து கூறுகிறார் மாட்டின் லூதர் கிங்கின் மனைவி கொறேற்றா கிங் (Coretta king). உலகின் அரசுகள் வன்முறைக்கு மூடுவிழா நடத்தாவிடில் கடைசியில் உலகமே இந்த வன்முறைக்குப் பலியாக நேரிடும் என அவர் எச்சரித்துள்ளார். சினிமாவும் தொலைக்காட்சியும் வன்முறையை இலகுவாக்கி விடுவதுடன் பொதுமக்கள் மனதில் அதைப் பதியவும் வைக்கின்றன. வீடியோத் தயாரிப்பாளர்களும், ஆயுதத் தயாரிப்பாளர்களும், குழந்தைகட்கான விளையாட்டுப் பொருட் தயாரிப்பாளர்களும் வன்முறையைத் தூண்டுவதில் ஈடுபட்டுள்ளனர் எனத் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார் கிங்.

– ஜோய் –

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாற்சந்தி

நாற்சந்திக்கு எழுதும் வாசகர்கள் ஏனைய வாசகர்களது உணர்வுகட்கும் மதிப்பளித்து, அவர்கட்கும் பயன்தரக்கூடிய விடயங்களை எழுதுவது நல்லது. நாகரிகமான முறையில் சுருக்கமாக உங்கள் கருத்துகளை எழுதுவது நல்லது. தனிப்பட்ட வசைபாடல்களைச் சுமந்துவரும் கடிதங்களைப் பிரசுரிப்பது வாசகர்கட்கு எதுவிதத்திலும் பயனற்றது என்பதைக் கவனத்தில் எடுங்கள்.

– சுவடுகள் –

ஆசிரியர்,
சுவடுகள்.

சுவடுகளின் பிரதிகள் கிடைத்தன. மிக்க நன்றி.

இன்று புலம்பெயர்ந்துவாழும் ஈழத்தமிழர்களின் இலக்கியப் பங்களிப்புகள் என்றுமில்லாதவாறு பன்முகப்பட்டவையாக இருப்பதைக் காண மகிழ்ச்சியாக இருக்கிறது. இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு நிர்ப்பந்தம் காரணமாக வெளியேறியது ஒருவகையில் நன்மை பயப்பதாகத் தெரிகிறது. வெளிநாடுகளில் இருக்கும்பொழுதுதான் எமது தாய்மொழியான தமிழின் பெருமையை உணரமுடிகிறது. இதன் பிரகாரம் இதனைக் கட்டியெழுப்புவதற்காக இன்று பல்வேறு நாடுகளிலும் வெவ்வேறு விதமான வகையில் எழுத்தாக்கங்கள் வெளிவருகின்றன. இது வரவேற்கக்கூடியதொன்று.

எம்மனச்சுமைகளை, பாரங்களை வெளிக்கொணர இவை பெரிதும் உதவுகின்றன. தமிழ்மக்கள் இன்றுபடும் இன்னல்கள் சொல்லில் அடங்கா. என்செய்வது தமிழராகப் பிறந்தது ஒரு சாபக்கேடு போலத் தோன்றுகிறது. இருப்பினும் எதையும் தாங்கும் இதயத்தை ஆண்டவன் அவர்களுக்கு அளித்துள்ளான். அதனாற்தான் இவ்வளவு மனச்சோர்வுகளுடனும் தமது கருத்தோவியங்களை வெளிக்கொணர்கின்றனர்.

தங்களது சேவை போற்றற்குரியது. தொடர்ந்து இதில் வெற்றிபெற எமது வாழ்த்துகள்.

கலாநிதி வே.இ.பாக்கியநாதன்,
அவுஸ்திரேலியா.

சுவடுகள் ஆசிரியர் குழுவுக்கு,

ஒரு வாசகன் என்ற ரீதியிலும், சுவடுகளின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவன் என்ற ரீதியிலும் இதழ் 53இல் வெளியான 'ஒஸ்லோ நிகழ்வுகள்' என்ற கண்ணனின் விமர்சனம் பற்றிய எனது பார்வையை வாசகர்கள் முன் வைக்க விரும்புகின்றேன். கண்ணன் குறிப்பிட்ட "மாவீரர் நாள்", 'ஒளிவிழா' இரு நிகழ்வுகளுள் "ஒளிவிழா"வை மட்டும் பார்க்க எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததால் அந்த நிகழ்ச்சி பற்றிய எனது பார்வையை சமர்ப்பிக்கலாம் என்று எண்ணுகின்றேன்.

www.tamilarangam.net

விமர்சனம் என்பது சில நிகழ்வுகளைச் சாடுவதற்காக மட்டும் அமைந்துவிடக் கூடாது. எமது புலப்பெயர்வு வாழ்வில், அன்றாடப் பிரச்சனைகள் பலவற்றுக்கும் மத்தியில் கலைத்துறையில் சளைக்காது பங்களிப்பவர்களது தொகை விரல்விட்டு எண்ணுமளவே உள்ளது. 'ஒளிவிழா', சில பிசிறுகள் இருப்பினும் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் நடாத்தப்பட்ட ஒரு சிறப்பான நிகழ்ச்சி என்பது எனது அபிப்பிராயம். இந்நாட்டில் வாழ்கின்ற எல்லாக் கலைஞர்களுமே முதிர்ச்சியடைந்த கலைஞர்களோ அல்லது முழுமையாகப் பாண்டித்தியம் பெற்றவர்களோ அல்லர். ஆனால் அவர்களது அயராத முயற்சியும், அதன் பெறுபேறாய் அமையும் நிகழ்ச்சிகளும் முன்வந்து பாராட்டுதற்குரிய அம்சம் என்றே கருதுகின்றேன். அந்த வகையில் ஒளிவிழாவின் ஆரம்பத்தில் இடம்பெற்ற சிறுவர் பாடல்கள் ஒரு அழகான நிகழ்ச்சி. சிறந்த பயிற்சியின்மை தென்பட்டிருப்பினும் அச்சிறார்களை ஊக்குவிக்கும் முறையில் அமைந்த அந்நிகழ்ச்சி மிகவும் பாராட்டுதற்குரியது. அடுத்து 'புகலிடந் தேடியே' என்ற நாட்டிய நாடகம். நாட்டிய நாடகம் பற்றிய முழுமையான பரிச்சயம் எனக்கு இல்லாவிடினும் ஒரு நாட்டிய நாடகத்தில் பங்கெடுத்தவன் என்ற ரீதியில் அதுபற்றிய ஒரு சிறு விமர்சனத்தை வைக்கலாம் என எண்ணுகின்றேன். நாட்டிய நாடகம் நாட்டியத்தை முதன்மைப் படுத்தியதாக அமையினும் அதன் கரு பார்வையாளர்களுக்குத் தெளிவாகப் புரிவது அவசியம். அந்த வகையில் பாடல்களைப் பாடியவர்களது குரல்கள் மேலும் தெளிவாக்கப் பட்டிருக்கலாம். நிகழ்ச்சியின் ஒலியமைப்பு சீரில்லாமல் இருந்ததும் இதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம். தவிர, மாலதியின் நாட்டியத் திறனும் பரிச்சயமும் சிறுமிகளுக்கூடாக மேடையில் பிரதிபலித்தது. ஒஸ்லோவில் நான் பார்த்த நாட்டிய நாடக நிகழ்வுகளுள் இதுவும் மனதில் ஓர் இடத்தைப் பிடித்தது. சிறுமிகள், நடன ஆசிரியை, பாடல்களை இசையமைத்துப் பாடியவர்கள், பக்கவாத்தியக் காரர்கள் அனைவரையும் பாராட்டத்தான் வேண்டும். ஒட்டுமொத்தமாக எந்தவொரு நிகழ்ச்சியும் எல்லோரையும் திருப்திப் படுத்துவதில்லை. தவறுகள் இடம்பெறத்தான் செய்யும். ஆனால் அத்தவறுகளை பலகோணங்களில் வைத்துப் பார்த்தல் அவசியம் என்றே கருதுகின்றேன்.

அடுத்து இடம்பெற்ற நாடகமான 'பேதங்கள் இல்லையடி பாப்பா', கண்ணன் குறிப்பிட்டதைப்போல் ஒரு மர்ம நாடகந்தான். எனினும் நாடகத்தில் பங்கேற்று நடித்தவர்களதும் நாடகத்தைத் தயாரித்தவரதும் முயற்சி வரவேற்கப்பட வேண்டியதே. பல திறமைகளை ஒளித்து வைத்துக்கொண்டு இன்னொருவன் செய்யும் நிகழ்ச்சிகளை விமர்சித்துக் கொண்டு மட்டும் வாழ்கின்ற சில சோம்பேறிக் கூட்டங்களுள் இவ்விளைஞர்கள் உயர்வாகவே தென்படுகின்றனர். ஆனால் நாடகங்கள் விகடத்துக்குரிய ஒன்றாகவும், புரியாத ஒன்றாகவும் இருப்பதைத் தவிர்த்து ஆரோக்கியமானதாக அமையவேண்டியது இன்றைய எமது சமுதாயத்துக்குத் தேவையான ஒன்றாகின்றது.

அடுத்து "குட்டிமாஸ்டரின் வெண்பனிச்சிந்து" இசைநிகழ்ச்சி. இதை 'குட்டிமாஸ்டரின்' என்பதைத் தவிர்த்து 'The Roots'இன் என்று குறிப்பிட்டிருக்கலாம் கண்ணன். Rootsஇல் திறமையான, முயற்சிமிக்க, ஆர்வமுள்ள கலைஞர்கள் உள்ளனர் என்பது வெளிப்படை. ஆனால் அவர்களது நிகழ்ச்சிகள் வெறும் தென்னிந்தியச் சினிமாவின் பிரதிபலிப்புகளாக அமைந்துவிடுவது வேதனைக்குரியதே. வெண்பனிச் சிந்துவில் ஏற்பட்ட ஒலிச்சீரின்மையும், வாத்தியங்களது பிசிறுபட்ட சேர்க்கைகளும், 'எலெக்ரோனிக் கீபோட்'களின் ஆதிக்கமும் சினிமாப் பாடல்கள் என்றாலும் அவற்றையும் சோடைபோகச் செய்துவிட்டன. ஒலி,

ஒளியைப் பொறுத்தவரை நாம் கற்பதற்கு அதிகவிடயங்கள் உண்டு. குறைந்த பட்சம் அவற்றில் கவனம் எடுப்பதையும், எமது கலைஞர்கள், கவிஞர்களைத் தூண்டும் வகையிலும் சமுதாயத்துக்குப் பயன்தரும் கருத்துகள் அமைந்த பாடல்களை உருவாக்கி வெளிக்கொணர்வதிலும் Roots அக்கறையெடுத்தல் அவசியம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். கண்ணன் விமர்சித்தது போல் குட்டி மாஸ்டரை மட்டும் விமர்சிப்பது அழகல்ல. Roots என்பது ஒரு கூட்டுமுயற்சியின் பெறுபேறு. குட்டியின் திறமைகள் வெறும் சினிமாவுக்குள் அடங்கிப் போவது எனது தனிப்பட்ட விருப்பல்ல எனினும் கலைத்துறையில் அவரது கடந்த வருடங்களின் பங்களிப்பு மறக்கமுடியாத ஒன்றே. ஒவ்வொரு நிகழ்ச்சியும் பல சிரமங்களுக்கு மத்தியிலேயே நிறைவேற்றப் படுகின்றன. அந்த வகையில் ஒளிவிழாவும் ஒன்று என்றே கருதுகின்றேன்.

பல பிழைகள்- சில சரிகள் அல்லது சில பிழைகள்- பல சரிகள் என்பதை விடுத்து மொத்தத்தில் இங்கு வாழும் எம்மவர்களது முயற்சியில் உருவாக்கம் பெற்ற நல்ல நிகழ்ச்சிகள் என்று மட்டும் தெரிவித்துக் கொண்டு, சுவடுகள் ஆசிரியர் குழுவுக்கு ஒருசில அறிவுரைகள்:-

ஒரு கட்டுரை என்பது வேறு, ஒரு வாசகனின் விமர்சனக் கடிதம் என்பது வேறு.

* கட்டுரைகளை நீங்கள் பிரசுரிக்கும்போது, அதுபற்றிய உங்களது பார்வையை வைத்தல் அவசியம் என்றே கருதுகின்றேன்.

* சமுதாயத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு உழைக்கும் உங்களைப் போன்றவர்கள், நோர்வேயில் ஒருசில கலைஞர்களால் வெளிக்கொணரப்படும் கலைநிகழ்ச்சிகளை அல்லது வேறு நிகழ்ச்சிகளை நேரடியாகப் பார்க்குமிடத்து அது பற்றிய, அவை பற்றிய உங்களது ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் முன்வையுங்கள். அப்போதுதான் சுவடுகள் பற்றிய பார்வை வாசகர்களுக்குத் தெரியும்; உங்கள் பற்றிய நம்பிக்கையும் வளரும்.

மொத்தத்தில் இவ்விமர்சனம் எனது தனிப்பட்ட விமர்சனம். இதில் சரி, பிழைகள் இருக்கலாம். ஒஸ்லோவில் கலைநிகழ்ச்சிகளில் ஈடுபட்டவன் என்ற ரீதியிலும் அதிலுள்ள பழுக்கள், சரிகள், பிழைகள் என்பவற்றை அனுபவித்தவன் என்ற ரீதியிலும் இவ்விமர்சனத்தை முன்வைத்துள்ளேன். எனது விமர்சனம் பற்றிய வாசகர்களது கருத்துகளையும் எதிர்பார்க்கின்றேன்.

நன்றி!

வே.இரவிகுமார்

Oslo

ஆசிரியர்,
சுவடுகள்.

தங்களின் 52வது இதழை இரவல் பெற்று வாசித்தேன். ஈழத்து முஸ்லிம் கவிஞர் சிறப்பிதழாக வெளிவந்திருப்பது பாராட்டப்பட வேண்டிய அம்சம். ஈழத்துக் கவிதைகளுக்கு சுவடுகள் மேலும் உரம்போடுவது தெளிவாகவே தெரிகிறது.

● அப்பார்,
இலங்கை.

ஆசிரியர்,
சுவடுகள்.

சுவடுகள் 52வது இதழ் கிடைத்தது. பிரித்தவுடன் மடலொன்று, வாசித்தவுடன் எத்தனையோ மன உணர்வுகள். சுவடுகள் இத்தனை காலமும் எத்தனையோ இடர்களைத் தாண்டி 52வது மைல் கல்லில் நின்றுகொண்டு பெருமூச்சு விடுவதாய் என் எண்ணத்தில் பட்டது. உண்மையிலேயே சுவடுகள் மாத்திரமல்ல, ஒரு பத்திரிகை வெளியீடு என்பது பிரசவம் போன்றதே. அது பத்திரிகை வெளியீட்டாளர்களைக் கேட்டால் விளங்கும்.

இவ்வளவு கஷ்டத்திற்கு மத்தியில் சுவடுகள் தன் இருப்பை உறுதி செய்துகொள்வதானது அதன் ஆசிரிய பீடத்தின் விடாமுயற்சியாலும் சிரமங்களாலும் என்பது தெட்டத்தெளிவு.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பெரும் பணச் செலவின் மூலமாக இலங்கை இந்தியாவுக்கு இலவசமாகவே சுவடுகளின் அனுப்புதல் பெரும் கஷ்டமான காரியமே. இருந்தும் சுவடுகளின் பரப்புதலில் இலங்கை இந்திய வாசகர்கள் அதிகம் பயனடைவார்கள் என்ற பெரும் நன்மதிப்புடனும் சுவடுகளின் கஷ்டமெல்லாம் எமது தாய்மண்ணை நினைவிருத்திச் செய்யப் படுவதாலும் நாமே வழிநடத்தும் பாங்கிலும் ஆதரவு கொடுக்கும் பாங்கிலும் முன்னிற்கவேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

புதிய வருடம், புதிய பாதை – இருப்பினும் எமது நிலைப்பாடு இன்னும் இறுக்கப் பட்டதாகவே இருக்கிறது. சாவகச்சேரியை நோக்கிய குண்டுவீச்சுகள் என்று இன்னும் மனிதர்மீது அனியாயமாகச் சாவுகள் சுமத்தப்படுகின்றன. உரிமைமீறல் என்பது புதிதாய் ஒன்றுமில்லை. 1994உம் அதனையே மந்திரமாய்க் கொண்டது. இந்நிலையில் தயவுடன் சுவடுகள் குழுவினர்க்கு என் அன்பான வேண்டுகோள். சுவடுகளை நிறுத்திவிடாதீர்கள். அதன் சேவை ஈழத்திற்கு இன்னும் தேவை.

கணனியின் மூலமான எழுத்து வடிவங்கள் அருமையாக இருந்தன. சுவடுகள் 52 மனதிற்குப் பூரண திருப்தி அளித்தது.

● இளைய அப்துல்லாஹ்,
இலங்கை.

## சரிநிகர்

புதிய முகவரியில் இருந்து இருவார இதழாக வெளிவருகிறது சரிநிகர். வருட சந்தா 30 (அமெரிக்க) டொலர்கள்.

தொடர்புகள்: 4, ஜெயரட்ண அவெனியூ,/ திம்பிரிகஸ்காய,/ கொழும்பு 5.

## சோலைக்கிளியின் ஆணிவேர் அறுந்த நான்

சோலைக்கிளியின் நான்காவது கவிதைத் தொகுதியான 'ஆணிவேர் அறுந்த நான்' ஆசியா வெளியீடாக வந்துள்ளது. விலை 25 பிரெஞ்சு பிராங்குகள். தொடர்புகள்:
ASSEAY,/ 3, Alle Paul Leautaud,/ 95200 Sarcelles/ France.

சுவடுகள் ஆசிரியருக்கு,


கடந்த மார்கழி–தை சுவடுகளில் 'கண்ணன்' என்ற புனைபெயரில் நண்பர் ஒருவர் எழுதிய விமர்சனம் வாசித்தேன். இதனை வாசித்த பலர் என்னுடன் தொடர்புகொண்டு "சபையில் எல்லோருக்கும் விளங்கிய, புரிந்த பாடல்கள் ஏன் கண்ணனுக்கும் ஒரு சிலருக்கும் விளங்காமல் போனது?" என வினவினர்.

..... கண்ணன் தனது நண்பர்களுடன் ஓயாமல் கதைத்துக்கொண்டே இருந்ததாக சிலர் (இவர்கட்குப் பின்வரிசையில் இருந்தவர்களும், இதனைக் கண்ணுற்ற ஏனையோரும்) கூறினார்கள்.

இந்நாட்டிய நாடகம் (புகலிடம் தேடியே) யேசுநாதரின் பிறப்பு வைபவமான ஒளிவிழாவில் இடம்பெற்றது. யேசுநாதரின் வரலாற்றை, ஏரோது மன்னனின் கொடுமையால் யேசுநாதர் (ஆண்டவன்) இளம் வயதிலேயே அகதியானதைக் கலைநயத்துடன் மிகைப்படுத்தி தமிழரின் சமகாலத்தைத் தொட்டதே நாடகப் பிரதியின் பலமும் சிறப்புமாகும். 'புகலிடம் தேடியே' 'அகதி' போன்ற சொற்கள் ஈழத்தமிழருக்கு மட்டும் சொந்தமானதல்ல! மேலும் கண்ணனுக்கு கிறிஸ்தவ விழாவில் யேசுநாதர் பற்றிய இந்த நாட்டியநாடகம் மேடையேற்றப் பட்டமை ஏன் ஏமாற்றத்தைத் தந்தது? குடும்பச் சுமைகளின் மத்தியிலும் பெண்கள்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(மாலதி, வாசுகி) நெறிப்படுத்தி, இசை அமைத்து அளித்த நாட்டிய நாடகத்தின் சிறப்புகள் கண்ணில் படாமல் போனது ஏன்? தமிழ் சமுதாயத்தின் ஆண் ஆதிக்கப் போக்கே, இங்கும் மேலோங்கி நிற்கிறதா?

இதுவரை காலமும் எந்தத் தமிழ் மேடையின் நடன நிகழ்ச்சிகளாயினும் சரி (ஓரிரு நிகழ்ச்சிகளைத் தவிர) யாவும் ஒலிப்பதிவு நாடாக்களின் துணையுடனே நடத்தப் பெற்றன. இவ்வாறில்லாமல் இந்த நாட்டிய நாடகம் வயலின், மிருதங்கம், பாட்டு, நட்டுவாங்கம் என்ற உயிர்த் துடிப்புடனும் பங்கேற்ற வளரும் கலைஞர்கள் பாவரசம் ததும்ப நன்றாக நடனமாடியதையும் எவராலும் (கலை உணர்வு உள்ளவர்களுக்கு) இலகுவில் மறக்கமுடியாது.

'சப்புடு' எனும் நினைப்பில் விமர்சனம் எழுதிய கண்ணன் பரதநாட்டியம், நாட்டிய நாடகம், கூத்து, விலாசம், கர்நாடக சங்கீதம், மெல்லிசை பாணி என்பவற்றின் அடிப்படை வேறுபாடுகளையாவது அறிந்துகொண்டு விமர்சனம் எழுத முனைந்திருக்கலாம்.

நிருத்தம் (ரஸபாவம் இன்றிய தாளலயம்), நிருத்தியம் (ரஸபாவங்களுடன் கூடிய அபிநயம்) இவ்விரண்டையும் முதன்மைப் படுத்துவதே 'பரதநாட்டியம்' ஆகும். இவ்விரண்டினூடாக ஓர் கதையை அல்லது ஓர் சம்பவத்தை வெளிப் படுத்துவதே 'நாட்டிய நாடகம்' ஆகும். கர்நாடக இசையே பரதநாட்டியத்தின் அடிப்படை இசையாகும். எனவே நாட்டிய நாடகத்தில் மெல்லிசைக்கோ, டிஸ்கோ நடனத்திற்கோ இடமில்லை என்பதனைக் கண்ணனுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

எனவே 'புகலிடம் தேடியே' எனும் நாட்டிய நாடகத்தை மீண்டும் ஓர்முறை வீடியோ பிரதியில் பார்த்துவிட்டு கண்ணன் பதில் எழுதினால் நன்றாக இருக்கும் என்பது பலரது அபிப்பிராயம்! (எனதும்கூட)

அன்புடன்,

● வாசுகி ஜெயபாலன்.

*அன்பான விமர்சகர் கண்ணன் அவர்கட்கு,*

*சென்ற மாத சுவடுகள் (issue nr53) மாதாந்த இதழ் கண்டேன். Oslo நிகழ்வுகள் என்ற தலைப்பின்கீழ் உங்கள் விமர்சனம் (?!) கண்டேன்.*

*ஓரிடத்தில் (யாழ்தேவி பற்றிக் குறிப்பிடுகையில்) "நாடகமுயற்சிகள் வெற்றிகளையும் தோல்விகளையும் பாராட்டுதல்களையும் விமர்சனங்களையும் பெறுகின்றன" என்று குறிப்பிட்டு, விமர்சனம் என்றால் தோல்வி (negative) சம்பந்தமாகக் கூறுவது என்று ஆரம்பத்திலேயே தடம்புரண்டு விட்டீர்கள்.*

*நண்பரே விமர்சனம் என்பது குறைநிறைகளை (சமநிலையில் நின்று) ஒரு கலைஞனையோ, ஒரு குறிப்பிட்ட நபரையோ ஊக்குவிக்கும் நாகரிகமான சொற்றொடர்களால் எழுதப்படுவது.*

*உங்களுக்கு அதில் பங்குபற்றிய கலைஞர்களைத் தெரிந்திருக்கலாம் என்பதற்காக அவர்களுக்கு மாத்திரம் எழுதுவது போன்று எழுதியுள்ளீர்கள். இதனை வாசிக்கும் (விமர்சிக்கப் படுகிறவர்களைத் தெரியாத) வாசகர்கள் குழம்பிவிடுவார்கள் (விட்டார்கள்).*

*முக்கியமாக ஒளிவிழா விமர்சனம் பற்றி இங்கு கட்டாயம் குறிப்பிட்டே ஆகவேண்டும். அதாவது மாவீரர் விழா நடந்த அதே hallஇல் அதுவும் ஒருமாத இடைவெளியில் நடந்தபடியால் இதுவும் (ஒளிவிழாவும்) ஒரு புரட்சிகரமாக (?!!) அமையவேண்டுமென்று அத்துடன்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறீர்கள். அங்கு (ஒளிவிழாவில்) புரட்சி (?!!) இல்லாததால் அவ்வளவு நிகழ்ச்சியும் உங்கள் கண்களில் நன்றாகப் படவில்லை. உதாரணமாக 'புகலிடம் தேடியே' என்ற தலைப்பில் அமைந்த நாட்டிய நாடகம் உங்களைத் தவிர்ந்த அனைவருக்கும் மிகத் தெட்டத் தெளிவாக விளங்கியுள்ளது. நிகழ்ச்சிகள் முடிவடைந்தவுடன் அங்கு மேடைக்கு வந்து பாராட்டிய ஒருவர் 'யேசுபிரானையும், சமகாலப் பிரச்சனையுடன் நல்ல அழகாக ஒப்பிட்டுள்ளீர்கள்' என்று கூறினார்.

'பேதங்கள் இல்லையடி பாப்பா' என்கிற நாடக விமர்சனத்திலும் பெரிய பிழை விட்டுவிட்டீர்கள். இங்கும் அந்த வளர்ந்துவரும் கலைஞர்களையும் பாலேந்திரா, தாஸீஸியஸ் போன்ற பெரிய கலைஞர்களோடு ஒப்பிட்ட தொனியில் எழுதியுள்ளீர்கள்.

அந்த வளர்ந்துவரும் கலைஞர்களை ஊக்குவிக்கு முகமாக எழுதியிருந்தால் அவர்கள் சந்தோஷப் பட்டிருப்பார்கள். அந்த உத்வேகத்தில் அடுத்த முயற்சியை நன்றாகச் செய்ய யோசித்திருப்பார்கள். ஆனால் உங்கள் விமர்சனத்துக்குப் பின் அவர்கள் அந்த நாடக முயற்சியை விட்டுவிடுவார்களோ என்று அச்சம் கொள்ள வேண்டியிருக்கிறது.

அடுத்து குட்டி மாஸ்ரரின் நிகழ்ச்சியினைக் கூறும்போது உங்களுக்கு இந்தியத் திரைப்படங்களைப் பாடுவதனால் அல்லது அதனை வாசித்தால் அது இசையே அல்ல, அல்லது இசையையே பாதிக்கும் என்ற தொனியில் (தனது ஆற்றலை நாசப்படுத்தியே தீருவது) எழுதியுள்ளீர்கள். அப்போ 'இசைஞானி' என்ற (பல ஆயிரம் பாடல்களை உருவாக்கிய) இளையராஜாவின் பட்டத்துக்கு உங்கள் விமர்சனக் கண்ணோட்டத்தில் ஒரு 'தூஷணை' (?!) வார்த்தையாக இருக்கலாமோ என்று வெட்கப்படுகிறேன்.

தயவுசெய்து இனிமேலும் விமர்சனம் எழுதுவதாக இருந்தால் அந்தந்தத் துறையில் கொஞ்சமாவது தெரிந்துகொண்டு எழுதினால் நல்லது. அல்லது 'சுவடுகள் விமர்சனக் குழு' என்ற ஒன்றை உருவகித்து அதன்கீழ் இயங்குங்கள். வரவேற்கிறோம்.

இப்படிக்கு,
சுதேசி
Oslo

ஆசிரியர்,
சுவடுகள்

சமர் கடிதம் கண்டேன். வழமைபோலவே பாமரத் தனமான தர்க்கமும், வசையும் நிறைந்ததாக, பங்களிப் பற்றதாக அமைந்திருந்தது. அவருடைய கடிதத்திற்குப் பதில் எழுதுகிற நிலைக்கு இறங்கிவருவது இதுவே முதலும் கடைசியுமாகும்.

நான் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தோடு சம்பந்தப் பட்டிருந்தது பற்றி வக்கிரமாக எழுதியிருந்தார். எனது வாழ்வு திறந்த புத்தகமாக இருக்கிறதில் புகழ்ச்சியாகவோ, இகழ்ச்சியாகவோ யாரும் புதிதாக எதையும் சொல்லுவது சாத்தியமில்லை.

ஆரம்பத்திலிருந்தே தலைமை பற்றி கடுமையான விமர்சனங்களுடன் இருந்ததில் கழகத்தின் உள்வட்டத்தில் நான் அனுமதிக்கப் பட்டதே இல்லை. கழகத்தின் வெளிவட்டத்தில்கூட எனது காலம் குறுகியதாகவும் நெருக்கடி மிகுந்ததாகவுமே இருந்தது. எனினும் 1986களின்முன் வடக்கு கிழக்கு மாகாண மக்கள் மட்டத்தில் பரந்துபட்ட இளைஞர்களது பங்குபற்றுதலைக் கொண்டதாகவும், முஸ்லிம் இளைஞர்களுடன் சம்பந்தப் பட்டதாகவும்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கழகத்தின் கீழ்மட்டம் இருந்தது. நான் இந்தப் பரந்துபட்ட தளத்தின் சார்பான நிலைபாடே எடுத்திருந்தேன். 1985-86களில் இந்த ஆரோக்கியமான சக்திகள் இயக்கத்தைவிட்டு வெளியேறி அகதிகளாக உலகெங்கும் சிதறிவிட்டனர். நான் அந்த இளைஞர் சக்திகளுடனும் போராட்டத்துடனும் சம்பந்தப்பட்டிருந்தது பற்றி இன்றும் பெருமையடைகிறேன்.

தலைமையின் கொலைக் கரங்களில் இருந்து என்னை அவர்களே பாதுகாத்தனர். ஒருதடவை எனது பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு கழகத்தின் வன்னிக்கிளைகள் கிளர்ச்சி செய்தன. நான் இன்றும் எனது எழுத்துகளில் பரந்துபட்ட தமிழ் முஸ்லிம் மக்கள் சார்பான மேற்படி இளைஞர்களது கனவுகளையே பிரதிநிதித்துவப்படுத்துகிறேன்.

ஊரார் பணத்தையும் இயக்கத்தையும் கொள்ளையடித்ததையும் மட்டுமே தனது சாதனையாக சொல்லக்கூடிய ஒருவரைப் பற்றி, கொள்ளைப்பணத்தில் பூர்சுவா சீதணம் கொடுத்தது, உறவினர்களை மேல்நாடுகளுக்கு அனுப்பியதை மட்டுமே தனது செயல்பாடுகளாக சொல்லக்கூடிய ஒருவரைப் பற்றி இனியும் நான் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

நயாகரனுக்கு (சமர்) எனது ஆலோசனை இதுதான். இனியாவது மாக்சிச அடிப்படைகள், அரசியல் சமூக பொருளாதார வரலாறு என்பவற்றை பொறுமையுடன் கற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

நன்றி.

● ஜெயபாலன்.

# தமிழுக்கெனத் தனியொரு பள்ளி

தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகள் அனைத்தும் பெரும்பாலும் ஆங்கிலமயமாகிவிட்டன. வரலாறு, புவியியல், விஞ்ஞானம், கணிதம் என்று அனைத்துமே ஆங்கிலம் வாயிலாக கற்பிக்கப் படுகிறது. பெயரளவுக்கு தமிழ்ப் பாடம் ஒரு 'சப்செப்ட்'ாக மட்டுமே வைக்கப் பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றி, அனைத்துமே தமிழில் கற்பிக்கப்பட வேண்டும் என்ற சூழலைக் கொண்டுவருவது அப்படியொன்றும் எளிதல்ல. இருந்தும் இதற்கான முயற்சியில் வெற்றி பெற்று வருகிறது தாய்த் தமிழ் தொடக்கப் பள்ளி. சென்னையில் கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட இந்தப் பள்ளி இப்பொழுது இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. மழலையர் வகுப்பிலிருந்து தமிழ் மூலமாகவே பாடங்கள் கற்பிக்கப்பட்டுவரும் இந்தப் பள்ளியைத் தமிழ்நாடு முழுவதும் தொடங்குவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்கள். தியாகு தலைமையிலான இடதுசாரி மற்றும் தமிழ் தேசிய சிந்தனையாளர்கள். இதற்குத் தமிழ் உணர்வுள்ள அனைவரிடம் இருந்தும் உதவிகளை எதிர்பார்க்கிறார்கள். நீங்கள் கொடுக்கின்ற சிறுநிதியும் சரியான வகையில் தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படும். தொடர்பு கொள்ள விரும்புவோர், தியாகு, தாய்த்தமிழ் தொடக்கப் பள்ளி ஒருங்கிணைப்பாளர், 14 முருகப்ப ரெட்டி தெரு, வெங்கடாபுரம், அம்பத்தூர், சென்னை - 53 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

0 அதியமான்

www.tamilarangam.net

## விலகும் தொலைவில்

பேசலாமா!
வேண்டாமா!
நிலைகொள்ளாதாம்
தராசுமுள்.

வணக்கம்
நான்தான்.

புருவநெறிவினுள்
சிக்குண்டு விடுபட
ஒரு கணந்தானானாலும்
வறுத்தெடுத்த
வதைதான்
அப்பாடா....!

அலைந்த வெளியில்
என் விழிவீச்சை
முறித்துச் சென்ற
ஒரு புள்ளி.

மீள
எதிரெதிராய்
நீள்சுற்று வீதியில்
கனி!!பாது வதங்கிய காயாய்....

சுருங்கிய குழிக்குள்
கூர் மழுங்கிய
விழி.
பார்வையில் கசிகின்றது
சொல் அறுத்த
காதல்
இக்கணமும்.

உதிர்கின்றன
பூக்கள்
கட்டுக்குலையாச்
சிரிப்பில்
இன்னுந்தான்.

எரிந்த
கனவு மேட்டில்
பூக்கின்றதா
பட்டிப்பூ?

ஒதுங்கலாமே
நாம்
குடைக்குள்
மழைவிடும்வரையில்.

வேண்டாந்தான்
ஒரே குடைக்குள்
சுருக்கிக் கொள்வதும்
சரிதான்
குடையால் விலகாமல்

தெருவெல்லாம்
தாழ்வாரம்
ஒதுங்கினால்
அங்கே நாம்
நனையலாம்
மழைபொழியும்
அழகில்.

வா...
பேசலாம்
விலகும்
தொலைவிலும்......

கி.பி.அரவிந்தன்
இலையுதிர்காலம்□93
பாரிஸ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்